
# நல்லதோர் வீணையாக விளங்கிய

# பி.வி. கந்தையா



வாழ்க்கை நிகழ்வுத் தொகுப்பு



நல்லதோர் வீணையாக விளங்கிய
அமரர் P.V. கந்தையா அவர்கள்



திருமதி லெட்சுமி கந்தையா



மேதின நிகழ்வின் போது **PVK** தொ.தே.ச. ஆதரவாளர்கள் மத்தியில்



அமரர் திரு. **PVK** ம.மா.ச. உறுப்பினராகத் தெரிவாகிய பின் தோட்டத் தொழிலாளர்கள் வரவேற்கும் காட்சி



P.V.K. குடும்ப நிகழ்வில் - குடும்பத்தாருடன்

# நல்லதோர் வீணையாக விளங்கிய பி.வி. கந்தையா



அமரர் பி.வி. கந்தையா
வாழ்க்கை நிகழ்வுத் தொகுப்பு

வெளியீடு

PVK
குடும்பத்தார்

## நூல் விவரம்

| | |
|---|---|
| நூல் தலைப்பு | : நல்லதோர் வீணையாக விளங்கிய பி.வி.கந்தையா |
| ஆசிரியர் | : தி.இரா.கோபாலன் |
| மொழி | : தமிழ் |
| பதிப்பு ஆண்டு | : 2005 டிசம்பர் |
| பதிப்பு விவரம் | : முதல் பதிப்பு |
| தாளின் தன்மை | : 11.6 கி.கி |
| நூலின் அளவு | : கிரௌன் சைஸ் (12.5 x 18.5 செ.மீ.) |
| அச்சு எழுத்து அளவு | : 11 புள்ளி |
| மொத்த பக்கங்கள் | : xvi + 160 = 176 |
| லேசர் கம்போஸிங் | : சித்ரா அச்சக உலகம் சென்னை - 17 ✆ 24332272 |
| அச்சிட்டோர் | : முருகன் ஆஃப்செட் சென்னை - 600 014 |
| நூல் கட்டுமானம் | : தையல் |
| வெளியிட்டோர் | : PVK குடும்பத்தார் |

# சமர்ப்பணம்

41 வருடங்கள் ஐயாவுடன் அன்பு மனைவியாக நற்பண்புகளுடன் வாழ்ந்து கணவருடனே பூவும் பொட்டுமாக மறைந்து பெருமை சேர்த்த எங்கள் அன்புத் தாயாருக்கு இந்நூல் சமர்ப்பணம்.

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 05 | 05 |
| 12 | 09 |
| 1943 | 2005 |



திருமதி லெட்சுமி கந்தையா

பிள்ளைகள்

பாலேந்திரன் - மகன், லஷ்மி - மருமகள்
மலர்விழி - மகள், செ. இராமன் - மருமகன்
சரவணன் - மகன், சுமதி - மருமகள்
ராஜேந்திரன் - மகன், ஜெயலஷ்மி - மருமகள்
சக்தியேந்திரன் - மகன்
யோகேந்திரன் - மகன்
சாந்தி - மகள், பெ. ஷண்முகநாதன் - மருமகன்
புவனேந்திரன் - மகன்

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| | முகவுரை | vii |
| | அமரர் PVK அறிமுகம் | viii |
| | நினைவுக் குறிப்பு | x |
| | வரலாறு என்பதன் முக்கியத்துவம் | xi |
| | நூல் முகம் | xiii |
| 1. | PVK பிறப்பு, வளர்ப்பு, ஆரம்பக் கல்வி | 1 |
| 2. | சுருக்கக் குறிப்பு | 4 |
| 3. | PVK பிறந்த ஸ்க்லாவத்தை தோட்டம் | 6 |
| 4. | அப்போதைய விளையாட்டு வீரர், இளங்கலைஞர் PVK | 10 |
| 5. | வாசகத்தன்மை | 13 |
| 6. | தொழிற்சங்க வாசல் முதற்பயணம் | 18 |
| 7. | மாத்தளையில் PVK | 24 |
| 8. | கலாச்சாரப் பண்புகள் | 28 |
| 9. | PVK திருமண வாழ்வு | 30 |
| 10. | PVK தொழிலாளர் தேசிய சங்கத்தில்... | 32 |
| 11. | தொழிற்சங்கப்பணிகள் | 33 |
| 12. | வாழ்ந்தவரை வாழ்த்தும் வரியமுதம் | 43 |
| 13. | பணிமனையமுதம் | 46 |

| | | |
|---|---|---|
| 14. | வல்லமை கொள் சமூகமாகி வளமுடனே வாழ்வோமாக | 54 |
| 15. | PVK பற்றி அன்பர்கள் கூறியவை | 56 |
| 16. | தேர்தலில் - மத்திய மாகாண சபையில் | 77 |
| 17. | பொது நிகழ்வுகளில் PVK | 80 |
| 18. | வெளிநாட்டுப் பயணங்களில் PVK | 83 |
| 19. | PVK பங்கு பற்றிய போராட்ட நிகழ்வுகள் | 88 |
| 20. | தொழிற்சங்க கருத்தரங்குகள் உள்ளக அலுவலர்களுடன் | 91 |
| 21. | PVK வாழ்நாட் குறிப்புகள் | 93 |
| 22. | மாவலி, மற்றும் தேசியப் பத்திரிகைகளில்... | 107 |
| 23. | PVK சிறந்த மக்கள் பிரதிநிதி | 120 |
| 24. | PVK குணநலன்கள், பணிகள், தகைமைகள், அர்ப்பணிப்புக்கள் | 123 |
| 25. | PVK குடும்பச் சோலையும், வாழ்க்கை மலர்களும் | 140 |
| 26. | PVK அந்திய காலம் | 156 |
| 27. | நன்றி | 159 |
| 28. | நிறைவுப் பாமாலை | 160 |

# அமரர் வெள்ளசாமி கந்தையா

பொதுச்செயலாளர்: தொழிலாளர் தேசிய சங்கம்

- பிறப்பு - 6.2.1933 — - இறப்பு - 5.10.2005


## வெளியீடு

வெ. கந்தையா குடும்பத்தினர்

41, நர்ஸிங் ஹோம் வீதி, அட்டன்

நெறியாள்கை, தொகுப்பு: தி.இரா.கோபாலன்

உதவி: க. சக்தியேந்திரன்



பதிப்புரிமை

வெ.கந்தையா குடும்பத்தார்



பதிப்பு

## மணிமேகலைப் பிரசுரம்

த.பெ.எண்:1447

7 (ப.எண்:4), தணிகாசலம் சாலை,

தியாகராய நகர், சென்னை-600 017.

தொலைபேசி : 24342926

தொலைநகல் : 0091-44-24346082

மின் அஞ்சல் : manimekalai@eth.net

Website:http://www.tamilvanan.com

2005 டிசம்பர்

# முகவுரை


அமரர் PVKயின் வரலாற்று நிகழ்வுகளைக் கொண்ட இந்த நூலில், தொகுத்து, வெளிப்படுத்திய - நெறியாள்கைக் குட்படுத்தியுள்ள அனைத்து விடயங்களும் உண்மையானவையே. நான் அவரை முதலில் சந்தித்தது 1955ல். நான் மாணவனாக, அவர் பொறுப்பான அலுவலராக.

நாவலப்பிட்டி 50களில் கல்வியும், கலாச்சாரமும், பாரம்பர்யமும், நேர்மையும், சுறுசுறுப்பும் கொண்ட ஆன்மீகம் சூழ்ந்த நகரமாகும்.

அந்தப் புண்ணிய நகரில், புனித கால கட்டத்தில் கால் ஊன்றி தனது வாழ்வுப் பயணத்தை ஆரம்பித்த மனிதருக்கு இடர் பல வந்தாலும், இனிதாக உள் வாங்கி உயரும் பண்புடையவராக வாழ்ந்து நிறைவடைவர்.

அதற்கு உதாரணமாக பலரைக் குறிப்பிடலாம். மேதைகளும், அறிஞர்களும், ஞானிகளும், வாழ்ந்த பூமி என்பதால் PVK அவர்களுக்கும் அறிவு ரீதியான மகரந்தம் தெளிக்கப்பட்டுள்ளது. இந்த நூலில் நான் அவரிடம் பார்த்த அம்சங்கள், அவருடைய மைந்தர் திரு. க. சத்தியேந்திரன் உதவியுடன் பல இடங்களுக்கும் பயணித்து, பல அன்பர்கள், குறிப்பாக அவருடைய வயதைக் கொண்ட அல்லது அவருடன் பணியாற்றிய, அவருக்குக் கீழ் பணியாற்றிய நண்பர்களின் நேர்க்கருத்துகளைக் கொண்டே தயாரித்த வரலாற்று ஆவணம்!

# அமரர் PVK அறிமுகம் (1933-2005)



காரியாலய அறையில் கோவைகளுடன்
மும்முரமான கடமையில்

| | |
|---|---|
| 1933 - | பிறப்பு, ஸ்க்லாவத்தை தோட்டம், தெல்தொட்ட |
| 1943 - | கல்வி, ஸ்க்லாவத்தை தோட்டப் பாடசாலை கலஹா பாடசாலை |
| 1950 | கலஹா பாடசாலை |
| 1952 - 1953 | வீட்டில், தெல்தொட்ட தோட்டம் |
| 1954 - 1964 | தொழில், இ.தொ.கா பணிமனைகள் கலஹா, நாவலப்பிட்டி, அட்டன், மாத்தளை, நுவரெலிய, டிக்கோய |

| | |
|---|---|
| 1964 | திருமணம் |
| 1965 - 1967 | மாநிலப் பிரதிநிதி, அட்டன், மஸ்கெலிய NUW |
| 1968 | தொழிலுறவுச் செயலர். |
| | அட்டன், மஸ்கெலிய, பொகவந்த லாவ, |
| | டிக்கோயா, புளியாவத்தை |
| 1973 - 2001 | பொதுச் செயலாளர், NUW |
| 2001 - 2002 | நிதிச் செயலாளர், NUW |
| 2002- 2005 | தலைவர், NUW (சுவீனமுற்ற காலம்) |
| 5-10-2005 | மறைவு (இறைவனடி) |

# நினைவுக் குறிப்பு

## உலக சிறுவர் தினம் (நினைவுக் குறிப்பு)



சர்வதேச
குழந்தைகள் தின
நிகழ்வில்
ஒரு சிறுவன் பேச்சை
உன்னிப்பாகக்
கேட்கும் PVK ஐயா.

உலகறிந்ததோர் உள்ளத்தின் ஊசிப்பார்வையது
குழந்தை மனத்தின் குறுகுறுப்புத் தோற்றமிது
தலைமுறை இடைவெளியைத் தகர்த்தெறியும்
மலையகத்து மண் வாசனை மணக்க
அலையலையாய்த் தகவல் தரும் கணனியுகத்தினில்
அமரர் PVKயின் ஆவண இதழினிலே அவர்
குமரர்கள் துணையுடனே குறைவின்றிச் சொல்ல வந்தோம்.

# வரலாறு என்பதன் முக்கியத்துவம்

பொது வாழ்வில் ஈடுபட்டு உழைத்து அமரத்துவம் பெறும் மகா மனிதர்கள் பிறக்காத குழந்தைகளுக்கு உரமாகும் வழிகாட்டிகள். அதனால் அவர்களின் வரலாற்று ஆவணங்கள் கோவைப்படுத்தப் படுவது ஒரு தேவையான அம்சம்.

அவர்களின் சிறந்த பக்கம் என்பது தொண்ணூறு வீதமாகவும் இருந்திருக்கலாம் முப்பது வீதமாகவும் இருந்திருக்கலாம். என்றாலும் சிறந்த பக்கம் இருந்தே உள்ளது. அதன் ஆளுமை என்ன என்று ஆராய்ந்து முன்வைப்பது என்பது வெறுமையான தொழில் நுட்பம் என்று ஒதுக்கி விடுவதற்கில்லை. இப்படிப் பல ஆவணங்களைச் சேர்த்துப் பார்த்தால் ஒரு முழுமையான மூத்த சமுகத்தை அண்ணாந்து பார்க்கலாம். அவற்றிலிருந்து தற்போதைய சமூக, பொருளாதார, அரசியல், கல்வி என்ற அம்சங்களுக்கான ஊட்டமுள்ள ஆலோசனைகளைப் பெறலாம்.

இந்த முறைமை அபிவிருத்தி அடைந்த நாடுகளில் நடக்கின்றது. 'ஆவணப்படுத்தல்' என்ற கலாச்சாரம் ஓங்கி வளர்கின்றது.

மலையகத்தில் இத்தகைய செயல்பாட்டுக்கு இதுவரை போதுமான ஊக்கம் கிடைக்கவில்லை.

எழுத்தின் மகிமை இங்கு தெரியவில்லை. அதன் ஆழம் மக்கள் முன்வைக்கப்படாமலில்லை. எதிர்காலத்தில் ஆவண இலக்கியம் வாசித்து உள்வாங்கப்படும் என்பதில் எமக்கு நம்பிக்கைதான்.

நமது கல்விக் கொள்கையும் - வரலாற்று அறிவும் மாணவர்களை அழைத்துச் செல்லும் நிலைப்பாட்டுக்கு வழிவிட வில்லை.

பெரிய பெரிய நூல்களை கைக்குக் கணமாகத் தயாரித்து அவை வாசிக்கப்படாமலே சருகாக மாறுகின்றன. நமது வினைத்திறன் வழியில் விரையம் அதிகம்தான்.

ஆகையால் வாசிக்கப்படக் கூடிய எளிய நடையில் இந்த வரலாற்று நூலைத் தயாரிக்க முனைந்தோம். இந்த முயற்சியின் மூலமாக இன்னும் பல முயற்சிகள் அங்கங்கே துளிர்விட வேண்டும்.

நம்மைச் சுற்றி அச்சுக் கலை தொழில் நுட்பம் அபரிதமாக வந்துவிட்டது. அப்படிப் பதிப்பாகும் பல விடயங்களை பெரியவர்கள், இளைஞர்கள், சிறுவர், சிறுமிகள் என்று வாசித்து வாழ்வைத் தேட வேண்டும் என்ற பணிவான வேண்டுகோளுடன், வரலாற்று வாசலைத் திறக்கின்றோம்.

**- ஆசிரியர்**

# நூல் முகம்

மலையகத்தின் மக்கள் வாழ்விலும், தாழ்விலும் பங்கு கொண்டு தம் அறிவு, அனுபவம், ஆற்றல் ஆகிய நேர்வழிக் குணங்கள் ஊடாக நல்ல வண்ணம் வாழ்ந்தவர்கள் அநேகர்.

அவர்களில் குறிப்பிட்டுச் சொல்வதற்கும், நினைப்பதற்கும், அவர் வாழ்க்கை ஏடுகளைப் புரட்டிப் பார்ப்பதற்கும் தகுதி பெற்ற அமரர்கள் சிலரே. மலையகத்தின் மரபு ரீதியானதொரு அம்சம் இது.

அத்தகையதொரு தொழிற் சங்க, அரசியல், சமூகவியல் என்ற நான்கு பக்கச் சட்டங்களுக்குள் தனக்கென ஓர் முத்திரையைப் பதித்து வாழ்ந்தவர்தான் அமரர் வெள்ளைசாமி கந்தையா அவர்கள்.

அனைத்து மனிதப் பிறவிகளுக்கும் வரலாறு உண்டு. தான் வாழ்ந்த சமூகத்துடன் ஒட்டி உறவாடி பணிசெய்து, பிரச்சினைகளுக்கும் தொல்லைகளுக்கும் முகம் கொடுத்து வாழ்ந்து மறைந்த நண்பர் கந்தையா அவர்களின் வாழ்க்கை என்பது ஓர் அடக்கமான முன் மாதிரிதான்.

1948ம் ஆண்டு சட்டமாகிய இந்திய வம்சாவழித் தோட்ட மக்களுக்கான பிரஜாவுரிமைப் பதிவு என்பது படித்த இளைஞர்களுக்கு சொல்லொணாத துன்பத்தைக் கொடுத்தது, அந்த காலகட்டத்தில் - ஐம்பதுகளிலும் அறுபதுகளிலும் - கல்லூரிகளையும், உயர்தரப் பாடசாலைகளையும் விட்டு

வெளியேறியவர்கள் - தமது எதிர்காலத்தை நினைத்து ஏங்கித் தவித்தவர்கள் தான். ஜே.எஸ்.ஸி. அல்லது எஸ்.எஸ்.ஸி என்று முடித்ததும் பிரஜாவுரிமை இல்லாத மாணவர்கள் முழுமையாகப் பாதிக்கப் படுவார்கள். கிராம சேவகரிடமிருந்து ஒரு கடிதம் பெற்றுக் கொள்ளமுடியாது. இந்த நிலையில் வேலை கிடைப்பது எப்படி? உயர்கல்வி பெறுவது எவ்வாறு? கிடையவே கிடையாது. இப்படியாக எதுவுமே செய்ய முடியாமல் அரைகுறை வாழ்க்கை வாழ்ந்து மறைந்தவர்கள் எத்தனையோ பேர். நூற்றுக்கு பத்துப் பேர் வீதம் தொழிற்சங்கக் காரியாலயங்களில் நுழைந்தார்கள்.

ஐம்பதுகளின் முற்பகுதியில் அநேகமாக படித்த இளைஞர்கட்கு தொழில் கொடுத்து உதவியது இலங்கை இந்திய காங்கிரஸ் என்ற முதற்பெயரிலிருந்து வந்த இலங்கை தொழிலாளர் காங்கிரஸே என்றால் மிகையாது.

அந்த ஒரு வாழ்க்கை வரம்பு நமது வரலாற்று நாயகர் அமரர் வெ. கந்தையாவையும் பற்றியது. அதற்கு அமையவே அவர் 1953ம் ஆண்டு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், பிரதேச பணிமனையில் காலடி எடுத்து வைத்தார். அப்புறம், தொழிற்சங்க வேலைகள், கடிதங்கள் டைப் செய்வது, தொழிலாளர் பிரச்சினைகள் தொடர்பாக மேலதிகாரிகள் இடும் கட்டளைப் பணிகளை நிறைவேற்றுவது, சிறிய வேதனம். தொட்டுத் தொட்டு செலவழிக்க வேண்டிய நெருக்கடியான வாழ்வுதான், பொருளாதாரத்தைப் பொறுத்தவரை.

அந்த கால கட்டத்தில் தொழிற்சங்க காரியாலயங்களில் உத்தியோகம் பார்த்தவர்களை சமூகமும் மதித்து வரவேற்றதில்லை. ஏதோ பத்தொடு பதினொராவது மனிதராக நினைத்து கண்டும் காணாமலும் மக்கள் வாழ்ந்தார்கள். அப்படி சமூகத்தால் அலட்சியப்படுத்தப் பட்டவர்களே, தீர்க்கமான

அறிவுக் கூர்மையுடன் வளர்ந்து பிற்காலத்தில் பொறுப்பு வாய்ந்த தலைமைப் பதவிகளை திறம்பட வகித்தவர்கள் .

அவர்களில் முக்கியமாகக் கருதப்பட்ட, சமுதாயத்தால் ஏற்கப்பட்ட எத்தகைய விளம்பரமும் இல்லாமல் மிக அடக்கமான ஒரு தலைவராகத் திகழ்ந்தார் நண்பர் கந்தையா அவர்கள்.

இவரைப் பற்றி நான் ஆராய முற்பட்ட போது ஒன்று சிறப்பாக விளங்கியது. நீண்ட காலம் தொழிலாளர் தேசிய சங்கத்தின் செயலாளராகப் பணியாற்றியுள்ளார். 28 வருடங்கள். இந்நிலை என்பது செயல் திறனில் அவருக்குள்ளிருந்த பலமான நம்பிக்கை புலப்படுகிறது.

தொழிலாளர் தேசிய சங்கம், அமரர் வி.கே. வெள்ளையன், அமரர் கவிஞர் சி.வி. வேலுப்பிள்ளை அவர்களினால் 1965ஆம் ஆண்டு உருவாக்கி தாபிக்கப்பட்டது. இருவரும் நன்கு படித்தவர்கள். கற்றோர், அறிஞர், கவிஞர் என்ற தலைப்புகளைத் தாங்கி உருவாக்கிய அமைப்பு. அதில் ஒரு பக்குவம். அதனால் பக்குவமானவர்களே அதன் வழித்தலைவர்களானார்கள்.

எல்லாத் தலைவர்களுக்கும் இடையே நீண்ட கால செயலாளர் என்கிற வகையில் அமரர் ஐயா அவர்கள் மிக மென்மையான முறையிலேயே தொழிலாளர் தேசிய சங்கத்தைக் கட்டிக்காத்து முன்னெடுத்து வந்துள்ளார் என்பது புலனாகிறது.

இடதுசாரி, வலதுசாரி என்றில்லாமல் - தோட்டத் தொழிலாளர் என்ற கணிசமான மக்கள் கூட்டத்தை ஒரு மிதவாதப் போக்கில் இட்டுச் சென்ற பெருமை கந்தையா அவர்களை செயலாளராகக் கொண்ட தொழிலாளர் தேசிய சங்கத்தைச் சார்ந்தது. பிரம்மாண்ட தொழிற்சங்கம் என்றில்லாமல், பல வெற்றிகளைக் கண்டோம் என்று சொல்வதற்கின்றி,

நற்பழக்கங்களைக் கொண்டதொரு தொழிலாளர் அமைப்பு என்ற பேரைப் பெற்றுக் கொண்டது. எழுத்தாளர்கள், கவிஞருக்கிடையே ஓர் அறிஞர்! இறக்கும்போது தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவராகப் பொறுப்பேற்று நடத்தி வந்துள்ளார்.

இவரைப் பற்றி ஆய்வு செய்து எழுதவேண்டும் என்ற எனது நிலைப்பாட்டுக்கு ஓர் அழுத்தமான காரணியாக அவருக்குள் இருந்த அம்சம் அவருடைய வாசிப்புத் திறன்.

அவருடைய இல்லத்தில் அவர் சேகரித்து வைத்திருந்த தமிழ் ஆங்கில நூல்கள். அவற்றில் அரசியல், வரலாறு, தத்துவம், ஆன்மீகம், பொது நலம் என்று ஆரோக்கியமான பிரம்மாண்ட நூல்கள் மற்றும் மகான் காந்தி, நேருஜி, இந்திரா காந்தி போன்ற பெரியார்களின் வரலாற்று நூல்களும் அடங்கும்.

அவரும் அவர் பாரியாரும் உயிருடனிருக்கும் போதே என் அன்பு நண்பர் திரு. அ.ஆ. இராஜேந்திரன் அவர்கள் திரு. வெ. கந்தையாவின் புதல்வர்களிடம் (திரு. சத்தியேந்திரன்) என்னை அழைத்துச் சென்று ஐயாவின் வரலாறு ஆய்வு பற்றி கலந்துரையாடினார். இந்த சம்பவமே, இந்த நூலாக்க முயற்சிக்கு வித்திட்டது. அது நடந்து ஆறு மாதங்களில் இருவரும் காலமானது உணர்வு பூர்வ சம்பவமாகும்.

வாழ்க்கை முழுவதும் தனக்குள் ஒரு மிகப்பெரிய வாசகனை வளர்த்து வந்துள்ள ஓர் அறிஞரைப்பற்றி எழுதுவது எனக்குக் கிடைத்துள்ள பாக்கியமே!

# நல்லதோர் வீணையாக விளங்கிய பி.வி.கந்தையா

## 1. PVK பிறப்பு, வளர்ப்பு, ஆரம்பக் கல்வி

**க**ண்டி மாவட்டத்துக்கும் நூரளை மாவட்டத்துக்கும் இடையே அமைந்ததே ஸ்க்லாவத்தை தோட்டம், ஹேவாஹெட்ட பிரதேசத்தில் (கண்டி மாவட்டம்) Eastland Estate என்ற ஆங்கிலப் பெயரைக் கொண்டது.

அந்தத் தோட்டத்தில் வெள்ளைசாமி என்ற தந்தைக்கும், மாகாளி என்ற தாய்க்கும் 6.2.1933ம் ஆண்டு பதினாறாவது மகனாகப் பிறந்தார் (அமரர் PVKபதினேழு பிள்ளைகளில் இவர் பதினாறாவதாகும்). அவர் பிறந்த போது அந்த லயம் (வீட்டுத் தொகுதி) மண் சுவர்களைக் கொண்டது என்று கூறப்பட்டது.10 X10 அடி அறையில், ஒரு சிறிய விறாந்தையுடன்.

தோட்டத்தில் மண் சுவர்களிலான பாடசாலை ஒன்று இருந்துள்ளது. அப்போதைய ஆசிரியர் ஏப்ரஹாம் இவருக்கு கற்பித்தார்.

அந்தப் பாடசாலையில் ஐந்தாம் வகுப்பு வரை கல்வி பயின்றுள்ளார்.

சிறுவர் கந்தையாவே முதல்தர மாணவனாக இருந்துள்ளார் என்பதற்கு ஆதாரம் உள்ளது.

குறிப்பாக. எண், எழுத்து, தமிழ் மொழி, கோலாட்டம், கும்மி போன்றவையே அப்போதைய பாடங்கள். பரீட்சைக்குரிய வினாக்கள் கல்விப் பரிசோதகர் (Inspcctor of Schools) அவர்களால் டிசம்பர் மாதத்தில் பரீட்சிக்கப்படும்.



கலஹா -1948 பாடசாலை நாட்களில் நண்பனுடன் நின்றுகொண்டிருப்பவர் PVK.

பரிசோதகரால் சிறப்புப் புள்ளிகளும், பாராட்டுக்களையும் பெற்று தோட்ட மக்களால் பெரிதும் கவரப்பட்ட தொரு தோட்ட பாடசாலை மாணவன் என்ற பெருமையைப் பெற்றுக்கொண்டவர் PVK.

பின்னால், தான் அடையப் போகும் உயர்வான வாழ்க்கை நிலைக்கு ஓர் அழகிய, உணர்வு பூர்வமான ஆதாரம் அவருடைய ஸ்க்லாவத்தை தோட்டப் பாடசாலை மாணவப் பருவம் என்று கூறினால் மிகையாகாது. அடையப்போகும் வாழ்க்கை உயர்வு ஐந்திலேயே தெரிந்து விடுமல்லவா!

*பழமையிலும் ஓரான்ம சுகம் உண்டு*
*அறிவு மணம் உண்டு*
*வழமையிலும் பார்க்க*
*வந்துவிட்ட கணனி யுகத்திலும்*
*சேரும் கள்ளமற்ற எளிய முகங்கள்,*
*ஏழ்மைக் கூறுகள்,*
*உள்ளங் கனிந்து உவந்தேற்கும்போது*
*உயரம் தெரிகிறது*
*எல்லாருடைய இளமையிலும்*
*எளிமை இழைந்தோடும்,*
*சொல்லாமல் ஓடுகிற காலதேவன் கையினிலே*
*இளமையும், முதுமையும்*
*இனிமையும் துன்பமும் ஒன்றுதான்.*

# 2. சுருக்கக் குறிப்பு

| | | |
|---|---|---|
| கல்வி | : | ஸ்க்லாவத்தை தோட்டத்தில் ஆரம்பக்கல்வி |
| ஆரம்ப ஆசிரியர் | : | திரு. ஏப்ரஹாம் |
| கல்விப் பாடங்கள் | : | தமிழ், கணிதம், கோலாட்டம் |
| கற்ற காலம் | : | 1942 வரை (1940-1942) |
| இடைநிலைக் கல்வி | : | கலஹா, தமிழ்ப் பாடசாலை, (இப்பாடசாலை பின்னர் பத்ராவதி என்ற சிங்களப் பாடசாலையாகியது) |
| அங்கு கல்வியூட்டிய பிரதான ஆசிரியர் | : | திரு. கந்தப்பிள்ளை (8,9,10 ஆகிய வகுப்புகளில்) |
| பாடசாலை காலத்து மாணவ நண்பர்கள் | : | லோகிதாசன், குமாரவேல், ராஜவடிவேல், சரீப்டீன், மாறப்பன், சிவலிங்கம். |
| தகைமை | : | கல்வியில் தரமான மாணவர் S.S.C.Prep. என்ற பத்தாம் ஆண்டு. |
| மொழி மூலம் | : | அநேகமாக ஆங்கில மொழியில் |
| பாடசாலை நிகழ்வுகள் | : | பேச்சு, பாட்டு, நாடகம் இவற்றில் பங்கேற்பு |

தந்தை மரணம் : 1950ல்

தாயின் மரணம் : 1953ல்

வீட்டில் படித்தது : லாந்தர் (Lantern) என்று சொல்லப்படும் விளக்கொளியில் தனது சகோதரர்கள் ஆதரவுடன்.

(பெரும் கல்விமான்கள், அரசியல் தலைவர்கள், எழுத்தாளர்கள், வாழ்ந்தது கலஹா பிரதேசம், அவர்களில் PVKயும் சேர்கிறார்.)

(இந்தத் தகவல்களை ஸ்க்லாவத்தை, தெல்தோட்டத்தில் வாழும். அவரது உறவினர், வயது சென்ற மக்கள் கொடுத்து உதவினர்.)

# 3. PVK பிறந்த ஸ்க்லாவத்தை தோட்டம்

PVKயின் பிறப்பில் ஏழ்மையும், எளிமையுமே கவசம், தீயில் விழுந்து வளர்ந்த சந்தன மரமாக வாழ்நாளை வளப்படுத்திக் கொண்ட மாமனிதர். வெள்ளைச்சாமி மாகாளி என்ற மரபில் வாழ்ந்த பெற்றோர்க்கு பதினாறாவது குழந்தையாய்ப் பிறவியெடுத்து, பாசமுடன் வளர்ந்து பள்ளி சென்று பக்தியுடன் பாடங்களில் மூழ்கி, பதம் பெற்று வெள்ளிச் சிறகாய் வெளியே விரைந்து சென்று மேல் வகுப்பு கற்றிட கலகா நகர் கல்விச் சாலையில் வகையாக வாழ்நாட்களை அமைத்துக் கொள்ளவும் மிகையாக சிந்தித்து மிதமாக வாழ்வதற்குத் தொழில் தேட வழி தெரியாத சிந்தித்த வளமான, இனிய இளைஞருக்கு அரசுப்பணி, தோட்டத்து அலுவலகப் பணியெல்லாம் அப்போதைய நாட்களில் கைவிரித்து கதவடைத்த காலச் சுவடுகள்.

ஸ்க்லாவத்தை தோட்டம் அவரைக் கல்வி ரீதியாகவோ, தொழில் ரீதியாகவோ முன்னுக்குக் கொண்டு வரவில்லை.

வருடம் ஏழு மாதங்களுக்கு வானம் புகைமூட்டமாகவே இருக்கும். அந்த கால கட்டத்தில் அநேகமான சிங்கோனா மரங்கள், காடுகளிலும் தோட்டங்களிலும் அடர்ந்து காணப்பட்டன. பயிர் செய்வதற்கு உகந்த இடம் என்றாலும் மக்கள் வாழ்வதற்கு ஏற்ற இடம் என்று அப்போதைய நிலையில் சொல்வதற்கில்லை.

மற்றைய தோட்டங்களில் 1930களில் ஏற்பட்டிருந்த அப்போதைய சமகால நாகரிகம் ஸ்லாவத்தை தோட்டத்துக்கு எட்டியிருக்கவில்லை.

மண் வீடுகள், மரங்களிலான பொதுக் கட்டிடங்கள், ஏதோ மக்கள் கொழுந்தைப் பறித்துக் கொடுத்தால் போதும். அன்றைய நிர்வாகம் அந்த மலைத் தோட்டத்தின் குன்றுகளிலிருந்து வெவ்வேறு திசைகளில், wire shoot எனப்படும் ஸ்டீல் கம்பிகள் பொருத்தியிருந்தன. அவைகளினூடாக கொழுந்து சாக்கு மூட்டைகளில் பொதி செய்யப்பட்டு மறுமுனைக்கு அல்லது மேலிருந்து கீழே கடத்தப்படும். அந்தக் கம்பியோடு பொருத்தப்பட்டிருக்கும் Runners என்ற ரோதைகள் மூலம் மூட்டைகள் வேகமாக ஓடும். சிறுவயதில் அந்தக் காட்சிகளைப் பார்த்து ரசித்து, சத்தம் செய்து, ஆடிப்பாடி மகிழ்ந்த சிறுவர்களில் நமது PVKயும் ஒருவராவார்.

ஸ்க்லாவத்தை தோட்டம் ஒரு குளிர்ச்சியான பிரதேசம். நூரளை சுவாத்தியம். இந்த நவநாகரிக உலகில் தொழில் வளம், கட்டிட வளம், தொழில் நுட்பத்திறன் அனைத்து தேவைக்கு மேலாக நிறைந்து விட்ட நிலையில் நூரளைக் குளிர் ஒன்றும் பெரிதாக பாதிப்பதற்கில்லை.

சுமார் எழுபது வருடங்களுக்கு முன்பதாக ஸ்க்லாவத்தை, ஹேவாஹெட்ட பிரதேசத்தில் இருந்த தோட்டம். அங்கே அப்போது இரும்புப் பிரேம்பொருத்திய லயன் காம்பராக்கள் வரவில்லை.

மலையுச்சியில் இருந்ததால் மக்களைக் கவனிப்பாரற்ற நிலையில், வேலை செய்து குறைந்த சம்பளம் பெற்று அதற்குள்ளேயே வாழ்ந்து கொண்டிருந்த குடும்பங்கள் அந்தத்

தோட்டத்தில் நூறுக்கும் சற்று அதிகமே. எல்லாருடைய வாழ்க்கையும் தாழ்ந்த நிலையிலேயே இருந்தன. அந்த நிலையிலும், மக்கள் சிந்திக்காமலில்லை. அந்தச் சூழலுக்கு ஏற்ற விதமான சின்னச் சிந்தனைகள்.

எல்லாருடைய வீடுகளும் மண் சுவரினாலேயே செய்யப்பட்டிருந்தன. பத்து வருடங்களுக்கு முன் வந்த பலகைகள். அநேகமான வீட்டுக் கூரைகள் கீற்றினால் செய்யப்பட்டவையே.

கயிற்றுக் கட்டில்கள் மண்பானைகள். மூலையில் அடுப்பு - சமைக்க குளிர்காய, குளிப்பதற்கு தண்ணீர் கொதிக்க வைக்க, என்று பலவேலைகளுக்கும் அந்த அடுப்பே பயன் பட்டது.

நிர்வாகத்தினால் கொடுக்கப்பட்ட சாக்குகள், கம்பளிகள்.

இப்படி எல்லாமே, நாம் இந்த இடத்தில் நின்று கொண்டு பார்க்கும் போது ஏழ்மையுடன் கலந்த எளிமைச் சின்னங்கள்.

இப்படிப்பட்டதொரு வீட்டில் வெள்ளைசாமி, மாகாளி தம்பதியர்க்குப் பிறந்த PVK அவர்களின் வாழ்க்கையில் என்னென்ன திருப்பங்கள்!

அநேகமாக மலையகத்து மக்கள் எல்லாருடைய முந்தைய தலைமுறைகள் இந்த அவலங்களில் நிம்மதியாகவே வாழ்ந்திருக்கின்றன. வெளியுலகம் தெரியாத மலைத்தோட்டம் ஸ்க்லாவத்தை.

எங்கு பார்த்தாலும் படிக்கட்டுகள். பசுமைக்கோலங்கள். இயற்கையின் எல்லையில்லா அழகுத் தோற்றங்கள்-

ஆனால் அப்போதைய தொழிலாளி திரு. வெள்ளைசாமி போன்றவர்கள் கடுமையான உழைப்புக்கு நடுவே. சுமார் இரண்டு அந்தர் மூட்டைகளைத் தூக்கியே ஆக வேண்டும்.

காலை ஆறரை மணிக்கு வேலை செய்யப் புறப்பட்டு மாலை ஆறு மணிக்கே வீடு வரவேண்டும்.

இதற்கிடையே எஜமானர்களைத் திருப்திப்படுத்த கடின உழைப்பு.

வீட்டுக்கு விறகு, எல்லாவற்றையும் இயற்கையுடன் இயற்கையாகத் தேடிப் பெற்றுக் கொள்ளும், கடினமான மரபு வாழ்க்கை.

இந்த நிலையில் மண் குடிசையிலானதொரு மரபுப் பாடசாலை.

இதில் 1939ம் ஆண்டு நுழைந்து அகரத்தைக் கற்றவர்....

இன்று வரலாற்றில் இடம் பெறுகிறார்!

# 4. அப்போதைய விளையாட்டு வீரர், இளங்கலைஞர் PVK

பாடசாலையில் கல்வி கற்கும் போது அவரிடமிருந்த அம்சங்கள் விளையாட்டுத்துறையும், கலைத்துறையும்.

இருபது வயதுகளில் அதாவது 1950களின் முற்பகுதியில், கரப்பந்து, ஹாக்கி போன்ற விளையாட்டுகளில் சிறந்து விளங்கினார்.

சில தோட்டங்களில் 1952க்கு மேல் மெதுவாக 'வாலிபால்' என்றழைக்கப்படும் கரப்பந்து முறைமையை ஐரோப்பிய துரைமார்கள் தோட்டங்களில் அறிமுகம் செய்தனர். காலப்போக்கில் இது வளர்ச்சியடைந்தது. இளைஞர் PVK தான் கல்வி கற்ற கலஹா பாடசாலையில் கரப்பந்து விளையாட்டினை மேற்கொண்டார்.

ஹாக்கியும் கரப்பந்தும் அவரது மனம் கவர்ந்த அல்லது அவர் தேர்ந்தெடுத்த விளையாட்டுகளாகும். அப்போதைய பாடசாலை மாணவரிடையே மிக உடல் உறுதியுள்ள ஒருவராகத் திகழ்ந்த இவரின் விளையாட்டுத் திறன் மாணவர்களைக் கரகோசம் செய்ய வைத்தது.

விளையாட்டுப் போட்டிகளிலும் ஓட்டம், நீளம் பாய்தல் போன்றவற்றிலும் பங்கு பற்றி பரிசு பெற்றுள்ளார். ஹாக்கி, கரப்பந்தாட்டம் என்ற போட்டிகளிலும் பாராட்டுகளையும், பரிசுகளையும் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத் தக்க அம்சங்களாகும். இது அவருடைய சிறப்பம்சம்.

1951, 1952ல் அவரால் எழுதப்பட்டு தயாரித்த 'இரக்கம் எங்கே' என்ற வீதி நாடகம் அப்போதைய தோட்டமக்களால் பெரிதும் வரவேற்கப்பட்ட படைப்பாகும்.

அந்த நாடகம் தெல்தொட்ட, ஸ்க்லாவத்தை போன்ற தோட்டங்களில் மேடையேறின.

அப்போதைய பொன்னர் சங்கர், பவளக் கொடி, அர்ச்சுணன் தவசு, பாரிஜாதம் போன்ற நாட்டுக் கூத்துக் கலைகளில் தம் மனைதப் பறிகொடுத்திருந்த தோட்ட ரசிகர்கட்கு இத்தகைய தொரு சமூக நாடகம், அதுவும் தம் வாழ்க்கைப் பிரச்சினைகளை முன்வைத்துப் படைக்கப்பட்டதொரு கலையை வெகுவாக ரசித்து வரவேற்றார்கள் என்பது குறிப்பிடத்தக்க அம்சம்.

ஆகையினால் தாம் பாடசாலையை விட்டு விலகியதும், நேரத்தை வீணாக்காமல் தமது வாழ்நாட்களை நல்ல பணிகளுக்கு இட்டுச் சென்ற PVK உண்மையிலேயே போற்றத்தக்கவர் தான். இது நிச்சயமாக இன்றைய காலத்திலும் பின்பற்றப்பட வேண்டிய முறைமையாகும்.

1940, 1950களின் முற்பகுதிகளில் கண்டியில் இரண்டு கல்லூரிகள் இலங்கை வாழ் இந்தியமாணவர்களின் கல்விக்காக செயல்பட்டு வந்ததைக் குறிப்பிடலாம். ஒன்று மகாத்மா காந்தி கல்லூரி. அதில் ஓர் இந்து சுவாமியே அதிபராகப் பணியாற்றினார். அடுத்தது அசோகா கல்லூரி.

முன்னையது பேராதனை வீதியில் அமைந்திருந்தது. பின்னையது திருக்கோணமலை வீதியில்.

இவ்விரண்டு பாடசாலைகளும் வருடம் ஒரு முறை தோட்டப்புறத்து நகரப் பாடசாலைகளின் விளையாட்டு, கலை இலக்கியம், சமயம் போன்ற துறைகளில் அக்கறை செலுத்தி வந்துள்ளமை வரலாற்று உண்மையாகும்.

இது 1956 வரையிலுமே தொடர்ந்தது எனக்குறிப்பிடப்பட வேண்டிய விடயமாகும். இத்தகைய சந்தர்ப்பங்களில். கலஹாபாடசாலை சார்பில் PVK பங்குபற்றி, மகாத்மா காந்தி பாடசாலை சுவாமிகள், அசோக்கா கல்லூரி அமரர் P.T. இராஜன் ஆகிய பெருந்தகைகளின் கைகளிலிருந்து பரிசுகளும் மற்றும் அவர்களுடைய பாராட்டுகளையும் பெற்றுள்ளார் என்பது அவருடைய நல விடயங்களாகும். 1952ம் ஆண்டு அவர் பாடசாலையை விட்டு விலகியதும் தோட்டத்து மாணவர்க்கு இராப்பள்ளிகள் வைத்து (RUDUMENTARY FORM OF EDUCATION) பணியாற்றியுள்ளார். இது 1952, 1953 ஆகிய இரண்டு வருடங்கள். இது தெல்தொட்ட தோட்டத்திலும், அவ்வப்போது ஸ்லாவத்தை தோட்டத்திலும் இடம் பெற்றிருந்தது என்று கூறலாம். அத்தகைய காலகட்டத்தில் மாணவரிடையே கலாச்சார பண்புகளையும் அறிமுகம் செய்தார். கலைத்துறை, குறிப்பாக பாடல்கள், நாடகங்கள்.

இந்தியாவிலிருந்து அந்தக் காலத்தில் நாடகக்குழுவினர் பெரிய கங்காணிமாரினால் அழைத்துவரப்பட்டனர். சிலகுழுக்கள் இயற்கையாகவும் வந்தார்கள். அத்தகைய நாடகக் குழுகளுக்குத் தோட்டத்து அமைப்பாளராக விளங்கினார்.

இது கலஹாவின் ஏனைய பிரதேசங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. இவற்றிலும் குழுவினை அறிமுகம் செய்யும் படித்த இளைஞனாகத் திகழ்ந்தார்.

தோட்ட மக்களின் பாராட்டுகளும் கிடைத்தன.

# 5. வாசகத்தன்மை

ஒரு மனிதனுக்கு வாசகத்தன்மை என்பது வாழ்நாள் உணவு. நல்ல நூல்களை வாசிப்பதானது அவர்களின் வாழ்க்கையை முழுமையாக மேம்படுத்துகிறது.

இவர் தன் வாழ்நாளில் வாசித்தறிந்த சிறந்த நூல்கள்:

| சிறுவனாக, மாணவனாக வாழ்ந்த காலத்தில் வாசித்தவை: | இளைஞரான காலகட்டத்தில் வாசித்தவை: |
|---|---|
| கரும்பு - வாரஇதழ்<br>கல்கண்டு - மாத இதழ் | கல்கி, ஆனந்த விகடன்<br>சுதந்திரன், வீரகேசரி,<br>தினகரன், குண்டூசி,<br>பேசும்படம் |

**தான் பொறுப்பான பதவிகளுக்கு முகம்கொடுத்த காலத்தில் வாசித்த நூல்கள்:**

மகாபாரதம், ராமாயணம், மகாத்மா காந்தியின் சத்திய சோதனை, நேருஜியின் Discovery of India, Illustrated Weekly of India, தேயிலை, மலையகம் வரலாற்று நூல். இந்திய, தமிழக அரசியல் பத்திரிகைகள், நூல்கள், மாலை முரசு, முரசொலி, அறிஞர் அண்ணாவின் நூல்கள், கலைஞர் கருணாநிதியின் நூல்கள். மற்றும் தூக்குமேடை போன்ற நாடக நூல்கள், திருக்குறள், சுந்தரம் பிள்ளையின் மனோண்மனீயம், ஆங்கில

செய்தித் தாள்கள், கவிஞர் ரவீந்திரநாத்தாகூர், சரோஜினி நாயுடு, H.P. சட்டபாத்தியாயா போன்றவர்களின் நூல்களும் வாசித்துள்ளார்.

வாசிப்பின் பூரணத்துவம் - ஆமாம் வாசிப்பின் பூரணத்துவம் அவருடையது.

அனைத்துக்கும் மேலாக அவர் தனது மத்தியவயது முதல் இறுதிவரை வாசித்து உணர்ந்து திருப்தியடைந்த இதழ்கள் கவியரசு கண்ணதாசனின் 'அர்த்தமுள்ள இந்து மதம்.'

அந்தக் காலத்தில் அதாவது ஆயிரத்து தொளாயிரத்து ஐம்பதுகளில் மலையகத்தில், அதாவது முழு இலங்கையிலும் வாழ்ந்த படித்த இளைஞர்கள் கையில் எந்நேரமும் ஒரு புத்தகம் இருக்கும். புத்தகங்களினூடே வாழ்ந்தார்கள் எனக் கூறலாம். ஏனெனில் அந்த வாசிப்பு வாழ்வே அவர்களின் மன உணவு.

இன்று எத்தனையோ விதமான பார்வை ஊடகங்கள் நிறைந்துவிட்டன. எங்கு திரும்பினாலும் வண்ணக் காட்சிகள் பெரும் தொல்லைகளாக மாறிவிட்ட தொலைக்காட்சி அம்சங்கள்.

ஐம்பதுகளில் வானொலிப் பெட்டிகள் எதுவும் மலையகத்தில் கிடையாது.

வானொலிப் பெட்டி கலாச்சாரம் 1960 ஆரம்ப கட்டத்திலேயே தோட்டப்புரங்களில் மிக மெதுவாக வேரூன்றத் தொடங்கியது.

அத்தகைய எந்த ஓசையும் இல்லாத நாட்களில் படித்த மனிதர்கள் வாசித்தார்கள். வாசித்தவற்றை ஆராய்ந்தார்கள்.

அவ்வப்போது 40, 50களில் தோட்டங்களில் இரண்டொரு இளைஞர்களின் வாயில், 'கருணாமூர்த்தி காந்தி மகாத்மா'

என்ற பாடல் முணுமுணுக்கப்படும். இது தவிர்த்து தியாகராஜ பாகவதரின் பாடல்கள்.

குறிப்பாக ஐம்பதுகளில் ஒரு சில இளைஞர்கள், மிஸ்ஸியம்மா, மோகன சுந்தரம் படத்தின் 'பாட்டு வேணுமா உனக்கொரு பாட்டு வேணுமா?' என்ற பாடலை வேலை செய்யும் போது பாடுவார்கள்.

இத்தகைய பாடல் கலாச்சாரம் ஐயாவின் மனதிலும் பாதிப்பை ஏற்படுத்தியிருந்தது.

கலஹா நகரத்தில் அந்தக் காலத்தில் 'சுந்தர் டாக்கீஸ்' சினிமா டெண்ட் கொட்டகையில் அவ்வப்போது நண்பர்களுடன் ஓடிப் போய் பார்த்த திரைப்படங்கள் சிந்தாமணி, சிவகவி, சந்திரலேகா, மோகினி, நந்தனார், வாழ்க்கை, பராசக்தி என்பவையாகும்.

இத்தகைய திரைப்படங்கள் மூலம் அப்போதைய இளைஞர் கற்றுக் கொண்ட பாடங்கள் ஏராளம். அது ஐயாவுக்கும் கிடைத்துள்ளது. வறுமை நினைவை விரட்ட, ஆன்மீகத்தை வளர்த்துக்கொள்ள, மன உறுதி பெற, வாழ்வில் முன்னேற்றமான இடத்தை அடைய முயற்சிக்க, இவை எல்லாவற்றுக்கும் மேலாக ஓர் அழகியலை மனம் முழுவதும் வியாபிக்க வைத்து நலம் பெற அந்தத் திரைப்படங்கள் உதவின. ஐம்பதுகளில் படித்த இளைஞர்களே அதிக திரைப்படங்கள் பார்த்தனர்.

தனது இருபதுகளில் வாழ்ந்த இளைஞர்; நாவலப்பிட்டி நகரில் வசித்தது ஓரிரு வருடங்கள். இது அவரை பண்படுத்திய பூமி என்றும் கூறலாம். நாவலப்பிட்டி இ.தொ.கா. காரியாலயத்தில் டைப் செய்யும் பணியைத் தொடர்ந்தது அவருக்குக் கிடைத்த அரிய வாய்ப்பு எனக் கூறலாம்.

ஐம்பதுகளில் நாவலப்பிட்டி நகரில் ஓர் உற்சாகமான உடன்பாடு காணப்பட்டிருந்தது. ஆசிரியர், உயர் வகுப்பு மாணவர், இ.தொ.கா. ஊழியர், சம. சமாஜி கட்சியினர், பொதுமக்கள், தமிழர், சிங்களவர், இஸ்லாமியர், பறங்கியர் ஆகியோரிடையே பெரும் ஒற்றுமையும் கலாச்சாரப் பரிமாற்றமும் ஓங்கி வளர்ந்து கொண்டிருந்தன.

ஓகன்ஸ் பார்க் என்ற சிறிய விளையாட்டு மைதானம். முன் சொல்லப்பட்ட எல்லாரும் சேர்ந்து, கால்பந்து கரப்பந்து என விளையாடி மகிழ்வர். ஒவ்வொரு மாதமும் விளையாட்டுப் போட்டிகள் நடக்கும். அவற்றில் காங்கிரஸ் காரியாலய உறுப்பினர்களும் மாணவரோடு சேர்ந்து விளையாடுவர்.

அந்த நிலை மிக உணர்ச்சி பூர்வமாக இருக்கும். பதினைந்து சதத்தில் பகலுணவைப் பூர்த்தி செய்து கொள்ள உதவும் ஓட்டல்கள் மோகண விலாஸ், மலபார், சீத்தா. நூற்றுக்கணக்கான படித்த இளைஞர்கள் தம் மனங்களில் எந்தக் குறுகுறுப்பும் இல்லாமல் உற்சாகமாக வாழ்ந்த காலம்.

அந்த நிகழ்வுகளே ஐயாவின் பிற்கால வாழ்க்கைச் சாதனைகளுக்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்தது எனக் கூறுலாம்.

தாம் தொழிலுக்கப்பால் எந்தெந்த நல விடயங்களில் ஈடுபட்டு தனது அறுபதாவது வயதுக்காலத்தில் நலம் பெறலாம் என்பதை நன்கு உணர்ந்தவர் என இவரைக் குறிப்பிடலாம்.

இத்தகைய தொழிற்சங்கத் தலைவருக்கு அன்று கிடைத்த அனுபவங்கள் அரோக்கியமானவை.

இளம் தலைவர்களுக்கும், எழுபதில் காலடி எடுத்து வைக்கும் தலைவர்களுக்குமான வித்தியாசம் என்பது வயது

முரண்பாடு மட்டுமல்ல. கால வேறுபாடு! அனுபவ வேறுபாடும் உண்டு. PVK போன்ற தலைவர்கள் - ஐம்பதுகளில் தொழிற்சங்கக் கல்வியைப் பெற்றவர்கள் என்ற வகையில் பண்பாட்டு கலாச்சார விழுமியங்கள், இவை மிக எளிமையாக அவர்களிடம் வந்து சேர்ந்தன.

வானொலிப் பெட்டிகள் இல்லாத வீடுகளில் பத்திரிகைகளே முக்கிய இடம் வகிக்கும். சிறு நவீனங்கள், பத்திரிகைகளில் மிக ஆழமான விடயங்கள். நடைமுறைக்கு ஏற்றவை. எளிமையானது. பண்பாடுகள் நிறைந்தவை. காதலையும் மிக பக்தியுடன் சொன்ன காலம். திரைப்படப் பாடல்களும் அப்படியே. ஆன்மீகச் சடங்குகளுக்கு எந்த இடையூறுகளும் இல்லை. நூல்களை சுதந்திரமாகத் தொல்லையின்றி படிக்கலாம். அமைதியான வீட்டுச் சூழல், இயற்கையான சூழல்.

மலையகப் பெருந்தலைவர் சிந்தித்து செயல்படுவதற்கும் ஏற்ற இயற்கை வளம்.

அதன் காரணமாக நமது மலையகத் தலைவர்கள் 40, 50, 60 வருடங்கள் என நீண்ட காலத்து அரசியல் வாழ்வினை மேற்கொண்டார்கள். அந்த வரலாற்றுப் பெட்டகத்தில் அநேக விடயங்கள், அடங்கியுள்ளன.

# 6. தொழிற்சங்க வாசல் முதற்பயணம்

1955ம் ஆண்டு, மலையகத் தோட்ட மக்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருந்த காலம்.

நமது வாக்குரிமை பறிக்கப்பட்டு ஏழு வருடங்களே ஆகியிருந்தன (Defranchise). இந்திய வம்சாவளி மக்களுக்கு எதிரான நிலைப்பாடு நாடு முழுவதும் (வடகிழக்கு நீங்கலாக) வியாபித்திருந்தது. சகல அரச காரியாலய தொடர்புகளிலும் நமக்கு இடமில்லை. இந்த நிலையில் படித்த இளைஞர்கள் பிரஜாவுரிமை இல்லாத காரணத்தினால் உயர் கல்வி கற்கவோ, உத்தியோகத்துக்கோ போக முடியாது. பிரஜாவுரிமை இருந்தாலும் தோட்டத்தொழிலாளி பிள்ளைகளுக்கு இடமில்லை.

அப்போதைய இளைஞர்கட்கு கீழ்க்காணும் துறைகளின் கதவுகள் திறக்கப்பட்டிருந்தன. ஒன்று இ.தொ.கா. பிரதேசக் காரியாலயங்கள். அதே போல சமீபத்தில் அதிலிருந்து பிரிந்த ஜ.தொ.கா. அதற்கு முன்னிருந்த லங்கா சமசமாஜிக்கட்சிக் காரியாலயங்கள், அதே போல சற்று பின்னால் கம்யூனிஸ்ட், செங்கொடிச் சங்கம், தமிழரசுக் கட்சி காரியாலயங்கள். கூடுதலாகவும் பொதுவாகவும் இ.தொ.கா தான். மற்றும் தோட்டத் தொழிலாளியாகப் பதிவு பெற்று வேலை செய்யலாம். அதற்கும் மாறாக கடைகளில் சேர்ந்து வேலை செய்யலாம். இவை தவிர இராப்பள்ளி வைத்து வாழலாம். ஊடக நிருபர்களாகவும் பணி செய்யலாம்.

இப்படி, ஏதோ ஒரு காரியாலயத்தில் குறைந்த சம்பளம், ஆத்ம திருப்தி இவற்றை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு வாழ முனைந்த ஐயா இருபதாவது வயதில் இ.தொ.காரியாலயத்தில் சேர்ந்து பணி செய்யத் தொடங்கினார். ஓரளவு படித்த இளைஞர்கட்கு அந்தக் காலத்தில் ஒரு வாழ்வுப் பாதை.

நாவலப்பிட்டி, கலகா, புசல்லாவ, கம்பளை என்று வேலை. ஏதோ ஓர் அரைச்சுகம். பன்விலை, மாத்தளை, அட்டன் என்றும் தொடர்ந்தது.

தொழிற்சங்கக் காரியாலயங்களில் சேருபவர்க்கு பொருளாதாரத்தைத் தவிர வேறு பல விடயங்களும் அவர்களுடைய மனதுக்குள் வந்து சேரும். தொழிற்சங்க ஊழியர்களைச் சுற்றி தொழிலாளர்களே இருப்பார்கள். அந்த ஐம்பதுகளில் பல ஏக்கங்களுக்கு மத்தியில் தொழிற்சங்க வாழ்வு நடத்திய இளைஞனை அறிமுகம் செய்ய இப்படிக் கவிதை ஒன்றின் மூலம் வரலாம்.

*"வாழ்வா சாவா என்றறியாத ஐம்பதுகளில்*
*தாழ்வான கூரையின் கீழ் தரமாக சிந்தித்து*
*ஊழ்வினை மாறுபட்டதால்*
*மேல்நிலை செல்ல இயலாமல்*
*கால் போன போக்கில் நடந்து சென்று*
*கனவுகள் நிறைவேறாது காலத்தைத் தாண்டினோம்"*

1954ம் ஆண்டு ஐயா அவர்கள் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் நாவலப்பிட்டி காரியாலயத்தில் சேர்ந்து பணியாற்றத் தொடங்கினார் என்ற குறிப்பினை, தற்போது தொழிலாளர் தேசிய சங்கத்தின் பொருளாளர் திரு. மைக்கல் செபஸ்தியன் குறிப்பிட்டபோது நமது மனத்தில் ஓரிதமான, சுகமான நெருடல்.

அந்த சுக நெருடலுக்கான காரணி!

1950ஆம் ஆண்டு முதல் 1960 வரையில் அந்த இ.தொ.கா காரியத்தில் அடுத்தடுத்த அறைகளில் ஐம்பது மாணவர் வாழ்ந்த பாரதி பவான் ஹாஸ்டல். அது ஒரு பழைய ஓடு போட்ட கட்டிடம். தொலஸ்பாக வீதியில் ரயில்வே நிலையத்துக்கு மேலாக. கட்டிடத்தின் ஒரு பகுதி இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் காரியாலயம். மறுபகுதி பாரதி பவான் மாணவர் விடுதி. அந்த விடுதியில் நானும் ஒரு மாணவனே! அந்த மாணவர் விடுதியில் இடம்பெறும் கலை கலாச்சார நிகழ்வுகள் அனைத்துக்கும் இ.தொ.கா காரியாலய அலுவலர்கள், காப்பாளர்களாக இருந்துள்ளனர். விடுதி அவர்கள் மேம்பாட்டுக்கு உதவியது. அலுவலர்களோ மாணவர்களின் மேம்பாட்டுக்கு உதவினர்.

அந்தக் காரியாலயத்தில் பணியாற்றிய அப்போதைய இளைஞர்கள் நன்கு கற்றவர்கள். அனுபவம் பெற்றவர்கள். சிறந்த சிந்தனையாளர்கள். நிறைய வாசிப்பவர்கள். அந்த காலகட்டம் மிக உன்னதமான சகாப்தம்.

அந்தக் காரியாலயத்தில் பணியாற்றியவர்கள் திரு. அழகராஜ், திரு. சாந்தப்பன், திரு. சிவாஜி செபஸ்தியன், திரு. சுப்பையா அவர்கள் மற்றும் இளம் ஊழியராக, தட்டச்சு செய்து பணியாற்றியவர் இளைஞர் PV.கந்தையா. குறிப்பிட்ட சில மாதங்களே அதில் பணியாற்றினார். அது ஆரம்ப காலம்.

இது இடம்பெற்று ஆறு மாதங்களில், மலையகத்தின் மணிநகரமாகிய அட்டனுக்கு அனுப்பப்பட்டார்.

நாவலப்பிட்டியிலும், அட்டனிலும் அவருக்குக் கொடுக்கப்பட்ட வேலை, தொழிலாளர்க்கான பிரஜாவுரிமை விண்ணப்பங்களை டைப் செய்வது.

திரு. மைக்கல் செபா மிக அழகாக - ஐயா பற்றி குறிப்பிடுகிறார். கந்தையா அவர்கள் மிகத்திறன் வாய்ந்த தட்டச்சு வேலை நிபுணர். காரியாலயத்தில் அவர் மாத்திரமே 'டச் சிஸ்டம்' என்றழைக்கப்படும் விரல் பதிவு முறை தட்டச்சு பயின்றவர். அந்தக் காலத்தில், தோட்ட அரசு காரியாலயங்களில் வேலை செய்வோரிடம் கேட்கப்படும் கேள்வியானது உங்களுக்கு 'டச் சிஸ்டம் தெரியுமா, சுருக்கெழுத்து முறை அதாவது 'ஷாட் ஹேன்ட்' படித்திருக்கிறாயா. இது இல்லை என்றால் அடுத்த கேள்வியை கேட்காமலேயே அந்த நபரை நிராகரித்து விடுவார்கள்.

இத்தகைய தகுதிவாய்ந்த பலர் அரசு தொழில், தோட்டக் காரியாலயத் தொழில், ஆசிரியத் தொழில் ஆகிய வற்றுக்கு பிரஜாவுரிமை இல்லாததால் நிராகரிக்கப்பட்டவர்கள். அவர் டைப் செய்யும் முறையினை வியந்து பாராட்டிய அவருடைய மேலதிகாரியாக இருந்த ஓரிருவரிடம் இதனை நாம் உறுதி செய்து கொண்டோம்.

அட்டன் இ.தொ.காரியாலயத்தில் ஐம்பத்தாறாம் ஆண்டு இணைந்த திரு மைக்கல் செபஸ்தியன் என்ற இளைஞர் ஐயா அவர்களுக்குக் கீழ் பணியாற்றினர்.

"தட்டச்சு வேலைகளில் எனக்குப் பயிற்சியளித்து எனது வளர்ச்சிக்கு பெரிதும் உதவிய ஐயா அவர்கள் ஒரு வழியில் எனக்கு ஆசான்," என்று அவரைவிட நான்கு வயது குறைவான திரு. மைக்கல் மிக நன்றிப் பெருக்குடன் கூறியது நம் நெஞ்சைத் தொட்டது என மிகைபடக் கூறலாம்.

அந்த கால கட்டத்தில் இ.தொ.கா. காரியாலயம் அட்டனில் புகையிரத நிலையத்துக்கு அருகாமையில் ஒரு தகரக் கட்டிடத்திலேயே இருந்தது.

அதிகமாக அவருடைய பணிகள் தட்டச்சு இயந்திரத்தின் முன் தானும் ஓர் இயந்திரமாக, சிலதினங்களில் இரவு பகல் என்றும் நடக்கும். மிகப் பெரிய தாபனம் என்பதால் அலுவலர் யாவர்க்கும் வேலை அதிகம்.

குறைந்த சம்பளம் தான். வரலாற்று ஏணியில் எந்தப் படியில் நின்றாலும் வேதனம் என்பது ஒரு வேதனையான விடயமே என்பது தொழிற்சங்க விதியாகும். அது அன்றும், இன்றும், என்றும் எனக் கூறலாம்.

கடின உழைப்பு, பொருளாதார நெருக்கடி, தேசிய உரிமை இல்லாமை, சொத்து சுகம் இன்மை என்றதொரு பல்நிலைக்குள் அன்றைய மலையக இளைய சமுதாயம் சிக்கியிருந்தது. இந்த நெருக்கடியான வாழ்வுக்குள் தனது இலட்சியங்களையும் இதயத்தில் தேக்கி வைத்துத் தவித்த ஒரு சராசரி படித்த இளைஞன்! அப்பப்பா அந்தக் கால கட்டத்தை நினைக்கும் போதே நெஞ்சம் குமுறுகிறது.

இப்படியான சரித்திர புருஷர்கள் தான் அன்றைய தொழிற்சங்கப் பணியாளர்கள். இன்று எந்த நிலையில் அவர்கள் வாழ்ந்தாலும், அன்றைய தியாகிகள் தான். அவர்களை இன்றைய இளைஞர்கள் பக்தியுடன் பார்ப்பது தான் நன்றிக்குரிய செயல்பாடாகும்.


உதாரணமாக PVK ஐயாவைக் குறிப்பிட்டு அந்த வயதுகளில் சற்று குறைவாகவும் வாழ்ந்து கொண்டிருக்கும் சங்கத் தலைவர்கள், உப தலைவர்கள் என்கிற வரிசையில் யாரையும் பார்த்து மரியாதை செலுத்த வேண்டும்.

# கல்கத்தா சென்று திரும்பிய PVK



இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸைச் சேர்ந்த திருவாளர்கள். பி.வி. கந்தையா, எஸ். ராஜமாணிக்கம். ஓ. எஸ். வடிவேல் ஆகிய மூவரும் கல்கத்தாவிலுள்ள சர்வதேச சுதந்திரத் தொழிற்சங்கங்கள் சம்மேளனக் கல்லூரியில் தொழிற்சங்க நடவடிக்கைகள் சம்பந்தமாகப் பயிற்சிபெற்று கொழும்பு திரும்பியபோது எடுக்கப்பட்ட படம். 1964.

# 7. மாத்தளையில் PVK



மாலை அணிந்திருப்பவர் PVK.

1963 / 1964ம் ஆண்டு மாத்தளை நகரில் இ.தொ.கா. பணிமனை உத்தியோகத்தர்களால் PVK அவர்கட்குப் பிரியாவிடை. மாத்தளையிலிருந்து அட்டன் இ.தொ.கா. காரியாலயத்துக்கு இடமாற்றம் பெற்றபோது.

1960களில் மாத்தளை மாவட்டத் தொழிலாளர்கள் செறிவு விசாலமானது. அவர்களுடைய பிரச்சினைகளும் பிரம்மாண்டமானவை.

திறன்மிக்க அலுவலர்கள் பிரதிநிகளையே இ.தொ.கா. அங்கு சேவைக்கு அனுப்பியது.

அவ்வாறு திறன் கொண்ட இ.தொ.கா. பிரதிநிதிகளில் PVK மிக முக்கியமானவர்.

மாத்தளையில் இ.தொ.கா. பலம் பொருந்திய தாபனத்து வேலைத்திட்டங்கள் திரு. நாயர் அவர்களால் முன்னெடுக்கப் பட்டன. நாயரின் கீழ் பணியாற்றிய போது PVK பெற்ற அனுபவங்கள் ஏராளம். அவற்றில் உண்மை, உழைப்பு, கேட்டல், கற்றல் என்பன.

அட்டனிலிருந்து இடம் மாற்றம் பெற்று மாத்தளை போய் பணியாற்றிய போது மாத்தளை காரியாலயத்துக்கு வந்த பத்திரிகைகள் ஏராளம்.

அவற்றை வாசித்துப் புதிய புதிய கருத்துகளைப் பெற்றுக் கொண்டார்.

அந்த காலகட்டங்களில் சற்று இரகசியமாகப் படித்தே ஆக வேண்டிய பத்திரிகைகள் தமிழக தி.மு.க ஏடுகள்! முரசொலி, மாலை முரசு, சாட்டை, அறிஞர் அண்ணாவின் நூல்கள், கலைஞர் கருணாநிதியின் நூல்கள், ஏ.வி.பி. ஆசைத்தம்பியின் நூல்கள். மாத்தளை காரியாலயத்து அனைத்து அன்பர்களும் வாசித்தனர். தமிழகத்து அரசியல் பற்றி விவாதித்தனர். தமது அரசியல் அறிவைக் கூர்மைப்படுத்த உதவியதே மாத்தளை காரியாலயம்.

மாத்தளை 60களில் ஒரு விறுவிறுப்பான தொழிற்சங்க நகரம் என இ.தொ.கா. வட்டாரங்கள் கூறின.

வி.கே. வெள்ளையன் இ.தொ.கா.வில் இருந்த காலம். பிராஜா உரிமை பிரச்சினை அகோர வடிவெடுத்த காலப்பகுதியாகும்.

அத்தகைய சூழலில் மாத்தளை பணிமனை மிகுந்த பரபரப்பாக இயங்கிய காலமாகும். சிவாஜி செபஸ்டியன் போன்ற கலைஞர்களோடு சேர்ந்து திரு. நாயரின் கீழ் கலாச்சார நிகழ்வுகளைத் தோட்ட இளைஞர்களிடையே மிக மும்மரமாகச் செயல்படுத்திக்கொண்டிருந்தனர்.

வாசிப்பு, எழுத்து, கலை, இலக்கியம் என்று மாத்தளை மண் கொடி கட்டிப் பறந்தது. இந்த நிகழ்வுகளில் PVKயும் ஓர் அங்கமாகத் திகழ்ந்தார் என்பதில் எல்லாருக்கும் உடன்பாடான கருத்துண்டு.

1963ம், 1964ம் மலையக மக்கள் வாழ்வில் மிக முக்கியமான கட்டம். திரு. PVK வாழ்விலும் அப்படியே. அவருடைய தொழில் இடமாற்றம். அவருக்குத் திருமணப் பேச்சு குடும்பத்தாரால் ஆரம்பிக்கப்பட்டது.

அவருடைய மூத்த சகோதரர்களே PVK அவர்களுக்கு திருமணம் செய்து இல்லறத்தில் ஈடுபடவைக்க முயற்சித்தனர். எனினும் அவருடைய சொந்த முயற்சி இதில் முக்கிய பங்கு வகித்தது எனக் கூறலாம்.

இந்தச் சூழலில் அவரின் பிறந்த வீடு கலஹாவிலும், PVK மாத்தளையிலும், பின் நுவரெலியவிலும் அதன் பின் அட்டனிலும் என்ற பிரதேச வேறுபாடுகள்.

அதே வேளையில் திரு வி.கே. வெள்ளையன் அவர்களோடு தொழிலாளர் தேசிய சங்கம் என்ற புதிய தொழிற்சங்கத்தில் சேர வேண்டும் என்ற இலட்சியம்.

என்றாலும் கால சற்று அவகாசம் அவருக்குத் தேவைப் பட்டது. இந்த நிலையில் அவர் மிக தீர்க்கமான, உறுதியான முடிவெடுக்கும் நிலைப்பாட்டில் சற்று சலனத்துடன் காலம் கடத்த வேண்டிய கட்டம்.

இது அவருடைய இயல்பான போக்கிலிருந்து சற்று மாறுபாடானது. எனினும் அவரின் உறுதியும், இளம் ஓட்டமும் எதிலும் கவலைப்பட வைக்கவில்லை.

ஆக 63ல் சிந்தித்து, 64 முழுவதும் உழைத்து 65ல் புதிய தொழிற்சங்கத்தின் பால் தனது போக்கை உள்வாங்கிக் கொண்டார்.

ஏற்கனவே உருவாகியிருந்த அட்டன் தொழிற்சங்கமாகிய NUW ல் கால்பதித்தார். தன்னை முழுவதும் புதிய அமைப்புக்கு அர்ப்பணம் செய்து கொண்டார் என்று குறிப்பிடுவதே பொருத்தமாகும்.

# 8. கலாச்சாரப் பண்புகள்

இளமையிற் கல்வியில் நாட்டம், விளையாட்டுத்திறன், அமைதி வழியில் பயணம், சிந்தனை வளம், தான் பிறந்த குடும்ப நலன், நண்பர்களுடன் நல்லுறவு, உண்மையான உழைப்பு,



நடுவில் நிற்பவர் PVK.இ.தொ.கா. பணிமனை.
நுவரேலியாவில் (1964)

தான் கற்ற கல்வியை மீட்டுப்பார்த்தல், வாசகப் பண்பு, புத்தகங்கள் சேகரித்தல், தான் தொழிலாற்றிய பிரதேசங்களில் முத்திரை பதித்தல், சிக்கன முறைமை, இறைபக்தி, முருக பக்தர், பாரதத் தலைவர்கள் வரலாற்றுத் தேடல்கள் போன்றவை PVKயின் பண்புநலன்களாகும்.

## இதர அம்சங்கள்

இடதுசாரி, வலது சாரியின்றி நடுநிலை வாதம், நிர்வாக சாதுர்யம், கருணை, கட்டுப்பாடு, கண்டிப்பு, தொழிலாளர்களுடன் நல்லுறவு, எதிலும் கணக்கு வைத்து செயல்படல், நேரத்துக்கு முக்கியத்துவம், தன்னுடன் வேலை செய்யும் அலுவலர்களுடன் கடிதங்கள் மூலம் ஆலோசனை வழங்கல், ஆவணங்கள் சேர்த்தல், எதையும் ஆவணப்படுத்துதல், வீண் விவாதங்களில் கவனம் செலுத்தாமை, ஆங்கில மொழியினை தனக்குள் வளர்த்தல், சுகாதாரத்தில் நாட்டம், விஞ்ஞான ரீதியாக சிந்தித்தல், ஒவ்வொரு படியாக ஏறவேண்டும் என்ற முறைமையை வலியுறுத்தல், சுயவிளம்பரத்தை விரும்பாமை, அடக்கமாகப் பணி செய்தல், நன்றி மறவாமை போன்ற குணங்களையும் கொண்டிருந்தார்.

# 9. PVK திருமண வாழ்வு

இறுக்கமான இரண்டாம் அத்தியாயம். வாழ்க்கையில் ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு பயணச்சீட்டு உண்டு. அதனைக் Career என ஆங்கிலத்தில் குறிப்பிடுவோம்.

ஐயாவின் தொழிற்சங்கப் பயணத்தில் இரண்டாவது இறங்கு துறையாக தொழிலாளர் தேசிய சங்கத்தைக் குறிப்பிடலாம்.

இ.தொ.கா. விலிருந்து பிரிந்த அமரர் வி.கே. வெள்ளையன் அவர்களுடன் சேர்ந்தார் திரு. PVK.

இது நிகழ்ந்தது 1964ம் ஆண்டு. அப்போது ஐயா டிக்கோயா மாநில இ.தொ.கா. பிரதிநிதியாகப் பணியாற்றிக் கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இந்த கால கட்டத்திலேயே ஐயாவின் திருமணம் கலகாவில் நிறைவேறியது. மணப்பெண்ணாக அமைந்தவர் லெஷ்மி. மிக எளிமையாக அதேநேரம் கலாச்சார சம்பிரதாயங்களுடன் பெற்றோர் உற்றார் உறவினர் பெரியோர் ஆசியுடன் நிறைவேறியது.

இனிமையான அமைதியான, அடக்கமான, எளிமையான இல்லற வாழ்க்கை. இது தொழிற்சங்க ஊழியரின் சராசரி வாழ்க்கைப் பயணம். எளிமையே இவர்களின் வாழ்வாதாரம்.

ஐயாவின் சங்கப் பணிகளுடன் சேர்ந்து வந்த அர்த்தமுள்ள ஆதாரம். மலையக மண்ணின் லட்சக்கணக்கான மனங்களின் எளிமையான வாழ்க்கைக் கோலங்கள். இதில் யாரும் விதி விலக்கல்ல.



திரு. & திருமதி PVK திருமண தினத்தில் பிடித்த படம் 1964.

அவருடைய திருமணத்துக்கு வருகை தந்து வாழ்த்தியவர்களில் சிறப்பாகச் சொல்லக் கூடியவர், அப்போதைய கண்டி தொகுதியின் (UNP) பாராளுமன்ற உறுப்பினரும், ஐக்கிய தேசியக் கட்சியின் உப தலைவருமான ஸ்ரீமான் E.L.சேனைநாயக்கா அவர்கள் என்பதாகும். அந்தத் திருமண வைபவம், சுருக்கமானதாக இருந்தும் பெரிதாகப் பேசப்பட்டது எனக் குறிப்பிடலாம்.

# 10. PVK தொழிலாளர் தேசிய சங்கத்தில்

1964ம் ஆண்டு மே மாதம் முதல் திகதி, தொழிலாளர் தேசிய சங்கம் என்ற தொழிற்சங்கம் அட்டன் மாநகரில் உதயமானது. 187-A டிம்புல வீதி, அட்டன் என்ற முகவரியைக் கொண்ட கட்டிடத்தில் (இன்றும் அதே கட்டிடத்தில் இயங்கி வருகிறது) NUW என்ற ஆங்கில எழுத்துக்களைக் கொண்ட பொதுப் பெயரில் தொழிலாளர் தேசிய சங்கம். அதன் தொனிப் பொருளாக இலங்கை வாழ் இந்திய வம்சாவழி தோட்டத் தொழிலாளர் நலன் காக்கும் தொழிற்சங்கம். பின்னால் தோட்ட ஊழியர், ஆசிரியர், வர்த்தகர் மற்று சர்வமத கொள்கை போன்ற அம்சங்கள் சேர்க்கப்பட்டன.



1971 தொழிலாளர் தேசிய சங்க மே தின விழாவில்
அமரர் C.V. (அருகில் அமர்ந்திருப்பவர்) இளம் PVK ஐயா

# 11. தொழிற்சங்கப் பணிகள்

தொழிற்சங்க அனுபவம் ஏற்கனவே பன்னிரண்டு வருடங்கள. அவருக்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மூலம் கிடைத்தது. இலட்சியம், கொள்கை, விருப்பம், விருப்பமின்மை, எதிர்ப்பு என்பது வேறு. அனுபவம் என்பது வேறு. அநேகமான தலைவர்கள் ஒப்புக் கொள்ளும் ஒரு விடயம் இது.

தாம் இளைஞராக இருந்து பெற்ற அனுபவங்களின் துணையோடுதான் ஒரு புதிய அமைப்பை ஆரம்பிக்கிறார்கள் அல்லது அதில் சேருகிறார்கள். இது எல்லா தொழிற்சங்க வாதிகளாலும் ஒப்புக் கொள்ளப்பட்ட விடயமாகும். இதற்கமைய ஐயாவின் தொழிற்சங்க வாழ்வுப் பயணம் தொடர்ந்தது.

தொழிற்சங்கப் பணிகளில் அவர் ஆழ்ந்த கவனம் செலுத்திய காலம் என்பது சங்கத்தில் நுழைந்த காலத்திலிருந்தே தொடர்கிறது. 1954 முதல் 2004 வரையில் பணிகளைச் செய்திருக்கிறார்.

''கடிதங்கள், அறிக்கைகள் தட்டச்சு செய்வது, பாரங்கள் நிரப்புவது'' - இந்தக் கடமைகள் பத்து வருடங்கள் தொடர்ந்துள்ளன. இவர் இதன் மூலம் கற்றுக் கொண்ட பாடங்கள் ஏராளம்.

ஆரம்ப காலத்தில் எல்லாம் கடிதங்கள் மூலமாகவே செயல்பட்டார். ஒரு சாதாரண ஊழியர் தொலைபேசி போன்றவற்றை நினைக்கவே இயலாது. தன் பெற்றோர்க்கு செய்தி அனுப்புவதாக இருந்தால் தபால்தான். வீட்டுக்கு அநேகமாக

போஸ்ட் கார்டையே உபயோகித்திருக்கிறார். ஒரு கார்டு இரண்டு சதம். மொத்தத்தில் அனுதினமும் அவரின் தொழில் வாழ்க்கை கடிதங்களிலே தங்கியிருந்துள்ளது என அறிகிறோம்.

தொழிலாளர் தேசிய சங்கத்தில் அவருடைய முதற்பணி, கடிதங்கள், அறிக்கைகள், ஏனையவற்றைத் தானே இயல்பான ஆங்கிலத்தில் தயாரிக்கக் கற்றுக் கொள்வது. இதற்காக எந்நேரமும், ஆங்கில தமிழ் அகராதியில் மூழ்கவேண்டுமே.

மக்கள் தொழிலுறவுச் செயலாளராக செயலாற்றிய காலத்தில் அவரின் பணிகள் மிக உற்சாகமாக இருந்துள்ளதாக அறியமுடிகிறது.

அப்பணிகள் பற்றிய விபரங்களை திரு. செ. பிலிப், திரு. மைக்கல் செபஸ்தியன், திரு. நல்லையா ஆகியோர் கூறக் கேட்டு உற்சாகமடைய முடிகிறது. இது தலைமைத்துவத்துக்கு ஆணித்தரமான அடித்தளம்.

தொழிலாளர்களைச் சந்திப்பது, பிரச்சினைகளை அலசுவது என்பனவே அடிப்படைப் பணிகள்.

## செயலகப் பணிகளும் சங்க வேலைத் திட்டங்களும்

1973ம் ஆண்டு முதல் சங்கத்தின் பொதுச் செயலாளர் பதவியினைப் பொறுப்பேற்றுள்ளார் என்ற தகவலை தற்போதைய பிரதி பொதுச் செயலாளர் திரு. செபஸ்டியன் பிலிப் அவர்கள். குறிப்பிடுகின்றார். திரு. பிலிப் எமக்கு அளித்த விபரங்கள் மிகமிக ஆரோக்கியமானவை. அமரர் PVK தொழிற்சங்கப் பணி தொடர்பாக அவர் கொடுத்த விபரங்களை இப்படியான பிரிவுக்குள் வகுத்துக் காட்டுகிறோம்.

## நிர்வாகம்

நிர்வாகத்திறன் என்பது அவருக்கே உரித்தானது. நேரம் தவறாமை, பைல்களை அலசுவது, தொழிலாளிகளின் பிரச்சினைகளை அலசுவது, அதற்கு சரியான தீர்வுகளைக் காண்பது. அத்தகைய தீர்மானங்களை சங்கத்தின் மாவலி பத்திரிகைக்கு கட்டுரைகளாக வழங்கி வெளியிடுவது போன்றவற்றில் அசுரத்தன வேகம்.

சங்கக் காரியாலய ஊழியர்கள் ஒரு கட்டுப்பாட்டுடன் கடமை செய்யும் வகையில் ஒழுக்கக் கோர்வையினை ஊழியர்களிடையே அறிமுகம் செய்தல்.

பேச்சை விட செயலிலேயே அதிக நாட்டம். அதாவது கொஞ்சமாகப் பேசி கூடுதலாக செயல்படும் வழக்கத்தினை தன்



1985ல் சங்க அலுவலகத்தில் PVK ஐயா உரையாற்றுகிறார்.

வாழ்நாட்களிடையே மிகக் கண்டிப்பாகக் கடைப்பிடித்தவர். நேரத்தை மிகச் சரியாகப் பயன்படுத்திய நிர்வாகி.

## சமூகவியல்

தோட்டத் தொழிலாளரையே தனது முதன்மைச் சமூகமாக ஏற்று அவர்களின் நலன்களுக்காகப் பாடுபட்டவர். தான் சார்ந்த சங்கத்தின் வளர்ச்சிக்காக சமூக மட்டத்திலேயே சிந்தித்தவர்.

தனக்கு முன் வாழ்ந்து வழிகாட்டிய தலைவர்களை சமூகத்தின் முதன்மையாளராக ஏற்றவர் என்கிற வரிசையில் முதலிடத்தை வகிப்பவர்.

## ஆன்மீகம்

ஆன்மீகத்துறையில் அவர் மிகச் சிறந்து விளங்கினார்.

முருக பக்தர். பக்கத்தில், அமைந்துள்ள மாணிக்கப் பிள்ளையார் கோவிலை வணங்கிய நிலையிலே அவர் தினசரி முருகன் கோவிலுக்குப் போய் பூஜை செய்துவிட்டு பணிகளை ஆரம்பிப்பது வழக்கம்.

ஆன்மீக நூல்களை மிக ஆழமாக வாசிப்பார்.

ஒரு தோட்டத் தொழிலாளி எப்படி ஆன்மீகப் பண்புகளுடன் வாழ வேண்டும் என்பதற்குத் தானே ஒரு முன்னுதாரணமாக, வழிகாட்டியாக வாழ வேண்டும் என்பதற்கான தோற்றத்தை எப்போதும் வெளிக்காட்டிய வண்ணம் இருப்பார் என்பது உண்மை.

பூஜை, பிரார்த்தனையில் நம்பிக்கை வைத்து வாழும் தலைவராக நான் அவரைப் பார்க்கின்றேன். எல்லா மதங்களையும் பணிவுடன் ஏற்று வணங்கும் பெருந்தகை.

## இலட்சியம்

குறிப்பிடத் தக்கதாக அவருடைய இலட்சியம் என்பது அக்கால கட்டத்தில் - அதாவது 1973ல் NUW பொதுச் செயலாளர் பொறுப்பினை ஏற்றவுடன் - தமது தலைவரான அமரர் வி.கே. வெள்ளையன் அவர்களையே தொழிற்சங்கக் குருவாக ஏற்று அவர் வழியிலேயே செல்வதாக உறுதி கொண்டார். அடிக்கடி அவரை மனதில் வைத்துப் பூஜிப்பது அவரது அன்றாடக் கடமைகளில் ஒன்றாக இருந்துள்ளது.

சிறந்த கல்விமானும், மலையக அறிஞருமான அமரர் சி.வி.வேலுப்பிள்ளை அவர்களை பின்பற்றுவதிலும் அவருக்கு மிகப் பெரிய கடமைப்பாடு இருந்தது.

ஒரு இலட்சியவாதியின் உண்மையான நோக்கங்கள் பல வழிகளிலும் தடைப்படலாம். சமூகக் கோட்பாடுகள் காலத்துக்குக் காலம் மாறுகின்றன. இலட்சியங்களுக்கு இந்த மாற்றங்களும் இடையூறு செய்யலாம். இந்த நிலை PVK அவர்களுக்கும் ஏற்பட்டது. எவ்வளவு தான் நுணுக்கமாக ஒன்றைச் செய்தாலும் மனித முரண்பாடுகள் இருந்து கொண்டே இருக்கும்.

அவற்றை சந்திக்கும் சந்தர்ப்பங்களில் அவர் திடமாகவே முடிவுகளை மேற்கொண்டுள்ளார் என்று அறியப்படுகிறது. தடைகளைத் தாண்டுவதற்காக சில சமயங்களில் கடுமையாகவும் நடந்து கொள்ள வேண்டியிருந்திருக்கின்றது. இவற்றை இரும்பு மனம் கொண்டு தாண்டியிருக்கின்றார்.

இக்கருத்துகளை தற்போது பணியாற்றின் கொண்டிருக்கும் அவரது உதவியாளர்கள் குறிப்பிட்டார்கள். முடிவெடுக்கும் சமத்து அவருக்குரியதாக - இந்த வகையில் இருந்துள்ளது.

## பொதுச் செயலாளரும் மேதின நிகழ்வுகளும்

தொழிலாளர்க்கும் அவர்கள் சார்ந்த தொழிற்சங்கங் களுக்கும் மிக முக்கிய தினமாக மேதினம் அமைந்துள்ளது. அரசுகள், அமைப்புகள், கட்சிகள், தொழிற்சங்கங்கள் மிக உற்சாகமாகவும், பரந்த அளவிலும் மேதின நிகழ்வுகளை நகரப் பொது அரங்குகளில் ஏற்பாடு செய்து சங்கத்துக்கும், தொழிலாளர்க்குமான நல்லுறவை பலப்படுத்திக் கொள்கின்றன.



**மேதின நிகழ்வின் போது PVK தொ.தே.ச. ஆதரவாளர்கள் மத்தியில்.**


ஒரு தொழிற்சங்க மேதினத்துக்கான கருப்பொருளையும் அதன் விரிவாக்கத்தையும், நிகழ்ச்சி நிரலையும் நன்கு திட்டமிட வேண்டிய பாரிய பொறுப்பு சங்கத்தின் பொதுச் செயலாளரைப் பெரிதும் சார்ந்துள்ளது. இதற்கமைய தொழிலாளர் தேசிய சங்க மே தினங்களும், அதன் வெற்றிகளையும் நிர்வாகக் குழுவினரோடும் ஊழியர் உறுப்பினரோடும் சேர்ந்தே முடிவெடுத்து முன்னெடுத்துள்ளார். மிக உறுதியான ஒத்துழைப்புகளை செயலாளரின் உதவியாளர்கள் தலைவரின் பணிப்புரையுடன் கொடுத்திருப்பதாக அறியப்படுகிறது.

மலையக மே தினங்களில் கடந்த பல வருடங்களாக முழக்கம் செய்வது சம்பள பிரச்சினையே! கிட்டத்தட்ட நாற்பது வருடங்களாக முழங்கிக் கொண்டிருந்த குடியுரிமை விவகார ஓசை தணிந்துவிட்டது. எனினும் சம்பளக் கோரிக்கை அனுபவ அளவிலே இதுவரையிலும் ஏற்கப்பட்டு வருகிறது. தோட்டத் தொழிலாளர் வாழ்வில் இது ஒரு பிற்படுத்தப்பட்ட நிலைப்பாடாகும்.

மே தின விழா எல்லா சங்கங்களைப் போல PVK யைப் பொதுச் செயலாளராகக் கொண்ட தொழிலாளர் தேசிய சங்கத்துக்கு ஒரு போராட்ட, ஊர்வல, வைபவ தினம்.

ஒரே தினத்தில் நாட்டிலுள்ள அனைத்து சங்கங்களும், அரசியல் கட்சிகளும், அமைப்புகளும் அங்கங்கே கூட்டம் கூடி கோரிக்கை விடுக்கும் தொழிலாளர் வைபவமாயிற்றே!

ஒரு மிதவாத தொழிற்சங்க, அரசியலமைப்பு என்ற வகையிலும் தொழிலாளர் தினத்தில் மட்டும் அவரவர் மிக ஆக்கிரோஷமாகவே உரையாற்றுவர் என்பது இயல்பானதொரு விடயம். தொ.தே.ச. மே தினப் படங்களைப் பார்க்கின்றபோது,



**தொழிலாளர் தேசிய சங்க மேதின விழா மஸ்கெலியா நகரில்.**

PVKயின் மே தின உரை என்பது மிக வெப்பக்காற்றாய் இருந்துள்ளது எனக் கூற முடியும். அதனை சற்று வித்தியாசமாகவே பார்க்க முடிகிறது. தொழிலாளர் உரிமைகளை வென்றெடுக்க அவருடைய உணர்வுபூர்வ பேச்சுகள் மக்களை அதிகமாகக் கவர்ந்திருக்க வேண்டும்.

படங்களை ஆழமாகப் பார்த்தால் அவற்றில் மக்களின் எதிரொலி உணர்ச்சிபூர்வமாகவே உள்ளது.

மக்களோடு மக்களாக மக்களின் நன்மைக்காக வாழ்வதென்பது சற்று முரண்பாடான வாழ்க்கைச் சூழல்தான், மலையகத்தில். அதனை பக்குவமாகத் தாண்டி வந்தவர் என்ற ரீதியில் அவர் பாராட்டுக்குரியவராகிறார்.




பொதுச் செயலாளர் அவர்களுக்கு தொழிலாளர் வரவேற்பு மாலையணிவித்தல்.



அமரர்களான வி.கே. வெள்ளையன், சி.வி. திரு உருவப் படங்களுக்கு PVK, காரியாலயத்தில் மாலையணிவித்தல்.



சங்கத்தின் வருடாந்த நிகழ்வில் நிர்வாகக் குழுவினருடன்.



1986, நோர்வுட் நகர மே தின ஊர்வலத்தில்.

# 12. வாழ்ந்தவரை வாழ்த்தும் வரியமுதம்

PVK என்ற பிரளய முகத்தினுள்ளே பிள்ளை மனமொன்றைக் கண்டேன்

எல்லையில்லாத் தோட்டத் தொழிற்சங்கப் பயணத்தில்

சொல்லொணாத் துயருடனே மாய்ந்தவர் தான் எத்தனையோ

ஒதுங்கிப் போய் ஓரம் சேர்ந்து ஓய்ந்தவர் தான் எத்தனையோ

பதுங்கவும் தெரியாமல் பாயவும் தெரியாமல் பயனற்றுப் போனவர்கள்!

எல்லா ஊழியர் பற்றியும் ஏடெடுத்து சீர்தூக்க என்னால் இயலவில்லை

எதுவும் சொல்லாது செயல்படும் அனைவருமே என் நண்பர்கள்தான்

ஐம்பது வருடங்களாய் நான் பார்த்த நயமான மனிதர்களில் இயம்புவதற்கு இதழ்களைத் தந்த இனிதான மனிதரின் பிள்ளைகள்

இனிவரும் தலைமுறைக்கு தரவாக நூலொன்று கேட்க ஆருயிர் நண்பர் அ.ஆ.இ.வின் ஆல்போன்ற அங்கீகாரத்துடனே

வேருடனே விரைந்தெடுத்து ஆய்ந்தறிந்து பார்த்த போது வெறுமனே ஓர் மனிதரில்லை இவரென்று ஆழ்மனம் ஆர்ப்பரிக்க

என்ன சொல்வேன் சாதனையை

எளிய குடிசையில் முப்பத்துமூன்றில் முன்னதாய் மூத்ததாய் பதினேழு சோதர சோதரிகளுடன் பதினாறாம் பிள்ளையாய் பலமுடனே பிறந்துய்ந்து

சிதறாமல் சிந்தாமல் பதினாறும் பெறப் போகும் ஒருமகனாய்

பள்ளியில் மிகச் சிறந்த மீளறிவை பெற்றதுடன் புள்ளிகளைப் பெறுவதில் புனிதராய்த் தான் நின்று இ.தொ.கா. என்ற இரும்பகத்துப் பாசறையில் இனிதாகத் தொழில் கற்று

இளவயதைப் பயனாக்கி

தட்டச்சு ஊழியராய் உட்புகுந்து உவந்தேற்று உரம் கொண்டு

வாழியவே என்று வளர்ந்தவர்கள் வாழ்த்தைப் பெற உழைத்து

தொ.தே. சங்கம் என்ற தொல்லையில்லாப் பாசறையில் சேர்ந்தமர்ந்து

மாநிலத் தூதராய்த் தேயிலைத் தோட்டங்களில் திரிந்துணர்ந்து

தாழ்நிலை மக்களுடன் தவறாது கலந்துணர்ந்து உரையாடி

தொழிலுறவுச் செயலர் என்ற பதவியினை தோளினிலே சுமந்து

VK வெள்ளையனின் வழிசென்று, CV முன் சிரம்தாழ்ந்து

மாகாண சபையினிலே மக்கள் உறுப்பினராய் மதிப்புடனே

போகாத வெளியுலகு போய்வந்து, பொலிவான அறிவு கொண்டு

முருக பக்தராய் முழுநாளும் வாழ்ந்திருந்து

வளம் பெருக்கி அலுவலக அன்பர்களை ஆதரவாய் நிர்வகித்து

சங்கத்தின் பொதுச் செயலாளராய்த் தலைவராய் பதவிகளை தெளிவாக்கி

இல்லத்து இன்பங்களை இயல்பான உணர்வுடனே உண்மையுடன்

உள்ளகத்துப் பிள்ளைகளை உயர்வான மனிதர்களாய் உலவவிட்டு

கல்விப் பெருங்கடலை கனிவாக நீந்திவர வழிசமைத்து வாழவைத்து

கடமைகள் முடிந்த களைப்பினிலே, கட்டிலின் விளிம்பினிலே தொட்டிலாக எண்ணி

துயில் கொள்ளும் நிலையாய் கட்டிய மனைவியுடன் காணாத வானுலகம் நோக்கி கரைந்து விட்ட கலைஞரே

மறைந்துவிட்டமாமனிதரே! வாழ்கிறது உங்கள் வாழ்க்கைக் கனவுகள்!

- தி.ரா.கோ. -

# 13. பணிமனையமுதம்

## PVK நிர்வாக அலகு

✱ பணிமனை என்ற காரியாலய முறைமை என்பது நம் முன்னோர்களை அழைத்து வந்து கடமைக்கு உட்படுத்தி, கம்பனித் தோட்டங்களை அவர்களின் உழைப்பைக் கொண்டே நிர்மாணித்த ஐரோப்பிய தோட்ட உரிமையாளர்கள் (Properiotery Planters) தமது நிர்வாகத்துக்காக வைத்துக் கொண்ட செயலக அறைதான். அதற்கான உபகரணங்களைத் தேர்வு செய்து மிக வசதியாக அமைத்துக் கொண்டு தோட்டங்களை நிர்வாகம் செய்தனர் என்பது வரலாறு.

✱ எப்போதும் அமர்ந்து அமைதியாக அலுவல் பார்க்கும் மாநிலப்பிரதிதி, உதவிச் செயலாளர் என்று முகப்பு மனையை அமைத்திருக்கும் பாணி சிறப்பானது.

உள்ளே நுழைந்தவுடன் பிரதான பணிமனை, எவ்வித சலனமின்றி கடமை புரியும் விதம் எம்மை வெகுவாகக் கவருகிறது.

ஒரு தொழிற்சங்கத்தில் ஊழியர் உத்தியோகத்தர்களின் கூர்மையான வேலைகள் நம்மைக் கவருகிறது.

✱ தொழிலாளர் தேசிய சங்கப் பணிமனை அமைந்துள்ள அநேக நகரத்தில், பிரதான இடத்தில் அதாவது ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் ஆலய அடிவாரத்தில் பிரதான கொழும்பு சாலையினருகே, பணிமனை மிகச்சிறப்பான இடத்தில் அமைந்துள்ளதென்பதை யாவரும் ஒப்புக் கொள்வர்.

PVK அவர்கள் தனது தலைவர்களின் வழியைப் பின்பற்றி தனது சக அன்பர்களுடன் உற்சாகமாக முன்னெடுத்துச் சென்று அமைப்பை கூட்டிச் செல்ல காரியாலய அமைப்பு கச்சிதமாக உதவியது எனலாம்.

✱ நுழைவாயிலின் அடுத்த வாசல்வழியாக நுழைந்தால், எப்போதும் அமைதியுடனும் தமது கடமைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும், தையல் வகுப்புச் சகோதரிகள். அட்டன் நகர ஆரவாரங்களிலிருந்து விடுபட்டு, அமைதியான கடமைகளில் ஈடுபட்டு சலனமின்றி பணியாற்றும் வகையில் அந்த இடத்தினை ஒதுக்கி, அவர்களை நிர்வகிக்கும் முறையானது, சமூக ஆய்வாளர்களின் கவனத்தை ஈர்த்த விடயமாகும்.

சபாஷ் NUW.



PVK கம்பீரமாக.

★ வளத்தின் வலது கை உழைப்பு என்று அறிஞர் கூறியுள்ளனர். உழைப்பைத் தனது இதயதீபமாக ஏற்றுக்கொண்டு வாழ்ந்தார். உழைப்பின் பலன் அவருடைய அந்திய காலத்தில் 'திருப்தி' என்ற அம்சமாகக் கிடைத்தது.

ஆகவே மனிதன் தன் கடைசி நிமிடத்தில் விடுகின்ற திருப்தியான மூச்சு தான், வாழ்நாளின் வெற்றி என ஞானிகளால் பிரகடனப் படுத்தப்படுகிறது. இது PVK அவர்களுக்கும் கிடைத்தது பாக்கியமே.

## பணிமனையின் இதர அம்சங்கள்

★ இரண்டு தொகுதிகளைக் கொண்ட கடை அமைப்பிலான காரியாலய அறைகள். மேல்மாடி விரிசலாக ஒரு சிறிய அரங்கைப் போல கீழ் இரு வாசல் கொண்ட அறைகளில் ஒன்று தலைமைக் காரியாலயம். இரண்டாவதில் தற்போது தையல் பயிற்சி நிலையமாக நாலைந்து யுவதிகள் பயிற்சி பெற்றுக் கொண்டிருப்பதைக் காண முடிகிறது. இது ஒரு இயல்பான தொழிற்கல்வியகமாக மிக அடக்கத்துடன் இயங்கும் தன்மையானது நம் மனதைத் தொடுகிறது.

★ கீழ் தளத்து காரியாலயத்து அன்பர்கள் மிகப் பக்குவமாக எம்முடன் உரையாடி, ஒத்துழைப்பு நல்கி PVK பற்றிய விபரங்களை எமக்கு மன நிறைவுடன் கொடுத்துதவினர். காரியாலயத்து கடமைகளில் இச்செயல் மிகவும் வரவேற்கத்தக்க தொன்றாகும். தமது அன்றாட அலுவலகக் கடமைகள் ஆகியவற்றை சற்றே தள்ளிவைத்து விட்டு எமக்கு உதவியமை எம்மை ஆய்வு செய்யும் பணிகளுக்கான பெரும் உற்சாகம்தானே! அலுவலர் வருவோரின் வேண்டுகோளை நிறைவேற்றுவதானது NUWன் மிகச் சிறந்த நிலைப்பாடாகும்.

✸ தலைமைக் காரியாலயத்தில் பணியாற்றிக் கொண்டிருப்பவர்கள் நாம் இதனை அறிவாய்வு செய்ய வந்த நாட்களில், அவர்களால் சேகரித்து வைத்திருந்த மாவலி பத்திரிகைகளின் இருபது வருட இதழ்களை எமக்களித்தனர். அந்த இதழ்களைப் பிரித்து முழுவதையும் ஆராய்ந்தபோது மாவலி வெறும் தொழிற்சங்க இதழாக மட்டும் தோற்றமளிக்காமல் காலத்தின் நிகழ்வுகளை எடுத்துச் சொல்லும் இலக்கிய ஆவணங்களாக அவற்றைப் பார்க்க முடிந்தது எனக்கூறலாம்.

✸ அமரர் C.V.யின் எண்ணங்களைப் பிரதிபலித்த இதழ்களில் மூழ்குவது எமக்கு ஒரு சுகமான அனுபவமாக இருந்தது. இந்த ஆய்வுப்பணிகமளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்ட PVKயின் குமாரர் திரு. க. சத்தியேந்திரனின் 'மாவலி' இலக்கிய நதியில் இறங்கித் தேடும் பாணி எம் மனதைக் கவர்ந்தது என்று கூறலாம்.

PVKயைப் பற்றி பிரகடனம் செய்வதற்கு மாவலி ஆவணங்கள் மிக அழுத்தமான முத்திரைகளாகும். எவ்வளவோ அதன் மூலம் சொல்லலாம். எனினும் சுருக்கித் தர முயல்கிறோம்.

## நூலகம்

✸ பணிமனையின் மிகப் பெறுமதியான அம்சம் மேல்மாடியில் அரங்கில் நிலைபெற்றுள்ள நூலகம். ஒரு தொழிற்சங்கத் தொடர் நிகழ்வுகளினிடையே ஒரு மௌனமாக சங்க விபரங்களையும், கடந்த கால நிகழ்வுகளை எடுத்தியம்பிக் கொண்டிருப்பது பிரதான அம்சமாகும்.

திரு. மைக்கல் செபஸ்டியன், திரு. செபஸ்டியன் பிலிப் ஆகிய இருவரும் அவற்றை ஆய்வு செய்து அலசிப் பார்ப்பதற்கு உதவினர். சங்க மேல்மாடி அரங்கின் மேற்கு மூலையில்

அமைதியாக அடங்கிக்கிடக்கும், நூலக இதழ்கள் பல்வேறு அம்சங்கள் அடங்கிய நூல்கள்.

✱ கிழக்குப்பக்கம் நடு அறையின் நூலக அலமாரி என்பது ஓர் அற்புதமாக சேர்க்கை. அனைத்தும் ஆங்கில நூல்கள்.

அறிவொளி பரப்பும் வகையில் NUW சங்கத்தைத் தொடர்ந்து கொண்டு செல்ல நூலகம், அவற்றில் அடங்கியுள்ள நூல்களும் ஓர் அடிப்படையாக உதவும் என்பதில் ஐயமில்லை.

NUW தொழிற்சங்க நூலகம் அறிவகமே.

✱ மேல்மாடி தலைமைத்துவ அறைகளில் மாட்டப் பட்டிருக்கும் படங்களைப் பார்த்தவுடன் நம்மையறியாமல் பக்தி உருவாகிறது. மறைந்த தலைவர்கள் அமரர் வெள்ளையன், அமரர் சி.வி. அதனைத் தொடர்ந்து அமரர் PVK இந்த மூவரின் படங்கள். களைப்பின்றி பொதுச் செயலாளர் பணியாற்றிய அந்த இருபத்தெட்டு வருடங்களின் ஞாபகங்கள் மிக அர்த்தமுள்ளவை என்று கூற வேண்டும். இதற்கெல்லாம் ஒரு நம்பிக்கையான ஆவணங்களே, நூல்களும், இதழ்களும், மலையக அறிஞர்கள் வாழ்ந்த இடமாக NUW மாடியரங்கத்தைக் கூறலாம்.

✱ தற்போதைய பொதுச் செயலாளரின் உருவப்படம் இருப்பதைக் காணலாம்.

தற்போதைய நிலையில் NUW காரியாலயம், அதாவது செயலாளர் PVKக்குப் பின், ஓர் அழுத்தமான சிந்தனை, செயல்பாட்டுத் தாக்கத்தை உணர முடிகிறது.

இந்த நிலை எமது கருத்தாகக் கீழ்க் காணும் விடயத்தை முன்வைக்கிறோம். V.K.V., சி.வி., PVK ஆகியோரின் நினைவுகளுடன் நவீன காலத்துக்குரிய புதிய சிந்தனைகள்

பற்றிய நிபுணத்துவ பரிசீலனைகளுடன் செயல்பாடுகளை முன்னெடுத்தால், வெற்றி நிச்சயம் எனக் கூறுகிறோம்.

★ பணிமனையில் தொழிற்சங்க செயல்பாடுகளில் பொறுப்பான பதவி வகித்த NUW பிரமுகர்களில் திரு. பெருமாள், திரு. இராஜமாணிக்கம், திரு. த. ஐயாதுரை போன்றோர் தலைமைப் பதவியிலும் ஏனைய பதவிகளிலும் அணிசெய்து பணியாற்றியவர்கள் எனக் குறிப்பிடலாம். இன்னும் பலர் எமது ஆய்வுக்கும், தேடலுக்கும் உட்படாதவர்கள் இருந்திருக்கலாம். பணி செய்து வெளியேறிய, அல்லது மரணித்த யாவர்க்கும் இந்த P.V.K. ஆய்வு நூல் அழுத்தமான ஞாபகங்களைப் பதிவு செய்யும் என்று நீள நினைக்கின்றோம்.

★ Pocket Meetings என்ற சிறு கூட்டங்களை அடிக்கடி நிகழ்த்தி தமது சங்கத்தின் நடை முறைகள் பற்றி அடிக்கடி பேசுவார் என்ற விடயத்தை சங்க பிரமுகர்கள் கூறினர். அந்தக் கூட்டங்களில் பொதுச் செயலாளர் என்ற வகையில் அவருடைய கருத்துகள் மிக கவனமாக முன்வைக்கப்படும்.

சங்கத்தின் நகர்வுகளுக்கு இது ஒரு சிறந்த நடை முறையாகும். ஒரு தொழிற்சங்க ஓட்டத்துக்கு இத்தகைய காத்திரமான, தொடர்ச்சியான கூட்டங்கள் அடிப்படையாக உதவிக் கொண்டிருக்கும்.

ஒரு மரபுப் பாணியிலான காரியாலயமாகவும், தையல் தொழிலகமாகவும், வெளியார் கண்களுக்குப் படாத நூலகமாகவும் தற்போது அனுபவம் பெற்ற தலைவர்களால் இயங்கி வரும் இத்தொழிற்சங்கத்தின் நான்கு சுவர்களுக்கு மத்தியில் அமரர்களான மூன்று தலைவர்களின் ஆன்மா வாழ்ந்து கொண்டிருப்பதாக நாம் உணர்ந்தோம்.

எமது உணர்வுகளுக்கு சாட்சியாகப் பல ஆதாரங்கள் அங்கே உண்டு. அவை நவீன தொழில் நுட்பப் பிரதியாக்கத்துக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

★ NUW காரியாலயம் அட்டன் டிம்புல வீதியில் அமைந்திருந்தாலும் அதன் கிளைக் காரியாலயங்கள், பதுளை, அப்புத்தளை, மாத்தளை, புசல்லாவ, கலகா, நாவலப்பிட்டிய, நூரளை, நானு ஓயா, ராகளை, மஸ்கெலிய, பொகவந்தலாவ, நோர்வுட், தலவாக்கலை, அக்கரப் பத்தனை, அப்கட், புளியாவத்தை, புத்தனை போன்ற பெரிய, சிறிய நகரங்களில் ஏற்படுத்தப்பட்டன.

பணிமனைகளின் நிர்வாக ஒழுங்குமுறை, அட்டன் தலைமையகத்தில் சிறப்பாக நடத்தப்பட்டு வருகிறது.

வேலை நிறுத்தங்கள் என்பன தொழிற்சங்கப் பயணத்துக்கு மிக முக்கியமான அம்சமாகும்.

1972, 1975 காலங்களில் NUW தோட்டத் தொழிலாளர்கள் சார்ந்தவர் வேலை நிறுத்தங்களில் ஈடுபடுத்த தயார்செய்யப் பட்டார்கள். அந்த காலகட்டங்களில் தனது சங்கத்தலைவர், பொருளாளர், உறுப்பினர்கள் ஆகியோருடன் சோந்து ஆற்றிய பணிகள் மிகவும் ஆரோக்கியமானவை. குறிப்பாக தோட்டங்கள் அரசு சுவீகாரம் என்ற கொடுமையே அந்த கால கட்டத்தில், வறுமையுடன் வாழ்ந்த தோட்ட மக்களை வாட்டியது என்று எம். செபஸ்தியன் அவர்கள் கூறுகிறார்.

★ PVK தொழிலுறவுச் செயலாளராக இருந்த காலத்தில் திரு. இராஜமாணிக்கமே பொதுச் செயலாளராகப் பணியாற்றியுள்ளார். இந்த காலகட்டத்தில், ஆளுமை, வினைத்திறன் ஆகியவற்றை கற்றுக் கொண்டார். பெருமாள்

அவர்களின் நம்பிக்கையினை வெகுவாகப் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதொரு அம்சமாகும்.

ஆகவே அப்போதைய சூழல் ஓர் இளைஞர் நடுத்தர வயதுடைய தொழிற்சங்கவாதியின் இயல்பான சமூகக் கல்வி மேலோங்கியிருந்துள்ளது.

இன்றும் NUW தலைமைக் காரியாலயத்தில் சிறப்பாகப் பின்பற்றப்பட்டு வருகிறது. அந்த நிர்வாக ஒழுங்காக இன்று உள்ளது.

இவற்றுக்குக் காரணமான முன்னாள் தலைவர்கள் அமரர் V.K.வெள்ளையன், அமரர் C.V., அமரர் P.V.K. மூவருடன் இன்றைய தலைவர், பொதுச் செயலாளர், பிரதிப் பொதுச் செயலாளர் மற்றும் இன்றைய நிதிச் செயலாளர் மிகவும் உற்சாகமான, பொறுப்புடனான செயல்பாடுகளாகும் என்று அதன் உறுப்பினர்கள் கூறுகின்றனர்.

ஆக NUW என்ற மிதவாத அரசியல் தொழிற்சங்க அமைப்பு மென்மையாக வாழ வகுத்துள்ள தலைவர்களின் நிரந்தரமான பட்டியலில் நமது P.V.K. மிகப் பொருத்தமாக அணிசேர்க்கிறார். காலமாற்றங்களுக்கு ஏற்ற வகையில் அபிவிருத்தியடைவது ஒரு தொழிற்சங்கத்தின் கடமை என உணர்ந்துள்ளார். அத்தகைய உணர்வுக்கு உணவூட்டும் செயல்பாடுகள் தனது காலத்துக்குப் பின்னும் ஏற்படும் என நம்பிக்கையுடன் வாழ்ந்தார் எனக் கூறுவதில் பொருத்தம் உள்ளது.

# 14. வல்லமை கொள் சமூகமாகி வளமுடனே வாழ்வோமாக

மலையகம் என்பது மதிமுகம்
விலையில்லா மாணிக்கம் நிலத்தில் உண்டு
மனித வாழ்விலும் நிறைவே கொண்டு
மாண்புறும் மக்கள் வாழ்ந்திடும் பூமி
நூற்றாண்டு கடந்தும் மாறாமல்
காற்றாய்ப் பறக்கும் கால்களே
கடமைகள் செய்ய விழைந்திடும்
உடமைகள் கொஞ்சமே என்றாலும்
உழைப்பதில் பஞ்சமில்லை தான்
எடுப்பார் கைப்பிள்ளை யென்று கை
கொடுப்பாரின்றி வாழ்கின்ற குழுவிற்கு
பணி செய்ய வந்ததே தொழிற்சங்கம்,
அணிகள் பல கொண்டு வந்த
கால நதியினிலே அனைவரும்
வாழ வழிதேடும் பறவைகளாய்
பறந்தே செல்கின்றோம்
மெய் மறந்தே ஓடுகின்றோம்.

*மறைந்து போன மாணிக்கங்கள்*
*விரைந்தே ஓடும் விதியினிலே*
*கரைந்துபோன கனவுகள் எத்தனையோ*
*தொழிற்சங்கத் தோட்டங்களில்*
*விழிப்புற்ற மக்களின் வேதனைகள் நீங்கினவே*
*விருப்பங்களும் மேடையேறினவே*
*துடுப்பாக நிற்கும் சங்கங்கள் அனைத்தையும்*
*கடுகடுப்பாக நோக்காமல் கனிவுடனே ஏற்று*
*குற்றங்குறை காண்பதையே குடியாகக் கொள்ளாமல்*
*முற்றும் துறந்தவராய் மூழ்காமலும் இருக்காது*
*நல்லதை ஏற்று தீயதை மறந்து*
*வல்லமை கொள் சமூகமாக வளமுடனே வாழ்வோமாக*

(P.V.K. வாழ்வியலை. ஆராயவந்தபோது சின்னஞ்சிறிதான என் மனதினிலே சிறகெடுத்து பறந்து வந்த கவிதை இது.)

**- தி.ரா.கோ. -**



# 15. PVK பற்றி அன்பர்கள் கூறியவை

## திரு. மைக்கல் செபஸ்டியன்

(தற்போதைய நிதிச் செயலாளர்)

1955. நாவலப்பிட்டி இ.தொ.கா. காரியாலயத்தில் சாதாரண அலுவலர்களாகப் பணியாற்றத் தொடங்கினோம். அவர் என்னை விடவும் மூத்த அலுவலர். எனக்கு - தொழிற்சங்கப் பணிகளுக்கான ஆரம்பகால அலுவலக வழிகாட்டி.

அந்த கால கட்டத்தில் இலங்கை – இந்திய / பாகிஸ்தானிய சட்டத்துக்கேற்ற இலங்கை பிரஜாவுரிமை மனுக்களை தோட்டத் தொழிலாளர்க்காக நிரப்ப வேண்டியதொரு உத்தியோகத்தராகவே அவர் இ.தொ.கா.வில் நியமிக்கப்பட்டார். அவர் நியமிக்கப்பட்ட இரண்டு மூன்று வருடங்களின் பின்னால் நான் நியமிக்கப்பட்டேன்.

அவர் அப்போது மிகத் தகுதி வாய்ந்த தட்டச்சு செயலகர். தட்டச்சிலும் Touch System என்றழைக்கப்படும் நுட்பக்கல்வியைப் பெற்றிருந்தார். அதனை எனக்கும் பல கட்டங்களில் பயிற்றுவித்தார். பயிலுனராகிய நான் அவரிடமிருந்து கற்றுக் கொண்டேன்.

நூற்றுக் கணக்கான விண்ணப்பப் படிவங்களை மிக வேகமாகவும் ஓய்வின்றியும் நிரப்பி தன் தொழிலுக்கு முத்திரை பதித்தார்.

நாவலப்பிட்டியில் இ.தொ.கா. காரியாலயம் தொலஸ்பாகை சாலையில் அமைந்திருந்தது. அங்கிருந்து நேரடியாக அட்டன் காரியாலயத்துக்கு மாற்றம் பெற்றோம்.

அட்டன் வந்தபின்னே எனது பதவியும் உறுதியானது. ரயில் நிலையத்துக்கு மேலாக, ஒரு தகரத்திலான கட்டிடம் எனக் கூறலாம். 1955, 1956, 1957, 1958 என்ற ஆண்டுகள் எனக்கு நினைவிருக்கின்றன. அவருடன் P.பெருமாள் அவர்களும் சேவையாற்றினார்கள். இரவு பகலாகக் கூட சில தினங்களில் பிஜா உரிமை விண்ணப்ப வேலைகள் நடக்கும். PVK களைக்காமல் வேலை செய்தார். 1958ல் பிரஜாவுரிமை விண்ணப்பப்படிவ வேலைகள் குறைந்தன.

பின் மாத்தளை பிரதிநிதியாகச் சென்று, அதற்குப்பின் நுவரஎலிய வந்து (மாநிலப் பிரதிநிதியாக), பின் டிக்கோயா மாநிலப் பிரதிநிதியாக (கால கட்டத்தில் சற்று முன்பின் இருக்கலாம்)

டிக்கோயாவில் இருக்கும் அமரர் V.K.வெள்ளையன் இ.தொ.கா.விலிருந்து விலகினார். இச் செயல் PVK மனதைப் பாதித்த விடயம். ஆகையால் வெள்ளையன் விலகி குறுகிய காலத்தில் PVKயும் இ.தொ.காவிலிருந்து வெளியேறி வெள்ளையன் அணியுடன் (P.பெருமாளும்) சேர்ந்தார்.

1964ல் டிக்கோயாவில் பணியாற்றும் போதே, அவருடைய திருமணம், மிக எளிமையான முறையிலும், கலாச்சார அம்சங்களுடனும் கலஹாவில் நடைபெற்றது.

டிக்கோயா ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தின் முன்னால் ஒரு வாடகை வீட்டில் தன் மனைவியுடன் குடியேறினார்.

1965ல் அமரர் வெள்ளையன் அட்டன் டிம்புல வீதியில் ஆரம்பித்த தொழிலாளர் தேசிய சங்கத்தில் அவ்வருடமே சேர்ந்து பணியாற்றத் தொடங்கினார்.

தோட்டத் தொழிலாளியாகிய P. பெருமாள் அவர்களைத் தலைவராகக் கொண்ட புதிய தொழிற் சங்கத்தில் V.K. வெள்ளையன் பொதுச் செயலாளர் பதவியை ஏற்றார்.

1966ல் கவிஞர் சி.வி நிர்வாக பொறுப்பாளராகவும், PVK தொழிலுறவுச் செயலராகவும் நியமிக்கப்பட்டார்.

தனித்திறன், ஆளுமை, கல்வித் தரம், ஆங்கில மொழித்திறன், தொழிலாளர்மேல் அன்பு, மேலதிகாரிகளின் நன்மதிப்பு, நம்பிக்கை போன்ற அம்சங்கள் தலைவர் V.K. வெள்ளையனைக் கவர்ந்தன. இது தொடர்ந்து C.V. க்குப் பின் 1973ல் சங்கத்தின் பொதுச் செயலாளரானார். இப்பணி 28 வருடங்கள் தொடர்ந்தன. மிகச் சிறந்த முறையில் இந்த இடைக்காலத்தில், கூட்டுக் கமிட்டிச் செயலர், மத்திய மாகாண சபை உறுப்பினர் என்ற பாரிய பொறுப்புக்களை ஏற்றார். எல்லாருடனும் இனிமையாகவும், கண்டிப்பாகவும் பழகினார். சங்கத்தின் உறுப்பினர்களாக சுமார் 30,000 பேருக்கு மேலாக இருந்தனர். V.K.V. மற்றும் C.V. வழியைப் பின்பற்றினார்.

**திரு. துரைசாமி,** நீர்கொழும்பு

முதலில் இந்தோ / பாகிஸ்தான் பிராஜாவுரிமை சட்டத்துக்கான, தோட்டத் தொழிலாளின் விண்ணப்பப் படிவங்கள் நிரப்பவே இ.தொ.கா. அமைப்பினால் பதவி நியமனம் கொடுக்கப்பட்டார்.

அந்தப் பணிகளை மிகவும் சிறப்பாகவும் வேகமாகவும் செய்து தனது மேலதிகாரிகளால் தகுந்த பாராட்டைப் பெற்றார்.



1986 மேதின விழாவில் தலவாக்கலை நகர அரங்கம்.
சிம்மக்குரலில் முழங்குகிறார் P.V.K. ஐயா.

அப்போது நாவலப்பிட்டி திரு. அருணாசலம் என்ற அதிகாரியிடமிருந்தே தொழிற்சங்க விடயங்களை அதிகமாகப் பெற்றார்.

நான் பிரதேச அதிகாரியாக தொ.தே.சங்கத்தில் இருந்த போது அவருடைய வேகத்தையும் விவேகத்தையும் கண்டு வியந்ததுண்டு.

1964ல் அவருடைய திருமணப் பதிவு நடந்தது. அந்தச் சகோதரி வந்த பிறகே அவர் வாழ்க்கையில் நல்ல முன்னேற்றங்கள். எந்த சிறு விடயமானாலும் தன் மனைவியிடம் சொல்லி ஆலோசனை கேட்பார் என்று கூறுவார்.

எனக்கு மிக அழுத்தமாக அவரைப் பற்றிக் கூறுவதற்கு ஒன்று உள்ளது.

அவருடைய மேசைத் தீர்மானம். அதாவது Table Decision இந்த விடயத்தில் அவர் மிக வல்லவர்.

சிரிமாவோ ஆட்சியில் 1977ல் தலவாக்கலை டெவன் தோட்டத்தில் நடந்த தேயிலைத் தோட்டங்களை அரசின் சுவீகரிப்பிலிருந்து பாதுகாப்போம் என்ற தொழிலாளர் போராட்டத்தில் தலைவர் தொண்டமான் வழியைப் பின்பற்றி நமது சங்கமும் அந்தப் போராட்டத்தில் முழுமையாகக் குதிக்க வேண்டும் என மேசைத் தீர்மானத்தை எடுத்து உறுப்பினர்களை அங்கீகரிக்கச் செய்தார்.

## திரு. செபஸ்டியன் பிலிப்

(NUW தற்போதைய பிரதிப் பொதுச் செயலாளர்)

1965லிருந்து ஸ்தாபக உறுப்பினரில் ஒருவராகத் திகழ்ந்த தலைவர் PVK அவர்கள் மறைவு எங்களுக்கும், சங்கத்துக்கும் ஒரு பேரிழப்பு. அமரர் PVK கருணையும் கண்டிப்பும் மிக்க பெருந்தலைவர் V.K.வெள்ளையன்அமரர் சி.வி. போன்ற அரசியலறிஞர்களிடம் அவர் பெற்றுக் கொண்ட பாடங்கள் ஏராளம். அவர் ஒரு தனிப்பட்ட கல்விமான், தமிழ், ஆங்கிலத்தில் கடிதங்கள் தயாரிப்பதில் நிறைந்த அனுபவம், உண்மை, நேர்மை இவையெல்லாம் சேர்ந்த மிகப் பெரிய மனிதர்.

1965 ஏப்ரல் 28ம் திகதி தொழிற்சங்கமாகப் பதிவாகி உருவான தொழிலாளர் தேசியசங்கத்தின் முதல் மேதினம் 1.5.65ல் கொண்டாடியபோது தலைவர் திரு. பெருமாள், ஸ்தாபக பொதுச் செயலாளர் V.K. வெள்ளையன் ஆகியோருடன் பாரிய தொடர்பு கொண்டிருந்தார்.

குறுகிய காலத்துக்குள் தொழிலாளர் சங்கத்துடன் வலுவாக இணைந்து தொழிலுறவு செயலரானார். அப்போதைய நிர்வாகப் பொறுப்பாளர் மலையக அறிஞர் அமரர் சி.வி. யின் அறிவாற்றலை இலகுவில் பெற்றுக் கொண்டார்.

சிறந்த செயல்வீரரான PVK தனது மேடைப் பேச்சு வன்மையால் யாவரையும் கவர்ந்தார். அதனால் NUW அவரைத் திறம்படப் பயன்படுத்தியது.

அதன் காரணமாக C.V. மறைந்த பின், பாரிய இலட்சியங்களைக் கொண்டு செயல்பட்டார்.

1973ம் ஆண்டு பொதுச் செயலாளராகப் பொறுப்பேற்று பணிபுரியத் தொடங்கினார்.

காரியாலயம் ஒரு புதுப் பொலிவுடன் சுறுசுறுப்பாக இயங்கத் தொடங்கியது. தற்போதைய பொதுச் செயலாளர் திரு. S.A.K. அவர்கள் பொறுப்பேற்கும் வரை பதவியினைத் திறம்பட வகித்தார்.

அட்டனை தலைமைச் செயலாகமாகக் கொண்டு செயல்பட்ட NUW க்கு P.V.K. அவர்கள் ஓர் நீண்ட காலத் தலைவர். 2002 தலைமைப் பதவியினை நோய்வாய்ப்பட்ட போதும் ஏற்றுக் சுமார் 35,000 தொழிலாளர்கள் இவர் பொதுச் செயலாளராகப் பணி செய்த உச்ச கட்ட பகுதியில் இருந்தார்கள். எங்களை வழி நடத்திய விதம் மிக, மிக உயர்வானது. சேவையில் ஓர் உயர் தன்மை, நேரம் தவறாமை, அவசியமான காரியங்களில் மட்டும் ஈடுபாடு.

தோட்டத் தொழிலாளர் பிரச்சினைகளைத் தீர்ப்பதில், சிறந்த அணுகுமுறை, தொழில் நீதிமன்றங்களில் தொழிலாளர்க்காக வாதிடும் சிறந்த முறைமை, அவற்றில் பாரிய

வெற்றிகள். சேவைகால, வயோதிப கால உதவிப் பணம் ஆகியவற்றைத் தொழிலாளர்க்கு விரைவாகப் பெற்றுக் கொடுத்த செயல் வீரர். மொழி ஆளுமை மிக்க மாமனிதர்.

எனது தொழிற் சங்க வாழ்வில் மறக்க முடியாத தலைவர். இன்றும் சங்கக் காரியாலயத்தின் எப்பகுதியிலும், தோட்டத் தொழிலாளர் மனங்களிலும் அவருடைய சிம்மக்குரல் ஒலித்துக் கொண்டிருக்கிறது என்பதை மிகத் தெளிவாக குறிப்பிடுகிறேன். எனக்குள் அவர் சாதாரண ஊழியராக, பொதுச் செயலாளராக, தலைவராக வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

## திரு. பெ. நல்லையா,
பொகவந்தலாவ அமைப்பாளர், NUW

1954 நாவலப்பிட்டி இ.தொ.கா. காரியாலயத்தில் பிரஜாவுரிமை மனுக்கள் நிரப்புவதற்கும், மற்றும் டைப்பிஸ்ட் அலுவலராகவும் நியமிக்கப்பட்டார். ஓய்வு ஒழிவின்றி தீவிரமாக சேவையாற்றும் இளைஞராக விளங்கினார்.

அவருடைய கடின உழைப்பே அவரைப் படிப்படியாக உயர்த்திக் கொண்டு வந்தது.

1965ல் NUW சங்கத்தில் சேர்ந்த போது புதிய வேகம், சாதுர்யம், விவேகம் நிலை பெற்றது.

தோட்டத் துரைமாருடன் தெளிவாக ஆங்கிலத்தில் உரையாற்றி பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கும் வல்லமை கொண்டவர். அதன் அடிப்படையில் எட்டு வருடங்களுக்குப் பின் பொதுச் செயலாளரானார்.

1958 C.W.C. மாநிலப் பிரதிநிதியாக சிறிது காலம் பணியாற்றிய போது அங்கத்துவர்கள் உற்சாகமாக இயங்கினர். அவர்கள் எண்ணிக்கையும் கணிசமான அளவு அதிகரித்தது.

அன்றைய காலகட்டத்தில் தொழிற்சங்கங்கள் தொழிலாளர்களுடன் உறவு வைத்துக் கொள்வதில் அதிக தடைகள் இருந்தன. அந்தத் தடைகளை தன் மேலதிகாரிகளின் ஆலோசனைகளை ஏற்று, நிபுணத்துவ முறையில் அணுகினார்.

ஒரு ராஜதந்திரம் எப்போதுமே அவரிடம் இருந்தது. திரு. வெள்ளையன் அணியில் சேர்ந்து NUW ல் பணியாற்ற வந்தபோது அவரின் நேர்மையான அணுகுமுறை எல்லாரையும் கவர்ந்தது.

பேரறிஞர் சி.வி., தொழிற்சங்க மேதை வெள்ளையன் இதற்கு அடுத்தபடியாக இவரே விளங்கினார். இவரோடு பலரும் பணியாற்றினர். இவரது வாழ்க்கை வரலாறு ஆராயப்படுவது சிறந்த எடுத்துக்காட்டாகும்.

## திரு. M.S.நாராயணசாமி

மாநிலச் செயலாளர், NUW

PVK அவர்களின் பொதுச் செயலாளர் பதவிக் காலத்தில் மிக அக்கறையுடனும், மனஉறுதியுடனும் கட்டிக் காத்து வந்தார். குறிப்பாக மேதினம், மற்றும் சங்கத்தின் மாநாட்டு வைபவ காலங்களில், மிக நுணுக்கமாக தனது வேலைத்திட்டங்களை முன்னெடுத்துச் செல்வார்.

அவருடைய மேடைப் பேச்சு மிகவும் உயர்தரமானது. தனது சிம்மக்குரல் கொண்டு சிறப்பான உபயோகமான கருத்துக்களுடன் அவர் ஆற்றிய உரைகளை எம்மால் மறக்க முடியாது. அவருடைய மேடைப் பேச்சில் என் மனம் அதிகமாக ஈடுபடும். அதனால் கவரப்பட்டே இந்தச் சங்கத்தில் நான் சேர்ந்து கொண்டேன். எங்களுடன் சரளமாகப் பேசி எங்களை உற்சாகமாக உழைக்க வைத்தார்.

## திரு. S.A.பழனியாண்டி

உபதலைவர், NUW

ஆரம்ப காலத்தில் அவரிடம் கௌரவப் பிரச்சினை என்பதே கிடையாது. அவர் கையில் ஒரு குறிப்பேடு எப்போதும் இருக்கும். அதில் அவருடைய கருத்துகளோடு, தொழிலாளர் பிரச்சினைகள் எழுதப்படும். ஒவ்வொருவரையும் தனியாக சந்தித்து அவரவர்களுக்குள்ள பிரச்சினைகளைக் கேட்டறிந்து கொள்வார். அலுத்துக் கொள்ளாமல், சளைக்காமல் செயல்படுவார். தோட்டம் தோட்டமாக நடந்து போவார். திரு. வி.கே. வெள்ளையன் என்னென்ன நினைத்திருந்தாரோ அதையெல்லாம் செயற்படுத்தப் பாடுபட்டார்.

எங்களுக்கு அவர் நல்ல தலைவராகவும், வழிகாட்டியாகவும் விளங்கினார். திடீரென அவருடைய வழிகாட்டலிலிருந்து விடுப்பட்டபோது எங்களுக்கு அதிர்ச்சியாகி விட்டது. என்றாலும் அவர் காட்டிய பாதையில் தொடர்வோம். தலைவர் தவசி ஐயாத்துரை அவர்களோடும் நல்லுறவாகவே இருந்தார். நல்லதொரு அமைப்பாக தொ.தே. சங்கம் அமைந்திருந்தது.

## அமரர் திரு. D.E.J. தவக்கணி

(எழுதுவினைஞர், அபோட்ஸ்லீ)

அமரர் திரு. PVK அவர்களை எனக்குப் பல வருடங்களாகத் தெரியும். அவருடனான அறிமுகம் எனக்குக் கிடைத்த பெரும் பேறாகும். அவருடைய தமிழ், ஆங்கில கடிதங்கள், கட்டுரைகள் என்பவற்றை நான் பலமுறை வாசித்து வியந்திருக்கின்றேன். சகல வழிகளிலும் அவருடைய எழுத்து மிகச் சிறந்த ஆக்கபூர்வமான விடயமாகும்.

விசேடமாக அவருடைய ஆங்கில மொழி மூலமான கடிதங்கள், கட்டுரைகள் பிரத்தியேகமானவை. அவருடைய ஆங்கில பொழியறிவு விசாலமானது. ஆங்கில மொழியில் அவர் கட்டுரையோ கடிதங்களோ எழுதும் போது மிக மிக ருசிகரமாக இருக்கும். எதுகை மோனையுடன் எழுதும் ஆற்றல் அவருக்குரியது. துரைமாருக்கு அவர் எழுதும் கடிதங்கள், பத்திரிகைகளுக்கு எழுதும் குறிப்புகள் அனைத்தும் வாசிப்பவர்களின் நெஞ்சைத் தொடும் வகையில் அமைந்திருக்கும் என்று கூறினால் மிகையாகாது.

## திரு. P.M. லிங்கம்

(பத்திரிகையாளர்)

எப்போதுமே பத்திரிகையாளர்க்கு தொ.தே.ச பொதுச் செயலாளர் அமரர் PVK அவர்கள் மேல் ஒரு மரியாதை உண்டு.

நன்கு விடயங்களை துருவி ஆராய்வார். மிகவும் பொறுமையானவர். அவருடைய தொழிலாளர் தேசிய சங்கப் பணிமனையில் அடிக்கடி கருத்தரங்குகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும். தோட்டத் தொழிலாளர் நலன் கருதி நடத்தப்படும் அந்தக் கருத்தரங்குகளின் தொனிப் பொருள் மலையகத்துக்குத் தேவையான அம்சமாகவே இருக்கும்.

திரு. ஐயாத்துரை, திரு. பெருமாள் ஆகியோருடன் சேர்ந்து சங்கத்தைத் திறம்பட நடத்தி வந்த ஆரோக்கியமான பொதுச் செயலாளர்.

## திரு. பத்தனை முத்துலிங்கம்

(ஊடகவியலாளர்)

அமரர் PVK அவர்கள் ஒரு சிறந்த சிந்தனையாளர், கல்விமான். ஆங்கிலத்தில் உரையாடும்போது கேட்க பெருமையாக இருக்கும். தோட்டத்துரைமார், மற்றும்

தொழில்கோடு போன்ற இடங்களில் அவருடைய விவாதத் திறன் அலாதியானது. மறக்கமுடியாத தொழிற்சங்கத் தலைவர், செயல்பாடுமிக்க பொதுச் செயலாளர் என்று அவரைப் புகழலாம்.

## திரு. கே.டி.சண்முகம்

(முன்னாள், நிறைவேற்று அதிகாரி (S.L.S.P.) அட்டன்)

என் நண்பரும், அமரருமான PVK அவர்களை என்னால் மறக்க முடியாது. அவருடைய தொழிற்சங்கப் பயணம் உணர்வு பூர்வமான - சேவை நலன் இழைந்தோடிய செயலகப் பயணம்.

தொழிலாளர் பற்றி - அவர்களின் முன்னேற்றம், சிறந்த பழக்க வழக்கங்களுடனான உயர்வு பற்றி அதிகமான அக்கறைகளை மேற்கொண்டு, தொழிற்சங்க பொதுச் செயலாளராகப் பணியாற்றியவர்.

நேர்மையும், உண்மையும் கொண்டவர். எந்த விடயமானாலும் நேருக்கு, நேர் மனம் திறந்து பேசும் சுபாவம் உடையவர்.

யார் கோபித்துக் கொண்டாலும், அல்லது முரண்பட்டாலும் தன் மனதில் பட்டதை செய்தே திருவார்.

இது அவரின் தன்மை. எழுத்து வன்மை, பேச்சு வன்மை, ஆராய்ந்து தெளியும் தன்மை, மொழிபெயர்ப்பு அறிவியலில் நாட்டம் இவையெல்லாம் அவருடைய தனிநபர் சாதனைகள்.

## திரு. சிவாஜி செபஸ்டியன்

(மலையகக் கலைஞர், முன்னாள் இ.தொ.கா. பிரதிநிதி)

நண்பர் P.V.K. என்னிலிருந்து மூத்த தொழிற்சங்கநபர். என்னை விட பல மடங்கு தொழிற்சங்க பணிகளை ஆற்றி சாதனைகளை ஈட்டியவர்.

நாவலப்பிட்டி இ.தொ.கா. காரியாலயத்தில் 1955ஆண்டுக்கு சற்றுமுன் அல்லது பின்பாக தொலஸ்பாகை சாலை காரியாலயத்தில் நாங்கள் சேர்ந்து பணியாற்றினோம். நாவல் நகரின் அப்போதைய தொழிற்சங்க ஜாம்பவான்களான அமரர் சுப்பையா, அமரர் அருணாசலம் போன்றோர்களிடம் பணியாற்றிய பாக்கியம் எமக்குண்டு.

தனிப்பட்டமுறையில் அவரிடம் எனக்கு எப்போதுமே பெருமதிப்புண்டு. சிறந்த மொழியாளுமை பெற்ற பண்பாளர், சுறுசுறுப்புக்கு ஓர் அழுத்தமான உதாரணம். அப்போதைய இ.தொ.வின் பளபளப்பான பாசறையில் பயின்று பின்னால் முரண்பட்டு வெளியேறியவர்கள். அவருடைய தொழிற்சங்கப் பயணம் பிரம்மாண்டமானது. பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டியதொன்று.

## திரு. சி. பழனியப்பன்

(நகைத்தொழிலதிபர், பொருளாளர்,
அட்டன் ஸ்ரீ மணிக்கப்பிள்ளையார் ஆலயம்)

அமரர் P.V.K. அவர்களை கடந்த ஐம்பது வருடங்களாகத் தெரியும். எனது இனிய நண்பர்களில் அவர் ஒரு முக்கிய இடத்தை வகிக்கின்றார்.

1956ம் ஆண்டில் நான் அவரை கலஹாவில் சந்தித்தேன். அவர் அப்போது கம்பீரமான இளைஞர்.

அதற்குப் பின் நான் ஒரு உணவகத்தில் (அட்டன் மாநகரில்) வேலை செய்தபோது, அவர் அட்டன் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பணிமனையில் அலுவலராக இருந்தார்.

அப்போது ஒரு விடயம் எனக்கு ஞாபகம் இருக்கிறது. சிற்றுண்டிக்காக எமது உணவகத்துக்கு பல பேருடன் வந்தாலும்

தானே கட்டணத்தைக் கொடுப்பார். பிறர் பணத்தில் அவர் ஒரு தேனீர் கூட குடித்ததில்லை. அத்தகைய ஒரு நேர்மையான தொழிற்சங்க ஊழியராக வாழ்ந்த மனிதர். யாரையும் 'ஐசே' என்று அன்புடன் அழைப்பார். மிகவும் பொறுமையான மனிதர். இதுவரை யாரையும் மனம் நோக பேசியதில்லை.

கடந்த பத்து வருடங்களுக்கு முன் சந்தித்தபோது ஆதங்கப்பட்டு கூறிய வார்த்தை, ''தோட்ட மக்கள் நல்ல பழக்கங்களுடன் வாழ வேண்டும். அது இன்னும் மலர வில்லையே'' என்பதுதான். அவர் எனது மிகச் சிறந்த நண்பர்.

## திரு. V. இராமசாமி

(முன்னாள் உபதலைவர், நகரசபை)

என்னுடைய நல்ல நண்பர் அமரர் PVK இவரைப் பற்றிய வாழ்க்கை வரலாற்று நூலொன்று உருவாகி வருவது மிகவும் சிறந்ததொரு விடயமாகும். சமூகத்துக்குப் பங்களிப்புச் செய்தவர்கள் எதிர்கால சமூகத்துக்கு இத்தகைய வரலாற்று நூல்கள் மூலம் அறிமுகம் செய்யப்பட வேண்டும்.

அவர் மிகவும் மென்மையானவர். ஒரு தொழிற்சங்கத் தலைவர், ஒரு அரசியல்வாதி, தோட்ட தொழிலாளர்களோடு உறவாடும் நண்பர் இவ்வளவு மென்மையாக இருப்பது ஒரு வித்தியாசமான விடயம். இருப்பினும் மேடையேறிப் பேசும் போது கர்ஜனையாக இருக்கும்.

எனக்குத் தெரிந்த நல்ல தலைவர்.

அவருடைய வாழ்க்கை வரலாறு பற்றி நானும் கேள்விப் பட்டிருக்கின்றேன். மிக, மிக பயனுள்ள வரலாறு.

அடிமட்டத்திலிருந்து மேலே வந்துள்ளார்.

பிள்ளைகளை நன்றாகப் படிக்க வைத்துள்ளார்.

அவருடைய சாதனைகளில் பிரதானமான விடயம் தொழிலாளர் தேசிய சங்கத்தினை V.K.V., C.V. க்குப் பின் அழகாகக் கட்டிக் காத்தார் என்பதேயாகும்.

★ ★ ★

P.V.K. அவர்கள் அட்டன் ஜோன் பொஸ்கோ கல்லூரியில் 80களில் பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாராக பணியாற்றினார். அக்கால கட்டத்தில் கல்லூரியின் பெற்றோர் ஆசிரியர் இனைப்புப் பணிகளைச் சிறப்பாக செய்துள்ளார்.

ஒரு கல்வியாளர் என்ற வகையில், பாடசாலையின் அன்றாட நிர்வாக விடயங்களிலும், பாடசாலையின் அபிவிருத்தி வேலைத்திட்டங்களிலும் மிகவும் அறிவு பூர்வமான கருத்துக்களையே முன் வைத்து செயல்பட்டுள்ளார். ஆசிரியர்களுக்கும் பெற்றோர்க்கும் மிகச் சிறந்த பாலமாகவும் இருந்துள்ளார் என்பது பல ஆசிரியர்களின் கருத்தாகும்.

அந்த கால கட்டத்தில், PVKயின் உற்சாகமான பங்களிப்பு பற்றி பாடசாலை மிகவும் பெருமை கொண்டுள்ளது எனக் கூறலாம். கல்வியில் அவருக்கு இருந்த நாட்டமும் உற்சாகமும் விசாலமானது. ஒரு பொருத்தமான அபிவிருத்திச் சங்கச் செயலாளராக பணியாற்றியது, ஒரு பொறுப்பான அம்சமாகும்.

★ ★ ★

## திரு. ந. கார்மேகம்

எனது சித்தப்பாவாகிய அமரர் P.V.K. அவர்கள் எங்கள் எல்லாருக்கும் ஒரு மாபெரும் குருவாக வாழ்ந்தார். அவருடைய

குடும்ப விடயங்களில் மிகப் பெரிய பங்களிப்புச் செய்த மாமனிதர் என்றே கூறமுடியும்.

அவருடைய சிறுவயதில் தனது சகோதரரின் ஒட்டு மொத்தமான ஆதரவுடனேயே கலஹாவில் கல்வி கற்றார் என்று எங்கள் குடும்பத்துப் பெரியவர்கள் கூறுவார்கள். ஒரு தனிமனித சுபாவத்தில் அவருடைய பெருந்தன்மையான, பொறுப்பான குடும்ப சேவைகள் ஏராளம்.

தான் சிறுவயதில் கல்வி கற்றுத் தேறுவதற்குக் காரணமாக இருந்த தனது சகோதர வர்க்கத்துக் குடும்பங்களுக்கு மிக ஆதரவாகவும், ஞானப் பாதுகாவலராகவும் வாழ்ந்தார் என்றே கூற வேண்டும்.

உதாரணமாகவும் - உச்சமாகவும் சொல்வதென்றால் அவருடைய மூத்த சகோதரரின் மகனாகிய என்னை நாவலப்பிட்டி கதிரேசன் குமார மகாவித்தியாலயத்தில் ( G.C.E. O/L வரை) சேர்த்து எனது கல்வி வளர்ச்சிக்கு பாரிய பங்களிப்புச் செய்துள்ளார். அதோடு திரு. இராமன் என்ற தனது மருமகனையும் அதே கல்லூரியில் சேர்த்து கல்வியில் உயர வைத்துள்ளார். எங்களுக்குப் பொருத்தமான உத்தியோகத்தைப் பெற்றுக் கொடுத்து வாழ்வில் ஒரு சரியான வழிகாட்டியாகி எங்களை உயர்ந்த நிலைக்கு இட்டுச் சென்றுள்ளார் என்பதே உண்மையாகும்.

அவர் திருமண வயதில் ஒரு திடகாத்திரமான நேர்மையும், பண்பும் கொண்ட இளைஞர்! சிறந்த வாசகர். தொடர்ந்து கல்கி இதழ்களின் சிறந்த தொடர்கதைகளை வாசித்தவர். வாசிப்புத்துறையில் ஒரு பெரிய முத்திரையைப் பதித்துள்ளார்.

பல விடயங்களைக் கற்றுக் கொள்வதில் ஆர்வம்! இசை ரசிகர். விளையாட்டு ரசிகர். தத்துவ நூல்கள், Readers Digest, பக்தி இலக்கியம், தமிழக அரசியல், இந்திய அரசியல் ஆசிய அரசியல், வாசந்தியின் நாவல்கள், சிறப்பாக இலங்கைவாழ் இந்தியர்களின் வரலாற்று நூல்கள் என்பன அடங்கும்.

## திரு. O.A. இராமையா

(தலைவர், செங்கொடி சங்கம்

(முன்னாள் மாகாண சபை உறுப்பினர்)

நானும் அவரும் சேர்ந்து ஐக்கிய சோஷலிச முன்னணி என்ற அமைப்பின் கீழ், மத்திய மாகாண சபைக்காகப் போட்டியிட்டு வென்றோம்.

நல்ல பல சேவைகளைச் செய்துள்ளார். தொழிற்சங்க சகாப்தத்தில் அவருடைய நீண்ட காலப் பணிகள் சிறப்பானவை. மறக்கமுடியாத தொழிற்சங்கத் தலைவர். அவரோடு சேர்ந்து தேர்தல் வேலைகளில் ஈடுபட்ட நாட்கள் பசுமையானவை.

நேற்றுபோல இருக்கின்றது. நீங்காத நினைவுகள்!

## திரு. தவசி ஐயாத்துரை

எழுத்தாளர், அரசியல் தலைவர்

அமரர் PVK அவர்கள் தொழிற்சங்கத்தில் 45 வருடங்களுக்கு மேல் அனுபவம் பெற்றவர் தொழிலாளர் தேசிய சங்கத்தின் பொதுச் செயலாளராக, அமரர் V.K. வெள்ளையனின் வழியைப் பின்பற்றிப் பொறுப்பேற்றவர். (நான் NUW தலைவராக இருந்த காலத்தில்) அவருடைய பணிகள் அற்புதமானவை என்றே கூறுவேன். சகல வழிகளிலும் என்னோடு ஒத்துழைத்து சங்கத்தை வழிநடத்தினார்.

## அமரர் திரு. P.V. கந்தையா பற்றிய ஆய்வுக் கட்டுரை

தனி மனிதனுக்குள் ஒளிந்து கிடக்கும் மகத்துவம் மானிட சமுதாயத்தின் விடிவுக்காக வித்திடும் விழுமியங்களாக அமைய வேண்டும்.

சரித்திர நதியினில் வந்து கலக்கும் சிறு ஓடையாக தன் அறிவு, ஆற்றல் சமுதாய நலனின் பால் கொண்ட அக்கறை போன்றவை மானிட சமுதாயத்தின் முன்னேற்றத்தில் சிறு சலனத்தை ஏற்படுத்தி புதிய புரட்சியைத் தூவியவர்கள் மண்ணுக்குள் மறைந்தாலும் மரணமடைவதில்லை, மானிடத் தத்துவங்களாக நூல் வடிவில் பரிணமிக்கின்றார்கள்.

ஜனனத்துக்கு முன், மரணத்துப் பின் என்ற மனித நிலையினைப் பற்றி எண்ணிடாது இவை இரண்டுக்குமிடையே தத்துவார்த்தமாக உதாரண வாழ்க்கை வாழ்ந்து தன் வாழ்வியல் யாத்திரையில் அடுத்த சமுதாயத்துக்கு அழைப்பு மணியாக ஒலிக்கின்றனர்.

தன் வாழ்வைப்பற்றி சிந்திக்கவே நேரம் கிடைக்காமல் நகர வாழ்வினில் நரக வேதத்தை அனுபவிப்பவர் மத்தியில் அமரர் திரு. கந்தையா அவர்கள் மலை நந்த வனத்தில் பூத்த புதுமை பூவாக, தன் சமுதாய மக்களின் கலங்கரை விளக்கமாக திகழ்ந்தவர். இவரின் அத்தியாயமும், ஆவணங்களும் அர்த்தமுள்ளதாக அமைந்து விடுகின்றது.

மனச்சஞ்சலம் இல்லாத தீர்மானம் எடுக்கும் மனப் பக்குவம், எடுத்த முடிவை தைரியமாக செயல்படுத்தும் திறமை, ஆழ்ந்த அறிவு, தீர்மானம் எடுப்பதில் உள்ள ஆளுமை, இவையே அமரர் திரு. கந்தையாவின் தனித்துவம்.

"வருமுன்னர் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர் வைத்தூறு போலக் கெடும்" என்ற வாக்குக்கு ஏற்ப திட்டமிடலில் இவர் தீர்க்க தரிசனமாக திகழ்ந்தவர். இவர் தன் வாழ்க்கையில் தன் சுயநலனுக்காக மற்றவர்களிடம் பணிந்து நடந்ததில்லை. சுய கௌரவத்துடன் வைராக்கியமாக வாழ்ந்ததால் இவரின் வாழ்க்கையை நற் பாடமாக அடுத்த சமுதாயத்துக்கு விட்டுச் சென்றுள்ளார்.

மகா மனிதர்கள் வாழ்ந்த இந்த பூமியில் தன்னைப் பற்றியும் சிந்திக்க வைத்துள்ள அமரர் திரு. கந்தையா அவர்கள் தன் வாழ்நாளில் நல்ல நூல்களை கற்று நல்ல நண்பர்களை தேர்ந்தெடுத்து சிறந்த மக்கட் பேறுகளையும் பெற்றுள்ளார்.

கால ஓட்டத்துடன் கரைபுரண்டோடும் மலையக மக்களின் வாழ்க்கைச் சக்கரம் துருபிடிக்குமுன் அவர்களின் அன்றாட வாழ்வில் வெளிச்சத்தை ஏற்படுத்தி, அவர்களும் தலைநிமிர்ந்து வாழ அவர்களின் மீது கரிசனை கொண்டு செயல்பட்ட தொழிற்சங்கவாதிகள் எத்தனை பேர்? தொன்று தொட்டு வரும் மலையக சமூகத்தின் விழிப்புணர்வுத் தன்மையின் அத்தியாவசியத்தையும் அதன் தேவையையும் உணர்ந்து அதனை தொழிற்சங்க ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் கடமைப்பாடாக கொண்டு வழிநடத்திச் சென்றவர்களில் இவர் ஒரு பண்பட்ட சமூக நல ஞானியாகத் திகழ்ந்தார்.

மற்றைய சமூகத்துடன் ஒப்பிடும் போது மலையக மக்களின் கல்வியறிவு, சிந்திக்கும் ஆற்றல், தூரநோக்கும் சிந்தனை ஒரு குறுகிய வட்டத்துக்குள் கட்டுண்டு இருட்டறையில் கிடப்பதை இவர் தன் மேடைப் பேச்சாலும்,கலந்துரையாடலிலும், பல மாநாடுகளிலும் தெளிவுபடுத்தி அவர்களின் வாழ்க்கையில் ஒரு

விடி வெள்ளியை ஏற்படுத்துவதில் இவர் எடுத்துக்கொண்ட சிரத்தை மிகப்பெரியது, செம்மையானது.

நாம் சௌகரியமாக செயல்படும் அரசியல் கட்சியையும் அரசியல்வாதிகளையும் பற்றி மட்டுமே பேசிக் கொண்டிருக்கும்போது பல அற்புத அரிய சாதனைகளை நிகழ்த்திய மாமேதைகள் விளம்பரமின்றியும் சொகுசான வாழ்வினை மேற்கொள்ளாமலும் தான் நடந்து வந்த பாதையில் வசந்தத்தைப் பயிரிட்டு, எதிர்கால சந்ததியினர் தடையின்றி நடப்பதற்கு ஒரு கைத்தடியையும் வழங்கி விட்டுச் சென்றுள்ளனர். ஆனால் நாம் இவர்களைப் போன்ற சமூகத்தின்பால் உயிரை வைத்திருப்பவர்களை போற்றுவதில்லை. அவர்களை ஊக்குவிப்பதுமில்லை. இது உலக சரித்திரத்தைப் புரட்டிப் பார்க்கும்போது தெளிவாக விளங்குகின்றது.

திரு. P.V.K. தனது அரசியல் வாழ்க்கையில் தன்னுடைய மக்கள்படும் வேதனையையும் இன்னல்களையும் வேரறுக்க நினைத்து அவர்களுடைய வாழ்க்கையில் வசந்தத்தை விதைக்க வேண்டும், அதனூடாக அவர்களின் எதிர்காலம் இனிமையாகவும் இதமாகவும் மலர்ந்திட வேண்டும் என எண்ணினார். ஏனென்றால் இவருடைய வாழ்க்கைப் பாதை கூட பல புயல்களையும், எதிர்ப்பு அலைகளை சந்தித்தும் அதில் அனுபவப் பட்டும் வந்துள்ளார்.

தொழிலாளர் தேசிய சங்கத்தைப்பற்றி எழுத வேண்டுமானால் ஒரு மிகப்பெரிய அரசியல் தொழிற் சங்கத்தில் இருந்து பிரிந்து புதிய அமைப்பாக செயல்படத் துவங்கி சுமார் 40 வருடங்களுக்கு மேலாக திறம்பட செயல்பட்டுக் கொண்டிருக்கும் தொழிற்சங்கம். இதன் பொதுச் செயலாளராக சுமார் 28 வருடங்கள் அதன் சிறப்புத்தன்மையினை கட்டிக்காத்து

பெரிய அரசியல் தொழிற்சங்கங்களுக்கு ஒரு சிம்ம சொப்பனமாக திகழவைத்த பெருமை திரு. PVKயை சாரும்.

தீர்மானிக்கும் சக்திகள் மலையகத்தில் சிதறடிக்கப்படும் போது நியாயமான ஒன்றை தெரிவு செய்வதில் தவறுகள் ஏற்பட்டு விடுகின்றன. இங்கே தனிமனிதனின் சுயநிர்ணய தீர்மானங்களை விட அரசியல் கட்சியின் கவர்ச்சியிலும் அதன் மாயையிலும் மக்கள் அடகு வைக்கப்படுவதிலும் சிறந்த அனுபவமிக்க தோட்டத் தொழிலாளியின் உள ரீதியான காயங்களை உணர்ந்த அரசியல் தொழிற்சங்க தலைவர்கள் தட்டிக்கழிக்கப்படுகின்றார்கள். இவர்களுள் அமரர் திரு. PVK ஒரு சிறந்த தொழிற்சங்கவாதி, மேடைப் பேச்சாளர் என்பதை விட தோட்ட மக்களின் யதார்த்த நிலையை உணர்ந்தவர். அவர்களுக்கு மத்தியில் பிறந்து வளர்ந்து வாழ்ந்தவர். அவர்களின் இன்ப துன்பங்களில் தன்னையும் ஈடுபடுத்தி கொண்டவர்.

இவர் மக்களுக்காக வாழ்ந்த வாழ்க்கையும் அவர்கள் பால் கொண்ட ஆழ்ந்த நேசமும் விழலுக்கு இரைத்த நீராகி விடக் கூடாது என்பதில் இவரது வாழ்க்கை எழுத்து வடிவில் மலர்வது இன்றியமையாத தேவையாக தொழிலாளர் தேசிய சங்கத்துக்கும் அதனைச் சார்ந்த மக்களுக்கும் அமைகிறது. பணியுமாம் என்றும் பெருமை சிறுமை அணியுமாம் தன்னை வியந்து என்பது போல இவரின் வாழ்நாளில் தன்னை வியந்து புகழ்பாடியதுமில்லை எவர் முற்றத்திலும் அரசியல் இலாபத்திற்காகவோ, சுய வாழ்வின் அபிவிருத்திக்காகவோ கை கட்டி நின்றதில்லை.

''இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன் கண்விடல்'' என தொழிலாளர் தேசிய சங்கத்தின் பாரிய நிர்வாக பொறுப்பு இந்த சிறந்த அனுபவசாலியிடம் 27 வருடங்கள்

ஒப்படைக்கப்பட்டமை, இவரிடம் அக்கட்சி கொண்ட உயரிய நம்பிக்கையை வெளிப்படுத்துகின்றது. வசந்தத்தையும், மலர்மிகு வாசனையையும் மட்டும் நாம் நுகர்ந்து விட்டு அதை அழைத்து வந்தது தென்றல் என்பதை மறந்து விடுகிறோம்.

ஓரிடத்தில் சிறு ஊற்றாக உருவாகி பின் ஓடையாக, நதியாக உயர்வு பெற்று தன்னையும் சுத்தப்படுத்தி தான் வழிவந்த சமூகத்தையும் சுத்தப்படுத்தி இறுதியில் கடலுக்குள் சங்கமித்தபின் மறைந்து விடுவது போல பல ஞானிகள் மேதைகளின் வாழ்க்கை அமைந்து விடுகின்றது.

இதே போல் திரு. PVKயின் வாழ்க்கையும் அவர் கடந்து வந்த பாதையில் முட்களும், முட்செடிகளும் அவரை ரணப்படுத்தியிருக்கலாம். ஆனால் தொழிலாளர் தேசிய சங்கத்துக்கும் அதனை சார்ந்தவர்களுக்கும் ஒரு பொக்கிஷமாக இருந்து விட்டு சென்றுள்ளார் என்பதை மறந்து விட முடியாது.

**PVK. சக்தியேந்திரன்**

# 16. தேர்தலில் – மத்திய மாகாண சபையில்

மத்திய மாகாண சபைத் தேர்தலில், 1987ம் ஆண்டு ஐக்கிய கோஷலிச முன்னணி என்ற அமைப்பின் கீழ் போட்டியிட்டு திரு. P.V. கந்தையா வெற்றி பெற்றார்.

மாகாண சபையில் PVK 1987 முதல் 1992ம் ஆண்டு வரை உறுப்பினராகப் பணியாற்றியுள்ளார்.



**அமரர் திரு. PVK ம.மா.ச. உறுப்பினராகத் தெரிவாகியபின் தோட்டத் தொழிலாளர்கள் வரவேற்கும் காட்சி.**

அக்கால கட்டத்தில் அவருடைய பணிகளும், சமூகப் பங்களிப்புக்களும்:

1. பாடசாலை மாணவர்க்கு கல்வி உபகரணங்கள்.
2. பாடசாலை நூலகங்களுக்கு நூல்கள் வழங்கியமை.
3. தோட்ட ஆலயங்கள் சிலவற்றுக்கு உபகரணங்கள் அன்பளிப்பு.
4. தனிமாணவர் ஓரிருவர்க்கு (திறமைக்குரிய) உபகாரச் சம்பளம் வழங்கியமை.
5. சங்கம் சார்ந்த அன்பர்கள் நிகழ்வுகளுக்கு ஆதரவு நல்கியமை.
6. தொ.தே.ச இளம் உறுப்பினர்க்கிடையே புரிந்துணர்வு விடயங்களை முன்னெடுத்தமை.

1992ல் அமரர் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச அவர்களின் ஆட்சியின் போது, அவரால் ஏற்படுத்தப்பட்ட சர்வகட்சி மாநாட்டில் கலந்து கொண்டு தமது கருத்துகளை வெளிப் படுத்தினார். நாட்டின் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் நோக்கில் அப்போதைய ஜனாதிபதியினால் அழைக்கப்பட்ட சமாதான மாநாட்டில் PVK கருத்துக் கூறுகையில் பெரும்பாலான பங்கு அரசின் கைகளிலேயே உள்ளது என்று வலியுறுத்தினார்.

சமாதான முயற்சிகளில் அரசு சளைக்காமல் இறங்க வேண்டும் என்பது இவரின் நிலைப்பாடாக இருந்ததை நன்கு அவதானிக்க முடிந்தது. ஐ.தே.க ஐம்பதாவது மாநாட்டு நிகழ்வுகள் சுகததாச ஸ்டேடியத்தின அரங்கில் நடைபெற்றது. இந்த மாநாட்டில், ஸ்ரீ M.S.செல்லசாமி, ஸ்ரீ, P.P.தேவராஜ் ஆகியோருடன் P.V.K.யும் கலந்து கொண்டார்.

1989ம் ஆண்டு நடைபெற்ற இந்த மாநாட்டில் மலையக பெரிய சங்கங்களுடன் உடன்பாடுடன் செயல்பட்டார்.

ஆட்சியையும், அல்லது சக சங்கங்களையும் விமர்சிக்க வேண்டிய நேரத்தில் விமர்சித்தாலும், அவர்களோடு ஒத்துப்போய் ஆதரிக்க வேண்டிய கட்டத்தில் ஆதரித்து ஜனநாயகத்தை மதித்து நடந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்க விடயம்.

✱ 1987 முதல் 1992 வரை மத்திய மாகாண சபையில் உறுப்பினராக இருந்த கால கட்டத்தில், சங்கத் தலைவருடைய ஒத்துழைப்புடன் பல தோட்டங்களுக்கும் சென்றதுடன், கொழும்பு மாநகரில் பல அமைச்சுகளுடனும், அமைச்சு அதிகாரிகளுடனும் கலந்துரையாடல்கள் நடத்தியுள்ளார். சமூக சேவைகள் அமைச்சு, இந்து கலாச்சார அமைச்சு, தொழில் அமைச்சு என்று இன்னும் பிற. என்றாலும் அமைச்சுகளில் நடத்திய பேச்சுகள் பெறுபேறுகளைக் கொடுக்கத் தவறிவிட்டன என்றும் பிறகு வருத்தப்பட்டார்.

✱ 1997ம் ஆண்டு மக்கள் கூட்டணி (P.A.) என்ற முன்னாள் ஜனாதிபதியின் கட்சியின் கீழ் தேர்தலில் போட்டி யிட்டார். நாற்காலி சின்னத்தில் போட்டியிட்டாலும் அது பாராளுமன்றப் பொதுத் தேர்தல் என்பதால் போதுமான வாக்கு எண்ணிக்கையைப் பெற முடியவில்லை.

✱ 1998 கொழும்பு மாநகரில் தலைவர் ஸ்ரீ சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்களும் (இ.தொ.கா சார்பில்) திரு. PVK அவர்களும் ( NUW சார்பாக அதன் பொதுச் செயலாளர்) இந்தியப் பிரதமர் ஸ்ரீ அட்டல் பிஹாரி வாஜ்பாய் அவர்களை சந்தித்து இலங்கை வாழ் இந்திய வம்சாவழி பிரச்சினைகள் சம்பந்தமாகப் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். இந்தக் கலந்துரையாடல் இந்திய வம்சாவழி மக்களின் குடியுரிமை, கல்வி, சுகாதாரம், கலாச்சாரம், இலங்கை இந்திய பயண இலகுத்தன்மை பற்றி பேசினார். வாஜ்பாய் அவர்கள் இக்கருத்துகளை ஏற்று தகுந்த நடவடிக்கை எடுக்க உறுதியளித்தார்.

# 17. பொது நிகழ்வுகளில் PVK



சிறப்பு நிகழ்வில் உரை. மாகாண சபை உறுப்பினராக, (இடமிருந்து வலம்) பிரதேச சபைத் தலைவர் ஸ்ரீ எஸ்.ஜெகதீஸ்வரன், இ.தொ.கா. அமைப்பாளர் ஸ்ரீ எஸ். ராஜு, மாகாண சபை உறுப்பினர் ஸ்ரீ கீர்த்தி ஹேச்சந்திரா, அட்டன் நகர சபைத் தலைவர் ஸ்ரீ எம்.ஏ. அபுசாலி மற்றும் ஆதரவாளர்கள்.



மகாவலி அமைச்சர் அமரர் ஸ்ரீ காமினி திசாநாயக்க தலைமையிலான ஒன்று கூடல். இரண்டாம் வரிசை வலமிருந்துஇடம் இரண்டாவதாக.



20-5-1986 தொழிலாளர் சங்கக் கருத்தரங்கில்.
தொழிற்குலக் கல்விக்கான புதிய சிந்தனைக் கருத்தரங்கில்
நடுவில் இடமிருந்து வலம் நான்காவதாக நிற்பவர்.




பிரியாவிடை வைபவம் - ஆர்னோல்ட் அவர்களுக்கு
கொழும்பு கால்பேஸ் ஹோட்டலில்.





தேசிய தொழிற்சங்க சம்மேளனக் கருத்தரங்கில், குழுநிலை படத்தில் இடமிருந்து வலம் மூன்றாவதாக நிற்பவர்.

# 18. வெளிநாட்டுப் பயணங்களில் PVK



தமிழ்நாடு, சென்னை அறிஞர் அண்ணாவின் சமாதிக்கருகில்.

## ஜப்பான்



ஜப்பான் தொழிற்சங்க சம்மேளன மாநாட்டில்.

# கலந்து கொண்ட கருத்தரங்குகள்

## மொஸ்கோ



மொஸ்கோ (ரஷ்யத் தலைநகர்) கிரெம்ளின் மாளிகை முன்னால் நமது பொதுச்செயலாளர் திரு. PVK.



மொஸ்கோவில்...

## ஹங்கேரி



P.V.K. 19.9.83 ஹங்கேரி பயணமானார். தொழிற்சங்க சம்மேளன 9வது மாநாட்டில், விவசாய காடுவளர்ப்பு தோட்டத் தொழிலாளர் ஆகியோருக்கான கூட்டத்தில் கலந்து உரையாற்றினார்.


## செக்கொஸ்லெவாக்கியா

செக்கொஸ்லெவாக்கியாவின் தலைநகர் பிராக்கில் நடைபெறும் விவசாய, காடு வளர்ப்பு, தோட்டத்துறை தொழிலாளர் சம்மேளனத்தில் 10வது மாநாட்டில் கலந்து கொண்டு நாடு திரும்பினார்; நமது பொதுச் செயலாளர் திரு. பி.வி. கந்தையா அவர்கள்.

இம்மாநாடு 15.3.1988 முதல் 18.3.88வரை இடம் பெற்றது.

தோட்டத் தொழிலாளர்களின் தொழிற்துறை பிரச்சினைகள் பற்றியும் ஆராயப்பட்டது.

- 'மாவலி' செய்தி மே, 1988



செக்கோசுலேவாக்கியாவில் PVK 1988.



ஹங்கேரி தொழிற்சங்க சம்மேளனக் கூட்டத்தில் PVK
நடுவரிசையில் மூன்றாவதாக.

## மலையகத் தலைவர்களுடன்



1990ல் நடந்த பத்திரிகையாளர் மாநாடொன்றில் பாராளுமன்ற
உறுப்பினர்களாகிய ஸ்ரீ P.P.தேவராஜ் (இடமிருந்து வலமாக)
ஸ்ரீ பெ. சந்திரசேகரன் ஸ்ரீ எம்.எஸ். செல்லசாமி பா.வு, திரு. PVK
(எழுதிக் கொண்டிருப்பவர்) ஸ்ரீ காமினி லொக்குகே ஆகியோர்.

# 19. PVK பங்கு பற்றிய போராட்ட நிகழ்வுகள்

1975 தொழிலாளர் போஷாக்கின்மைக்கெதிராக, தோட்டங்கள் சுவீகாரம் செய்யும் நிலைகளுக்கெதிரான போராட்டம்.

1996 கூட்டுக் கமிட்டியில், பொதுச் செயலாளர் NUW என்ற வகையில் மஸ்கெலியாவில்.

1980 தொழிலாளர் சம்பள உயர்வுக்காக.


தொழிலாளர் சம்பள உயர்வுக்காக - கறுப்புப்பட்டிப் போராட்டம்.

23.4.1996ல் தோட்டத் தொழிலாளர் வேலை நிறுத்தப் போராட்டம்.

டெவன் தோட்ட சுவீகரிப்புக்கெதிரான போராட்டத்தில் இ.தொ.கா வின் தலைமையில் தனது அமைப்புடன் கலந்து கொண்டமை. இப்போராட்டங்களில் தனது தலைவர், நிர்வாக உறுப்பினர் பலரும் கலந்து கொண்டனர்.

இது 1976ம் ஆண்டு எனக் குறிப்பிடலாம்.

இப்போராட்டங்களுடன் இன்னும் பல நிகழ்வுகளில் அவருடைய பங்களிப்புகள் நிதானமாகவும், சரியாகவும் இருந்துள்ளன.



26-6-1988 மாகாண சபை உறுப்பினர்களாக சத்தியப் பிரமாணம் செய்து வெளிவந்த போது கண்டி நகரில்ஆதரவாளர்களினால் வரவேற்கப்பட்டது. தொழிலாளர் தேசிய சங்க பொதுச் செயலர் திரு. P.V. கந்தையா. J.P. தனது துணைவியாருடன்.

**PVK அவர்களின் அறிவுத்திறன் சார்ந்த அரசியல் இழைந்தோடும் தனி அம்சங்களின் தலைப்புக்கள்:**

1. சிறந்த தட்டச்சு செயல், சிறந்த பேச்சாளர்
2. சிறந்த மக்கள் தொடர்பாளர்
3. உன்னத வாசகர் (தமிழ் ஆங்கில நூல்கள்)
4. சிறந்த ஆளுமை பெற்றவர்.
5. ஆங்கில, தமிழ் மொழி பெயர்ப்பாளர்.
6. புகைப்படப் பிடிப்பாளர்
7. அரசியல் ஆய்வாளர்
8. சிறந்த எழுத்தாளர் (அரசியல் - சமூகவியல்)
9. இளவயதில் சிறந்த நடிகர் (வீதி நாடகம்) பாடசாலை நாட்கள்)
10. சிறந்த ஆளுமைபெற்ற நீண்டகால தொழிற் சங்க பொதுச் செயலாளர்.
11. சிறந்த அரசியலாளர், கலைஞர், இளவயதில் நடிகர் நாடக எழுத்தாளர்.
12. நல்ல நண்பர்களைத் தேடி வைத்துள்ளார்.
13. தனது பிள்ளைகளைக் கல்விமான்களாகவும், சிறந்த சிந்தனையாளர்களாகவும் உருவாக்கியுள்ளமை.
14. தனது சொந்த வரலாற்று உண்மைகளை சேகரித்து வைத்துள்ளமை.

# 20. தொழிற்சங்க கருத்தரங்குகள் உள்ளக அலுவலர்களுடன்

தற்போதைய நிதிச் செயலாளர் திரு. மைக்கல் செபஸ்தியன், பிரதிப் பொதுச் செயலாளர் திரு. செபஸ்தியன் பிலிப் ஆகியோர் எமக்கு அளித்த விபரங்களுக்கு அமைய கருத்தரங்குகள் NUW தலைமைக் காரியாலயத்தில் அடிக்கடி இடம் பெற்றுள்ளன. ஒரு நாள், இருநாள் மூன்று நாள், நான்கு நாள், ஐந்து நாள் கருத்தரங்குகள் என்று இவற்றை நெறிப்படுத்திய தலைவராக PVK அவர்கள் தமது சங்க நிர்வாகக் குழுவினருடன் சேர்ந்து இருந்துள்ளார்.

## கருத்தரங்குகளின் தலைப்புகள்

தொழிற் குல நலன்கள், தோட்டத் தொழிலாளரிடையே சுகாதாரப் பண்புகள், கல்விக் கருத்துக்களும் அதனை மேம்படுத்தும் வழிகளும், தொழிலாளர், நிர்வாகம் உறவு, தொழிலாளரும் கலாச்சாரப் பண்புகளும், தோட்டத் தொழிலாளரிடையே மதுவிலக்கு.

இந்தக் கருத்தரங்குகட்கு NUW சங்கத்தினைச் சார்ந்த தோட்டக் கமிட்டித் தலைவர்கள் அழைக்கப்படுவார்கள். அநேகமாக இளைஞர், சங்க உறுப்பினர்களுக்கே கருத்தரங்குகள் அதிகமாக இடம்பெறும்.

ஒரு சங்க நிர்வாகத்துக்கு இத்தகைய கருத்தரங்கம் மிகச் சிறந்ததொரு நடைமுறையாகும்.

இவற்றை அடிப்படையாகக் கொண்டு தொழிலாளர் மத்தியில் நல்லதொரு வாழ்வியலை அமைத்துக் கொடுக்கலாம் என்பது PVKயினதும் சங்கத்தின் ஏனைய தலைவர்களின் கருத்தாகும்.

ஒரு தொழிற்சங்கத்தின் கடமைகள் தொழிலாளர்கள் உரிமை, சம்பளம், வீடமைப்பு போன்ற புறக்கூற்றுகளை மட்டுமே பெற்றுக் கொடுப்பதில் திருப்தியடைந்து விடாமல் அவர் வாழ்க்கை அம்சங்களை மேம்படுத்திக் கொள்ளும் வகையில், சிறந்த குடும்பப் பின்னணிகளை பெறும் முறையிலும் அவ்வப்போது ஆலோசனை வழங்குவதும் தலையாய கடமையாகும் என்பதை நன்கு உணர்ந்து செயல்பட்டவர் அமரர் PVK அவர்கள்.

# 21. PVK வாழ்நாட் குறிப்புகள்

✱ 1933. P.V.K. இவரோடு பிறந்தவர்கள் மொத்தம் பதினேழு பேர். இவற்றில் இவர் பதினாறாவது. பதினாறு என்ற இலக்கத்துக்கு ஒரு சக்தி உண்டு 'பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழ்க்' என்பது யோக மொழி. இந்த யோக வாழ்வு பதினாறாவது குழந்தையாகப் பிறந்த இவருக்குக் கிடைத்துள்ளது என்பது ஒரு சிறப்பு அம்சம். இவரோடு பிறந்த அனைவருமே சாதாரண வாழ்வு வாழும்போது பதினாறாவதாகப் பிறந்த இவர் அசாதாரண வாழ்வு வாழ்ந்துள்ளார் என்றால் அது ஆச்சரியப்படத்தக்க ஒரு விடயம்தான். அதற்கு பதினாறு ஒரு பக்குவமான இலக்குதானே.

✱ 1943. இந்தக் காலகட்டம் என்பது இலங்கை வாழ் இந்தியத் தோட்டத் தொழிலாளர்க்கு மிகவும் இக்கட்டான கால கட்டம்.

இரண்டாவது உலக யுத்தம் நடந்து கொண்டிருந்தது. உக்கிரமான போர்க் காலத்தில் தோட்டத் தொழிலாளர்க்கு உணவுப் பொருட்கள், உடைகள் வந்து சேரவில்லை. வேலை நாட்களும் குறைந்தன. அநேகமான தோட்டங்களின் துரைமார்கள் யுத்தப் பணிகளுக்காகச் சென்று விட்டனர்.

பஞ்சம் நிலவியது. எல்லாப் பொருட்களும் ரேஷன் முறையில் விநியோகிக்கப்பட்டன. மக்கள் பஞ்சம், பட்டினி ஆகிய துன்பங்களில் மூழ்கினர். பெரிய தோட்டமானாலும், சிறிய தோட்டமானாலும் இந்த நிலையே ஏற்பட்டது. ஆகையால் மக்கள் திண்டாடினர். திணறினர். எல்லாரும் செய்வதறியாது செயல்பட்டனர். இதன் அடிப்படையில் PVKயின் குடும்பமும்

இந்தப் பாதிப்புகளில் முழுமையாக மூழ்கிவிட்டது எனக்கூறலாம். சகல விடயங்களிலும் செய்வதறியாது திகைத்த குடும்பத்தில், கந்தையா என்ற சிறுவனுக்குமட்டும் ஏதோ கல்வி புகட்ட சந்தர்ப்பம் கிடைத்தது. அந்தப் பஞ்ச காலத்திலும் தொழிலாளியின் மகனாகிய சிறுவன் PVK கடினமான முயற்சிகளுடன் கல்வி கற்றுக் கொள்வதில் சிரத்தை காட்டிக் கொண்டேயிருந்தார்.

அந்த உத்வேகம் காரணமாக கலஹா பகுதியில் வாழ்ந்த உறவினர்கள் மூலம் கலஹா தமிழ்ப் பாடசாலையில் கல்வியைப் பெற்றுக் கொள்ள சந்தர்ப்பம் கிடைத்தது.

★ 1948. PVK கல்வியின் மிகச் சிறந்த ஆரம்பம் கல்வியில் நல்ல பெறுபேறுகளுடன் உயர்வர் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தார்.

இவர் கலந்து கொண்ட முதலாவது பொது நிகழ்வு. இந்த நிகழ்வில் தோட்டங்களின் அநேக சிறுவர்கள் கலந்து கொண்டனர்.

இந்திய சுதந்திர தினம். இந்த தினத்தை அநேக தோட்டங்கள் கொண்டாடின. இலங்கையில் நிலை பெற்றிருந்த எழுநூறுக்கும் அதிகமான தோட்டங்களில் மூவர்ணக் கொடிகள் ஏற்றி இந்திய சுதந்திர தினத்தைக் கொண்டாடினர். இந்தக் கொண்டாட்டங்கள் கலஹா தெல்தொட்டவில் கொண்டாடப் பட்டபோது சிறுவன் PVK மும்மரமாகக் கலந்து கொண்டார்.

★ 1953 இந்த வருடம் PVK வாழ்வில் மிக முக்கியமான வருடம். இந்தக் காலகட்டத்தில் அவர் இருபது வயது இளைஞராக மிகத் துடிப்போடு செயல்படத் தொடங்கிய காலம்.

பாடசாலை வாழ்வை முடித்து தொழில் வாழ்வில் ஈடுபடக் காத்திருந்த காலம்.

அந்த காலகட்டத்தில் முழு மலையக சமுதாயத்தில் படித்த இளைஞர் பலவித முட்டுக் கட்டைகளைச் சந்தித்துக் கொண்டிருந்தனர். PVKயின் வாழ்விலும் அந்த நிலை இருந்தது. என்றாலும் தனது மனபலத்தினால் தான் கற்ற கல்வியை அடிப்படையாகக் கொண்டு கட்டுரைகள், நாடகங்கள் எழுதத் தொடங்கினார். அது அவருடைய பொது வாழ்க்கையின் முதலாவது அம்சமாகும். இந்தப் பணி அந்த வருடம் முழுவதும் தொடர்ந்தது என்று குறிப்பிடலாம்.

★ 1953 இந்த வருடப் பிற்பகுதியில் அதாவது தீபாவளி தினத்தில் நாடகத்தினை தோட்ட இளைஞர்கள் மூலம் - அவர்களுடைய நடிப்பில் தயாரித்து மேடையேற்றினார். அந்த நாடகத்தின் மூலம் தோட்டத் தொழிலாளரிடையே மிகுந்த மதிப்பும் மரியாதையினையும் பெற்றுக் கொண்டார். அந்த காலகட்டத்திலேயே தொழிலாளர்க்கு சேவை செய்ய வேண்டும் என்ற நோக்கம் உண்டானது.

சகல வழிகளிலும் மலையக வாழ் படித்த இளைஞர்களுக்கு அரச தொழிலோ, தோட்டக் காரியாலயங்களிலோ வேலை கிடைக்காது என்ற நிலைப்பாடு இருந்தது. இதன் காரணமாக. P.V.K. தொழிற்சங்க காரியாலயத்தை நாடுவதற்குத் தீர்மானித்தார். அது வெற்றி பெற ஆரம்பித்தது.

★ 1954. இந்த வருடம் PVK அவர்களுக்கு மிக முக்கியமான காலமாகும்.

மலையகமெங்கும், நாடெங்கும் என்றும் கூறலாம். இந்திய வம்சாவளி மக்களுக்கு சோதனைக் காலம். இந்திய -

பாகிஸ்தானிய சட்டத்துக்கேற்ப பிரஜாவுரிமைக்கான மனுக்களைக் கோரியிருந்தது.

பாகிஸ்தானைச் சேர்ந்த சுமார் ஒரு லட்சம் பாய்மார்கள் இங்கு வர்த்தகர்களாகவும் தனிப்பட்ட வட்டி வியாபாரம் செய்பவர்களாகவும் இலங்கையில் வாழ்ந்தனர். சுமார் பத்து லட்சம் தமிழர்களினிடையே குறிப்பாகத் தோட்டத் தொழிலாளரிடையே பிரஜாவுரிமை பணிகளுக்காகத் தன்னைத் தயார்படுத்திய இ.தொ.கா. காரியாலயம் மலையகத்தில் படித்த இளைஞர்களை அலுவலகங்களில் வேலைக்கமர்த்தியது.

இதற்கமைய PVK நாவலப்பிட்டி காரியாலயத்துக்கு ஒரு வருடத்துக்கும் அதே வருடக்கடைசியில் அட்டனுக்கும் இந்தப் பணிக்காக வேலைக்கமர்த்தப்பட்டார். அதாவது 1954 ஆரம்பத்தில் நாவலப்பிட்டி காரியாலயத்திலும் 1954 கடைசியில் அட்டன் காரியாலயத்திலுமாக, ஆக அந்த வருடம் அவருடைய வாழ்வில் மிக முக்கியமான காலமாகும்.

அதிகமான வேலைப் பளு. ஆனாலும் அவற்றை மிக இலகுவாக சுமந்தார்.

அதற்கு அவருடைய அப்போதைய கல்வித் தகைமை துணைபுரிந்தது. ஆங்கிலத்தில் புலமை பெற்றிருக்காவிடினும், கடிதங்கள் டைப்செய்ய, விண்ணப்பங்கள், அறிக்கைகள் தயாரிக்க, கூட்டங்களுக்காக குழுநிலை வேலைத்திட்டங்கள் ஆகியவற்றுக்குப் பெரிதும் பயன்பட்டார்.

★ 1964 மாத்தளைக்கு இடமாற்றம். அட்டன், நூரளையிலிருந்து மாத்தளை வந்தது அவருக்கு ஒரு பெரிய வரப்பிரசாதமாகும். மாத்தளை நகரமானது நூரளை மாவட்டத்து

அல்லது கண்டி மாவட்டத்து நகரங்களை விட மாறுபாடானது. சுவாத்தியம் முதல், மக்கள் வாழ்வு, பாடசாலைகள், கலாச்சாரம், ஆன்மீகம், பத்திரிகை, இலக்கியம் போன்ற பல்வேறு அம்சங்களை உள்ளடக்கிய நகரம்.

இந்திய வம்சாவழி மக்களுக்கு மிகவும் உன்னதமான நகரம். அவர்கள் வாழ்வில் மறக்க முடியாத பிரதேசம். ஏன் என்றால் 1800களில் முதலாவது இந்திய தொழிலாளர் சமூகம் மன்னாரிலிருந்து மாத்தளைக்கு நடந்து வந்து அப்படா என்று உட்கார்ந்து ஓய்வெடுத்த எல்லைப்பிரதேசம். அங்கிருந்து மலையகத் தோட்டங்களுக்குச் சென்றனர்.

1964ல் மாத்தளையின் நகரத்துடன் ஒரு சிறந்த மையப் பொருளாக இ.தொ.கா. காரியாலயம் அமைந்திருந்தது. தொழிலாளர் மிக உற்சாகமாக தங்களின் பிரச்சினைகளை முன் வைத்த இடம் அந்தத் தொழிலாளர் அலுவலகம்.

கே.பி.எஸ். நாயர் என்ற காங்கிரஸ் பொதுச் செயலாளர் அமர்ந்து பணியாற்றிய பணிமனை. ஆகவே அதற்கு ஆளுமை அதிகம். அந்தப் பணிமனையில் இணைந்து பணியாற்றியது PVK அவர்களுக்கு ஒரு மிகப் பெரிய பாக்கியம். இந்த அலுவலகத்தில் வேலை செய்யும் போது தனது தனித் தன்மையைப் பாதுகாத்தே வந்தார். அதாவது நேர்மை, தன்னடக்கம், கடின உழைப்பு, உற்சாகம், துணிவுடன் கடமைகளை எதிர்கொண்டு சவால்களைச் சந்தித்தல், இத்தியாதி நல்லுணர்வுகளுடன் மாத்தளையில் தனது முத்திரையைப் பதித்தார்.

★ 1965 இந்த வருடம் திடீரென அட்டன், டிக்கோயாவிற்கு இடமாற்றம் கிடைத்தது. டிக்கோயாவுக்கு

வந்த PVK அவர்களுக்கு திருமணம் நடைபெற்றது. தனது முப்பத்தி இரண்டாவது வயதில் திருமணம்.

அந்தக் காலத்து தோட்ட மக்களிடையே ஒரு வழக்கம் இருந்தது. வீட்டில் ஒரு இளைஞனுக்கு இருபது வயது வந்தவுடன் திருமணம் பேசி முடித்து நடத்தி விடுவார்கள்.

இருபது வயதில் திருமணம் செய்யும் தோட்ட இளைஞன் ஐம்பது வயதுக்குள் தன் சோபை இழந்து, வாழ்வில் முதுமை கண்டு தன் பிள்ளைகளை நம்பி வாழும் நிலைக்குத் தள்ளப்பட்டு விடுவான். இது இயல்பாக இருந்த அந்த கால கட்டத்தில் முப்பத்திரண்டு வரை காத்திருந்து மணவாழ்க்கையில் ஈடுபட்டு சரியாக வாழ்ந்தார்.

★ 1965, கடைசியில் அல்லது 1966 ஆரம்பத்தில் திரு. V.K. வெள்ளையனின் இலட்சியங்களால் கவரப்பட்டு தொழிலாளர் தேசிய சங்கத்தில் சேர்ந்தார்.

அத்தகைய உணர்வு பூர்வமான சேர்க்கையால் அவருடைய தொழிற்சங்க வாழ்வில் ஓர் ஆரோக்கியமான திருப்புமுனை என்றே கூறலாம். எல்லாவற்றையும் தான் மிகச் சுதந்திரமான முறையில் வாழ்க்கையையும், தொழிலையும் அமைத்துக் கொள்ளும் வகையில் அவருடைய அசைவுகள் அமைந்தன.

தொ.தே. சங்கத்துடன் சேர்ந்ததும் மாநிலப் பிரதிநிதி ஆனார். இரண்டொரு வருடங்களில் தொழிலுறவுச் செயலாளர் மஸ்கெலியா, பொகவந்தலாவ, நோர்வுட், புளியாவத்தை, டிக்கோயா என்ற அட்டன் பிரதேச வரம்புக்குள்ளேயே அவருடைய வாழ்க்கை வட்டம் சுழன்றது.

★ 1973ம் ஆண்டு தொழிலாளர் தேசிய சங்கத்தின் பொதுச் செயலாளர் என்ற பதவியினைப் பொறுப்பேற்றார்.

மிகவும் பொறுப்பான, சுமை மிகுந்த கடமையாக இது அமைந்தது. சுமார் முப்பதாயிரம் அங்கத்தவர்களைக் கொண்ட தொழிற்சங்க தாபனம் என்ற இப்போதைய அலுவலக நிர்வாகிகளால் குறிப்பிடப்படும் சங்கம். இதனை மிகவும் கண்ணியத்துடனும் திடமாகவும் முன்னெடுத்துச் செல்ல உதவியது அவருடைய சுய ஆளுமை, சுய கல்வித் தகைமை, சுய அனுபவம், சுயபலம். இதற்குத் துணையாக தமது நிர்வாக அலுவலர்களைத் தெரிவு செய்து கொண்டார். தொ.தே.சங்கத்தின் தலைவரது ஒத்துழைப்பும், ஆதரவும் அமோகமாகக் கிடைத்தது எனக் கூறலாம்.

★ பொதுச் செயலாளர் பதவிக்காலத்தில் மேதினம், தொழிலாளர் சம்மேளனக் கூட்டங்கள், தொ.தே.ச. கருத்தரங்குகள், கலை நிகழ்ச்சிகள், தொழிலாளர் தகராறுகளைத் தீர்க்க தொழில் நீதி மன்றங்களுக்கு பிரசன்னமாதல் என்ற பல்வேறு வேலைத்திட்டங்கள், இன்னும் பல கடமைகள் இவற்றைத் திறம்பட நடத்தி பூர்த்தி செய்ய நூற்றுக்கு நூறு முயன்றவர் என்ற பெருமையினைப் பெற்றுக்கொண்டவர். எல்லா வகையிலும் தலைவர் பொருளாளருடன் சேர்ந்து சங்கம் என்னும் வண்டியினை இழுத்துச் செல்லவேண்டும். அந்தக் கடமைகளை மிகவும் துல்லியமாகச் செய்தார் என்று இப்போதைய சங்க அன்பர்கள், நிர்வாகிகள் நன்றியோடு கூறக் கேட்டோம், உற்சாகத்துடன்.

★ 1983. இந்த வருடம் இலங்கைவாழ் இந்திய வம்சாவழி மக்களுக்கு, குறிப்பாக தோட்டத் தொழிலாளர்க்கு மிகவும் முக்கியமான வருடம், மறக்க முடியாத காலம்.

1983 ஜூலை கலவரம், இதில் நூற்றுக்கு நூறு பாதிக்கப்பட்டவர்கள், இந்திய மக்கள். தோட்டத் தொழிலாளர் பல்வேறு வகையில் சிந்திக்கத் தொடங்கினர்.

எல்லா தொழிற்சங்கங்களும், தோட்டத் தொழிலாளர்களின் பாதுகாப்பான இருப்பு பற்றி மீள் பரிசீலனை செய்யத் தொடங்கி விட்டன.

தொழிலாளர் தேசிய சங்கம் சார்பில் PVK தன் தலைவருடனும், பொருளாளருடனும் தமிழகம் சென்றார். அங்கு முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்களுடனும், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோருடனும் பேச்சு வார்த்தைகள் நடத்தினார். முழுத் தோட்டமக்களையும் இந்தியா பொறுப்பேற்க வேண்டும் எனக் கூறினார்.

★ 1987, இந்த வருடம் PVK வாழ்வில் மிக உன்னதமானது. பொது வாழ்வில் அவர் ஈடுபட்டு, முப்பத்தைந்து வருடங்களுக்குப் பின் மத்திய மாகாண சபை அங்கத்துவராகத் தெரிவாகி சபைக்குச் சென்றார்.

இது அவருக்குக் கிடைத்ததொரு சிறப்புப் பதவி. நீண்ட கால சேவையாளருக்குக் கிடைத்ததொரு தேசிய அங்கீகாரம்.

ஐக்கிய சோஷலிச முன்னணி என்ற அமைப்பில் P.V.K.யும், திரு. O.A. இராமையாவும் கூட்டாகத் தெரிவு செய்யப்பட்டனர், 1987 மாகாண சபைத் தேர்தலில், நுவராலிய மாவட்டத்துக்கான மாகாண சபை உறுப்பினர்கள்.

இக்கால கட்டத்தில் இவர் தேசிய நிகழ்வுகள் பலவற்றில் பங்கு கொண்டார் இத்தகைய நிகழ்வுகளான, மகாவலி அபிவிருத்தி, சிறு கைத்தொழிலில் தோட்டமக்கள் என்பனவும் சேரும்.

★ 1987-1992 இந்த ஐந்து வருடங்களே இவர் மாகாண சபை உறுப்பினராகப் பதவியேற்று செல்வாக்கு பெற்ற மனிதராகத் திகழ்ந்தார்.

அரசியல் பதவி என்றதும், பலரும், பலவாறு தமது கருத்துகளைக் கூறுவதற்கு இடமுண்டு. ஓர் அரசியல் பதவியில் இருப்பவர்களை விமர்சிக்கவும் செய்வர். விமர்சனம் நியாயமானவைதான் என்றாலும் எமது அனுபவத்தில் இன்னொன்றும் இந்த இடத்தில் மிக உணர்வு பூர்வமாகப் பார்க்க வேண்டிய கடமை ஒவ்வொருவருக்கும் உள்ளது.

அதாவது நீண்டகாலம் ஐம்பது வருடங்கள் தொழிற்சங்கப் பணிகள், சமூகப் பணி என்று கடினமான நாட்களுடன் உண்மையாகவே உழன்று கொண்டிருந்த ஒரு மிகச் சிறந்த பொதுநலவாதிக்கு தேசமும், சமூகமும் கொடுத்த கனிவான அந்தஸ்து என்றும் இதனைக் கூறலாம். இந்த செல்வாக்கினால், சிறந்த கல்விமான்கள் இந்த தேசத்துக்குக் கிடைத்துள்ளார்கள்.

✱ 1995க்கு மேல் தனது ஆரம்ப காலத்து தொழிலாளர் தேசிய சங்கத்துத் தலைவர்களாகிய திரு. V.K. வெள்ளையன், திரு. சி.வி. போன்றவர்களை அடிக்கடி நினைவுபடுத்தி அவர்கள் கல்லறைக்குச் சென்று நினைவஞ்சலி செய்வதில் அதிக அக்கறை காட்டினார்.

அட்டன் நகர பிரமுகர்கள், கல்விமான்களுடன் அதிகமான தொடர்புகளை வைத்துக் கொண்டார்.

குறிப்பாக அட்டன் நகரில் எல்லா தொழிற்சங்கக் காரியாலயங்களும் அட்டன் வாழ் வர்த்தகர்களின் கவனத்தைக் கவர்ந்து கொள்ளத் தவறுவதில்லை.

அந்த அடிப்படையில் PVK பற்றியும் அவர் சார்ந்த தொழிற் சங்கம் பற்றியும் ஆழ்ந்த அக்கறை கவனம் கொள்வதில் முனைப்புடன் இருந்தனர். அதனால் அவருடைய தொடர்புகள் PVKவுக்குப் பெரிதும் கிடைத்தன எனலாம்.

★ 1988. இந்த கால கட்டங்களிலும், இதற்கு முன்பும் பின்பும் PVK அவர்கள் மாவலி பத்திரிகைகள் மூலம் காலத்துக்குக் காலம் அவர் ஆற்றிய உரைகள் செய்திகளாக வெளிவந்து கொண்டிருந்தது சிறப்பு அம்சமாகும்.

தேசியப் பத்திரிகைகள், மாவலி என்ற தொழிலாளர் தேசிய சங்கப் பத்திரிகை இவற்றில் அவருடைய கருத்துகள் பெருமளவு வெளி வரத் தொடங்கின. அதன் மூலம் அவர் ஒரு தேசிய அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொண்டார். இந்நிலை என்பது ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.

மாவலி பத்திரிகையில் கட்டுரைகள், மொழிபெயர்ப்பு போன்ற அம்சங்களையும் கையாண்டு ஓரிரண்டு கட்டுரைகளை எழுதிக் கொண்டிருந்தார் என அறியப்பட்டது.

★ 1990. இந்த காலகட்டத்தில் தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவருடன் சேர்ந்து பல சிறந்த முடிவுகளை மேற்கொண்டார். இந்த வருடமானது அவருடைய நிர்வாகத் திறனின் உச்ச கட்ட செயல்பாடுகளை ஆற்றத் தொடங்கினார் என்ற கருத்தினை இப்போதைய நிர்வாகத்தில் ஒருவரான செபஸ்டியன் கூறினார்.

வாசிப்புத் திறனை அதிகரித்துக் கொண்டு வந்த PVK தோட்டங்களுக்குச் செல்லல், தொழிலாளிகளைச் சந்தித்தல், தனது நிதியில் சில அபிவிருத்திகளை (தோட்டங்களில்) செய்தல் போன்றவை மிக முக்கியமானவை. இக்காலகட்டத்தில் தனது பிள்ளைகளின் கல்வியினை மேம்படுத்த தன்னாலான முயற்சிகளை மேற்கொண்டார் எனக்கூறுவதும் பொருத்தமாகும். இது ஒரு உச்சமான மனிதக் கடமையாகும்.

PVK அவர்கள் தன்னைத் தேசிய பத்திரிகைகளில் தனக்குத் தானே முயற்சித்து பிரசுரம் ஆவதற்குத் தன் சக்தியை செலவழிக்கவில்லை. இயல்பாக இடம் பெற்றுள்ள செய்திகள், பொது நிகழ்வுகள், அவை மிகக் குறைவான அளவில்.

தன்னை விளம்பரப் படுத்திக் கொள்வதில் எந்த வகையிலும் முன்னிலைப் படுத்திக் கொள்ளாத மனிதர் ஒரு தொழிற்சங்கத்தின், அல்லது ஒரு அரசியல் கட்சியின் பொதுச் செயலாளர். எத்தனையோ வகையில் தன்னை ஊடகங்கள் மூலம் வெளிக்காட்ட சந்தர்ப்பங்கள் உண்டுதான். அது தவறும் இல்லைதான். இருப்பினும் இருபத்தெட்டு வருடங்களாகப் பொதுச் செயலாளராகப் பணியாற்றியதொரு சங்கப் பிரமுகர், இத்தனை வருடங்கள் அடக்கமாக தன்னைக் காட்டிக் கொள்ளாது வாழ்ந்து மறைந்த அன்பர் உண்மையிலேயே போற்றத்தகுந்தவர் தானே.

தன் சங்கம் அல்லது கட்சி வெல்கிறதோ இல்லையோ, தான் வெல்கிறோமோ இல்லையோ இருக்கும் வரை ஒரு சமூக செல்வாக்குடன் வாழ்வோமே என்ற வாழ்வுப் பொருள் அதிகரித்து விட்ட கால கட்டத்தில், இப்படி தன்னை அடையாளம் காட்டாது வாழ்ந்த பெருந்தகை PVK

★ மேதினம் PVK அமைத்துள்ள மேதினக் கூட்டங்கள் அட்டன், மஸ்கெலிய, பொகவந்தலாவ, புளியாவத்தை, ராகலை, புசல்லாவ, தவவாக்கலை, கொட்டக்கொல போன்ற சிறிய நகர்களில் இடம் பெற்றுள்ளன. இந்த மேதின விழாக்களில் குறிப்பாகத் தொழிலாளர் சம்பள விவகாரம், வேலை நேரம், வீடில்லாப் பிரச்சினைகள், குடியுரிமைப் பிரச்சினைகள் இவற்றுடன் கல்வி, சுகாதாரப் பிரச்சினைகளும் பேசப்பட்டன.

மேதின நிகழ்வுகளில் PVKயின் பேச்சு சிம்மக்குரலாக ஒலிக்கும், மிக உணர்ச்சி வசப்பட்ட நிலையிலே உரையாற்றுவார் எனக் கூறக் கேட்டுள்ளோம்.

✱ அநேகமாக மேதின விழாக்கள் வர்ணக் கோலமாகவே இருக்கும். 85, 90களில் பல்லாயிரக்கணக்கான மக்கள் தொ.தே.க. சார்பாகக் கலந்து கொண்டு கோஷங்களை எழுப்பித் தமது தொழில் பிரச்சினைகளை முன்வைப்பர். இதற்கெல்லாம் முத்தாரமாக தலைவர்களும், PVKயும் பிரச்சினைகளுக்குத் தீர்வாக பல ஆலோசனைகள் தமது மேடைப் பேச்சுக்களில் முன்வைப்பர். மலையகத்தில் ஒரு மிக உற்சாகமான கலாச்சாரமாகவே தொழிலாளர் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. இத்தகைய விழாக்களில், சிறப்பான கட்டங்களை புகைப்படப்பிடிப்பாளர்கள் வெவ்வேறு கோணங்களில் படமாக்கி ஆவணப்படுத்தலுக்கு அருமையான பங்களிப்பைச் செய்வர்.

✱ இருபத்தோராம் நூற்றாண்டு ஆரம்பிக்கும் நிமிடத்தில் உலகம் எங்கோ போய்க் கொண்டிருக்க, தோட்டத் தொழிலாளிகள் தொழிற்சங்கத் தலைமைகளின் நண்பர்களாகவே வாழ்ந்து கொண்டிருந்தனர்.

இதன் இயல்புத் தாக்கமாக ஒரு எல்லைக் கோடாக 2001ம் ஆண்டு PVK அவர்கள் தனது பொதுச் செயலாளர் பதவியினை திரு. S.A. கந்தசாமி அவர்களுக்குக் கையளித்து தான் சிறிது காலம் நிதிச் செயலாளர் பதவியினை ஏற்றுக் கொண்டார்.

இந்த நிலையில் தொ.தே.ச ஒரு நிர்வாகத் தலம்பலை எதிர் நோக்கியது. பொதுவாக மலையகம் தொழிற்சங்கத்தைவிட அரசியலையே ஒரு பொது எதிர்பார்ப்பாக ஏற்று இயங்கத்

தொடங்கியது. இதன் காரணமாக அரசியலில் தொ.தே. சங்கம் சற்று பின்வாங்கியது.

★1999. இவ்வருடம் பாராளுமன்ற பொதுத் தேர்தலில் போட்டியிட்டார். எனினும் வெற்றி பெறவில்லை.

அதே வருடம் இரத்த அழுத்தம் ஏற்பட்டு வைத்திய சாலையில் (கிளங்கன் வைத்தியசாலை) அனுமதிக்கப்பட்டார். அப்போது அவர் வயது அறுபத்தாறு. அதன் பின்னர் கண்டி, பேராதனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

என்றாலும் தொழிற்சங்கப் பணிகள் அவரை அழைத்துக் கொண்டேயிருந்தன. ஆதலால் ஏதோ கடமைகளை தனது உடல் உபாதைகளுடன் செய்து கொண்டிருந்தார். அவர் தொழிற்சங்கத்தில் சேர்ந்து 46 வருடங்களுக்குப் பின்னும் அது அவரை அழைத்தது. ஏதோ சிறிய, சிறிய வேலைகள், மற்றவர்க்கு ஆலோசனைகள் என்ற வகையில் பணிகள் தத்தித் தத்தித் தொடர்ந்தன எனக் கூறலாம். என்றாலும் சேவை சேவை தானே!

★2002. இவ்வருடம் அவர் தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவர் பதவியினை ஏற்றார் என்றாலும் அவரால் ஒரு கௌரவத் தலைவர் என்ற முறைமையினையே அவரால் பெரும்பாலான நேரங்களில் செயல்பட முடிந்தது.

அடிக்கடி மருத்துவப் பரிசோதனைகளுக்குத் தன்னை ஈடுபடுத்தினார்.

இதிலிருந்து அவர் தொழிலாளர் தேசிய சங்கக் காரியாலயத்துக்கு வருவதை முழுமையாக நிறுத்திக் கொண்டார். சங்கம் அவரிடமிருந்து விடுப்பட்டது. என்றாலும் அவருடைய எண்ணங்களில் தொழிற்சங்க ஞாபகங்கள் இடம் பெற்றிருந்தே

இழையோடியது. நாட்கள் நகர்ந்தன. அன்பு மனைவியின் பிரம்மாண்டமான பாதுகாப்பிலும், அன்புப் பிள்ளைகளின் ஆறுதலிலும் அவர் ஏதோ வாழ்ந்தார் தொழிற்சங்க ஞாபகங்களுடன்.

5.09.2005 அன்று PVKயின் அன்பு மனைவி லெட்சுமி அம்மையார் காலமானார். இது PVK அவர்களுக்கு மிகுந்த வேதனையையும், பெருந்தாக்கத்தையும் ஏற்படுத்தியது. இதனால் அவர் தன் சுயநம்பிக்கையை இழந்தார். இந்த நிலையில் அவர் மனோ நிலை மாற்றம் கண்டது. இவ்வுலகின் ஆசாபாசங்களிலிருந்து அவர் தன்னை விடுவித்துக் கொண்டு நாட்களை எண்ணிக் கொண்டிருந்தார். மனைவியின் ஞாபகங்களிலேயே முப்பது தினங்கள் வாழ்ந்துள்ளார் எனத் தெரிய வந்தது. அவர், அந்தச் சூழலிலே, 05.10.2005ல் இவ்வுலகை விட்டுப் பிரிந்தார்.

ஆனாலும், அவருடைய உண்மையான உயிர் 5.09.2005 மனைவியுடனேயே சங்கமமாகி மறைந்து விட்டது என்பதே சரியான நிறைவுக் கணிப்பாகும்!

# 22. மாவலி மற்றும் தேசியப் பத்திரிகைகளில்

**மாவலி மாத இதழ் 36 பக்கங்களைக் கொண்ட சிறிய புத்தகம் 1970க்கு சற்று (முன்னும் பின்னும்)**

1978 முதல் மாவலி பத்திரிக்கை 4 பக்கங்களைக் கொண்ட சுருக்கமான இதழாக வெளி வந்தது. மாவலி இதழ்களை ஆராய்ந்தபோது 1995 வரை வெளிவந்தது. இத்தொழிற்சங்கம் மலையக மண்ணில் இ. தொ. கா.வுக்கு அடுத்ததாக, மிகச் சிறந்த தொழிற்சங்கமாகவும், அறிவு சார்ந்த கலாச்சார விழுமியங்களைக் கொண்ட அமைப்பாகவும் நிலைபெற்று இயங்கி வந்துள்ளது என்பதை மிகத் துல்லியமாக உணர முடிகிறது.

தொழிலாளர் தேசிய சங்கத்தின் பத்திரிகையாக எழுபதுகள் எண்பதுகளில் ஏராளமான பிரதிகளாக மாதமொருமுறை என்று வெளி வந்து கொண்டிருந்தது. இதன் தாபக ஆசிரியராக மலையகத்தின் புகழ்பெற்ற முன்னோடிக் கவிஞரும் எழுத்தாளரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமாகிய அமரர் C.V. வேலுப்பிள்ளை (சங்கத்தின் நிர்வாகப் பொறுப்பாளர்) என்பது குறிப்பிடத்தக்கதாகும். எழுத்துலகில், 1940 முதல் 1970 வரை அவருக்கு பெரும் செல்வாக்கிருந்தது.

இந்திய வம்சாவழி தோட்டத் தொழிலாளர் வாழ்க்கை பற்றிய அம்சங்களுடன் அமரர் C.V.யும், இந்தியாவிலிருந்து இலங்கை வரும் ஏழைத் தமிழர் வாழ்வு பற்றி, ராஜா புரக்டரும்

இந்திய ஆங்கில ஏடுகளில் சிறுகதைகள் படைத்துக் கொண்டிருந்தனர் என்பது ஒரு வரலாற்றுச் செய்தி.

மாவலி பத்திரிகையில் PVKயின் கருத்துகள், காலத்துக்குக் காலம் பிரசுரம் ஆயின. (1978 - 1990).

மாவலி இதழ் 1974. மார்ச் - ஒரு மொழிபெயர்ப்பு. தொழிலாளர் வேலை நீக்க சட்ட விதிகள்.

1971 அரசு அமுலாக்கிய தொழிலாளர் வேலைக்கமர்த்தல், வேலை நீக்கம், வேலையிலிருந்து ஓய்வு இன்னும் பல.

இதில் 1971 3ம் நம்பர் கூட்டு ஒப்பந்தம் 25ம் சரத்து, மற்றும் 1971ம் ஆண்டு 45ம் சரத்து.

(இந்த மொழிபெயர்ப்பு கட்டுரை உதவி தொழில் கமிஷனர் அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டது) (மாவலி பக்கம் 4)

1978 சென் ஜோன் பொஸ்கோவ் கல்லூரியில் தொழிற்சங்க இயக்கங்களின் போக்கு பற்றிக் குறிப்பிட்டது அனைத்து ஊழியர்களும் சுயநலமின்றி பாடுபட்டு தொழிலாளர் தேசிய இயக்கத்தைப் பலப்படுத்த வேண்டும்.

1978 ஜனவரி இதழ். ஜூன் 1979. தோட்டத் தொழில் செய்வதற்கும், அதாவது சாதாரண தோட்ட தொழிலாளியாவதற்கும் பிரஜா உரிமை கேட்கும் நிர்வாகம்.

குடியுரிமைக்கு விண்ணப்பம் செய்து காத்திருப்பவர்க்கு தோட்டங்களில் வேலை இல்லை. இது அபத்தம்.

தலைப்பு : அன்று போர்கொடி இன்று காவடி

10.6.1979 தோட்டத் தொழிலாளர் அரிசி ரேசன்களை ரத்துச் செய்வதற்கு அரசு யோசிக்கிறது.

கிராமத்தில் சொந்தக் காணியில் வாழ்பவர்கட்கு ரேசன் அரிசி. இவர்களுக்கு இல்லை.

தோட்ட தொழிலாளர் இந்த அரசில் சுபீட்சமாக வாழவில்லை.

மே. 1980 (மேதினம்). அரசு எத்தனையோ சட்டங்களைத் திருத்தி அமைக்கிறது. தோட்டத் தொழிலாளர் 108 நாள் வேலை என்ற சட்டத்தை திருத்தவோ மாற்றவோ முற்படவில்லை. அது ஏன்? தோட்டத் தொழிலாளர்க்கு எந்த முன்னேற்றமான சட்டத்திலும் இடமில்லை.

தலைப்பு : பொதுச் செயலாளரின் சிம்மமுழக்கம்.

1981.1.மே. தொழிலாளர்கள் தம் வாழ்க்கைச் செலவை திட்டமிட வேண்டும். திட்டமிட்டு வாழவேண்டும். இந்த நிலை ஏன் என்றால் அனைவரும் தோட்ட நிர்வாகத்தை நம்பிக் கொண்டிருப்பதுதான். ஒவ்வொரு குடும்பமும் ஒரு நோட்புத்தகம் வாங்கி அதில் ஒரு வருட கணக்கு வைத்துக் கொள்ள வேண்டும்.

1982. பத்து வருடங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள உரிமைகள் நடைமுறையில் நாடற்றவர்களுக்கு இல்லை. இலங்கை இந்திய ஒப்பந்தங்கள் போதியளவு மக்களுக்கு நன்மை கிடைக்கின்றதா? என்பது கேள்விக்குறிதான். இந்த நிலை மாற வேண்டும். உரிமைகள் யாவற்றையும் பெற வேண்டும்.

1983. ஜனவசம தோட்ட நிர்வாகத்துக்கு 18 கோடி ரூபாய் நட்டம், 1978ம் ஆண்டு முடிய. தேசப் பற்றும், நிர்வாகத் திறமையும் இல்லாத தோட்ட நிர்வாகிகள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். தனியாரும், வெளிநாட்டுக் கம்பனிகளும் லாபமீட்டின. அரசியல் காரணங்களினூடாக பதவி நியமனம்

பெற்றவர்கள். நொண்டிக் காரணம் காட்டி தொழிலாளர் வேலை குறைப்பு.

1983. தோட்டத் தொழிலாளியென்றால் தாக்குதலுக்கு ஆளாக வேண்டுமா? தமிழ்ப் பகுதிகளில் குடியேறிவாழ்வதா? மலையகத்தில் காணிக்காகப் போராட தங்களைத் தயார் செய்து கொள்வதா? எது என்று சிந்தியுங்கள்.

1983. தலைப்பு : வெள்ளையனின் தீர்க்க தரிசனம் இன்று நிதர்சனமாகிறது. அமரர் வெள்ளையன் நம்மை விட்டுப் பிரிந்து பல ஆண்டுகளாகின்றன. தொழிலாளர் தேசிய சங்கத்தின் மூலம் சிறந்த லட்சியங்களை நிறைவேற்ற முயன்றார்.

1983 சென்னையில் ஆற்றிய உரை - PVK இலங்கையில் இந்திய வம்சாவழி மக்களுக்கு ஜீவாதார உரிமைகளை வழங்கியிருப்பதாகக் கூறுவது கண்துடைப்பு.

20.2.1983. சென்னை பெரியார் திடலில் நடைபெற்ற மலையகத் தமிழர் உரிமை காப்பு மாநாட்டில் பொதுச் செயலாளர்.

பொதுச் செயலாளர் ஹங்கேரி பயணம். தமிழகத்தில் தலைவர்களைச் சந்திப்பார்.

29.9.83ல் பயணமானார். தொழிற்சங்க சம்மேளன 9வது மாநாட்டில் இவர் கலந்து கொண்டு உரையாற்றுவார். திரும்பும் வழியில் தமிழக முதல்வர் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோருடன் இங்கை இந்தியத் தமிழர் பற்றி உரையாடுவார்.

1983. வட கிழக்கு தமிழர் பிரச்சினை வேறு, எமது பிரச்சினை வேறு. யார் ஒப்புக் கொண்டாலும் ஒப்புக் கொள்ளாவிட்டாலும் எமது நாடு தமிழகமே. அங்கு திரும்பி வந்து

குடியேறிவாழ்வதற்கு எங்களுக்கு சகல உரிமையும் உண்டு. தமிழகத்தில் 15 தினங்கள் தங்கியிருந்து பல்வேறு தலைவர்களைச் சந்தித்தார்.

1984 மார்ச். தொழிலாளர் தேசிய சங்கத்தின் வேலை நிறுத்தம். ஏப்ரல் 2ல் பொதுச் செயலாளர் அறிவிப்பு. தொழிலாளர் சம்பள உயர்வுக்காக இ.தொ.கா உடன் சேர்ந்து ஏப்ரல் 2ம்திகதி திங்கட்கிழமை முதல் வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதிக்கிறது.

1984 டிசம்பரில் மக்கள் கவிமணி சி.வி. வேலுப்பிள்ளை மறைந்தார்.

19.11.1984 அதிகாலை காலமான அவருக்கு PVK சங்க உறுப்பினர்களுடன் உடனடியாக ஈமக்கிரியைகளுக்கான வேலைத்திட்டங்களில் இறங்கினார்.

1985 ஆகஸ்டு. நமது மலையகத்துப் பெண்கள் தாங்களாக முன்வந்து பிரச்சினைகளை முகம் கொடுக்கப் பழகவில்லை. எதற்கெடுத்தாலும் ஆண்களையே நம்பிக் கொண்டிருக்கிறார்கள்.

மகளிர் விவகார அமைச்சர் இருந்தும் மலையகத்துப் பெண்களை கவனத்திற் கொண்டு எந்த நடவடிக்கையும் எடுக்க வில்லை.

1986 P.V.K. உரை. தனக்கென வாழாது மக்களுக்காக வாழ்ந்தவர் திரு. சி.வி.வேலுப்பிள்ளை. சி.வி. என்று நண்பர்களாலும், எழுத்தாளர்களாலும் அழைக்கப்பட்டவர். இலக்கியத் துறையில் சாதனை படைத்தவர். ஆங்கில இலக்கியத்தில் காலடி வைத்து பணிசெய்தவர். 1984ம் ஆண்டு நவம்பர் மாதம் 19ம் திகதி இயற்கை எய்தினார்.

1987 ஜூலை. அட்டன் டிக்கோய நகரசபைத் தேர்தலில் பொதுச் செயலாளர் போட்டியிடுகிறார். சுயேச்சைக்குழுவின் சின்னம் நாற்காலி.

1988 ஏப்ரல் / மே மத்தியமாகாண சபைத் தேர்தலில் நுவரெலிய மாவட்டத்தில் ஐக்கிய சோஷலிச முன்னணி வேட்பாளராகப் போட்டியிடும், நமது பொதுச் செயலாளர் PVK அவர்களின் வெற்றி தொழிலாளவர்க்கத்தின் வெற்றி.

1988 மார்ச். நமது பொதுச் செயலாளர் நாடு திரும்பினார்-தலைப்பு. செக்கோஸ்லவாக்கியாவின் தலைநகர் பிராக்கில் நடைபெறும் சர்வதேச விவசாய காடு வளர்ப்பு, தோட்டத்துறை தொழிலாளர் சம்மேளனத்தின் 10வது மாநாட்டில் கலந்து கொண்டார்.

15.3.88 முதல் 18.3.88 வரை இம்மாநாட்டில் தொழிலாளர் பிரச்சினை ஆராயப்பட்டது.

1990 மார்ச். தொழிலாளர் தேசிய சங்கம் மயில் சின்னத்துடன் அரசியல் கட்சியாகப் பிரகடனம். நேர்மையான சேவைக்குக் கிடைத்த பெரும் வெற்றி.

1990 மார்ச். ஜனாதிபதி பிரேமதாச அவர்கள் தலைமையில் அனைத்துக் கட்சிகள் கூட்டங்களில் தொ.தே.ச. சார்பில் பொதுச் செயலாளர் P.V.K. யும் நிதிச் செயலாளர் P. பெருமாள் அவர்களும் கலந்து கொண்டனர்.

1990 செப்டம்பர். வடகிழக்கு மாகாணம் நிரந்தரமாக ஒன்றிணைக்கப்பட வேண்டும். சர்வகட்சி மாநாட்டில் அறிக்கை சமர்ப்பித்து P.V.K. உரை. ஜனாதிபதி பிரேமதாச அவர்களுக்கு அனுப்பிவைத்த கடிதத்தின் நகலை சமர்ப்பித்தார்.

1990 அக்டோபர். மீரியா கொடை காணியை விவசாயம் செய்தவர்க்கே வழங்க வேண்டும்.

சாமிமலை மீரியா கொடை தோட்டத்தில் காடாய்க் கிடந்த கடந்த பத்து ஆண்டுகளாக தோட்டமும் தோட்ட மக்களுக்கே வழங்கவேண்டும்.

1991 ம.மாசபை உறுப்பினர் P.V.K. கொட்டக்கலை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் கணித, விஞ்ஞானத்துறை ஆரம்பிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையுடனான கடிதத்தை மத்திய மாகாண கல்வி அமைச்சர் கௌரவ இராமநாதனுக்கு அனுப்பிவைத்தார்.

1992. தொழிற்சங்க ரீதியில் பணி புரிவதில் நாம் என்றும் பின் நிற்பதில்லை. வெள்ளையன் சிரார்த்த தினத்தில் PVK.

## தேசிய பத்திரிகை செய்திகள், வீரசேகரி, தினகரன், சிந்தாமணி, Daily News, அறிக்கைகள் சேகரிப்புக் கோவை P.V.K. அறிக்கைகளில் சில.

(1980 முதல் 2000 வரை)

1. தோட்ட இளைஞர்கட்கு தொழில் துறையில் பயிற்சி.

2. மலையக ஆசிரியர்கள் கடமை மேலோங்க வேண்டும்.

3. தொழிலாளர் தம் சக்தியை குறைத்து மதிப்பிடலாகாது.

4. மலையக இளைஞர், யுவதிகள் வேலை வாய்ப்பில் முன்னுரிமை.

5. ஜனதா அபிவிருத்தி பெருந்தோட்ட சபை கேள்விக் கொத்தின் (Tender) மர்மம் என்ன.

6. துப்பாக்கிச் சூடு. சம்பந்தப்பட்டோர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

7. ஊழியர் சேமலாப நிதியைப் பெறுவதில் உள்ள கஷ்டத்தை நீக்க வேண்டும்.

8. பிரஜா உரிமை விசாரணை தொழிலாளர்க்கு நேரடியாக கடிதம் மூலம் அறிவியுங்கள். ஆணையாளர்க்கு தேசிய தொழிலாளர் சங்க செயலாளர் கடிதம்.

9. மலையக மக்கள் நிலையை தெளிவுபடுத்த வேண்டும்.

10. தொழிலாளி கடனாளி ஆகக் கூடாது. ஆனால் குடிகாரர்களாக மாறலாமா?

11. இ.தொ.கா. பிரார்த்தனை கூட்டம் தொ.தே. சங்கமும் ஈடுபட ஆராய்வு.

12. தொழிலாளர்கள் இரவில் தொழிற்சாலைகளில் தங்க வசதி செய்து கொடுக்க வேண்டும். பெருந்தோட்ட கூட்டுத் தாபனத்தலைவர் ரன்ஜன் விஜயரத்னாவுக்குக்கடிதம்.

13. தொழிலாளர் தேசிய சங்கத்தின் இளைஞர் மாநாடு. அட்டன் ந.ச. மண்டபத்தில் நடந்த போது பொதுச் செயலாளரின் அறிக்கை.

14. நாட்டில் அமைதி சமாதானம் நல்லுறவு பாதுகாப்பு போன்றவற்றுக்கு தோட்டத் தொழிலாளர் மாத்திரம்தான் பிரார்த்தனை செய்ய வேண்டுமா? பொதுச் செயலாளர் கேள்வி.

15. தொழிற்சங்கவாதிகளின் ஞாபகார்த்தமாக கவிதை கட்டுரைப் போட்டி, பொதுச் செயலாளர் தலைமையில்.

16. மின்சாரம், சீமெந்து தருகிறோம் என்று ஏமாற்றி ஆள் சேர்க்கும் தொழிற்சங்கங்கள் - PVK

17. முரண்பாடுகளைப் பேச்சு வார்த்தை மூலம் தீர்க்க வேண்டும்.

18. எமது அடிப்படைத் தேவைகள் தேசிய ரீதியில் சமத்துவம் உடையதாக இருக்க வேண்டும்.

19. அமரர் சி.வி. மனிதருள் மாணிக்கமாவார்.

20. தோட்டத் தொழிலாளரின் மனிதாபிமானத்தைக் கௌரவிக்க வேண்டும். தொழிற்பயிற்சியமைச்சர் மஹிந்தவுக்கு PVK கடிதம்.

21. தோட்டங்கள் மீள, நல்லமைப்புக்குக் கொண்டு வர தொழிற்சங்கங்களுடனான கலந்துரையாடல் அவசியம்.

22. பெரும்பான்மை மக்கள் விரும்பும் அரசு உருவாவதை எம்மால் தடுக்கமுடியாது.

23. கௌரவ அமைச்சர் மகிந்தவுக்கு ஒரு கடிதம், தொழிலமைச்சராகத் தெரிவு செய்யப்பட்டமைக்கு.

24. பொதுமக்கள் கூட்டணி அமோக வெற்றியீட்டும் மஸ்கெலியாவில் PVK தேர்தல் பிரசாரக் கூட்டம்.

25. தோட்டத் தொழிலாளர்க்கு மாதச் சம்பளமாக ரூ. 2000/- வழங்கப்பட வேண்டும் - PVK அறிக்கை.

26. முழுமையாக தொழிலாளர்களைக் கொண்ட தொழிற்சங்கத்தை உருவாக்கியவர் வெள்ளையன்.

27. அடையாள அட்டை பெற இந்திய உயர் ஸ்தானிகரின் உதவி கோரிக்கை.

28. போட்டிப் பரீட்சை மூலம் தோட்டப் பாடசாலை அதிபர் நியமனம் வழங்குக.

29. இந்தியப்பிரஜை எனக் காரணம் காட்டி வேலை மறுக்கக் கூடாது.

30. தோட்டங்களில் பெயர் பதியும் போது பிரஜா உரிமை பெற்றவர் இந்திய பாஸ்போட் பெற்றவர் என்ற பேதம் காட்டக் கூடாது.

31. ஜனாதிபதி பிரேமதாசவுக்கு PVK கடிதம்.

32. தோட்டத் தொழிற்சங்கக் கூட்டுக் கமிட்டி தீர்மானம். தோட்டங்களைத் தனியாருக்குக் கையளிக்கும் திட்டத்துக்கு எதிராகக் கண்டனம்.

33. நோர்வுட் நகரில் ரஜீவ் காந்திக்கு அஞ்சலியும் பிரார்த்தனையும் - P.V.K. உரை.

34. கொட்டகலை ஸ்ரீ பாத கல்விக் கல்லூரி மலையக மாணவர்க்குப் பயன்படாமல் போகுமா? ஜனாதிபதி தலையிடவேண்டும் - PVK கடிதம்.

35. தோட்டத் தொழிலாளிக்குக் காணி வழங்குவதில் பாரபட்சம் காட்டப்படுகிறது.

36. தோட்டத் தொழிலாளர்க்கும் சம்பள உயர்வு வழங்க வேண்டும்.

37. சம்பள உயர்வு வழங்கும் போதெல்லாம் தோ. தொழிலாளர்க்கும் வழங்கப்பட வேண்டும்.

38. சுற்றறிக்கை பற்றி கல்வி அமைச்சர் அறிவாரா? கல்வி அமைச்சர் கௌரவ இராமநாதனிடம் கேள்வி.

39. கல்வி அமைச்சருக்கு வேண்டுகோள், ஸ்ரீபாத கல்விக் கல்லூரிக்கு நாலுஅம்சக் கோரிக்கை.

40. இளைஞர்களின் பங்கு சமூகத்துக்கு மிக முக்கிய மானது.

41. தோட்டத் தொழிலாளரின் வாழ்க்கையில்.

42. விளையாட்டுத் திடல்கள் சரியாக அமைந்தால் தான் சிறப்பாக ஆடலாம்.

விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற குழுவுக்கு கேடயம் வழங்கி PVK உரை.

43. தோட்டப்பகுதிகளின் எல்லாத் தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகளுக்கும் இடமளித்திடுக. தோட்டத் தொழில்துறை அமைச்சர் திரு. காமினி திசாநாயக்கவுக்கு PVK கடிதம்.

44. ஒரே தொழிலைச் செய்யும் தொழிலாளர் சம்பளத்தில் வேற்றுமை. தோட்டம் நட்டத்தில் இயங்குவது பல காரணங்களினால். நட்டம் ஏற்பட்டால் பங்கேற்றுக் கொள்ள வேண்டும் - PVK

45. தலவாக்கலை நுவரெலிய பஸ் சேவை மிக மோசமாக உள்ளது - PVK

46. நலிந்து கிடக்கும் தொழிலாளர் முன்னேற்றத்துக்கு அச்சாணியாகத் திகழ வேண்டும்.

47. தொழிலாளிகளின் அதிமுக்கியப் பிரச்சினைகட்கு இன்று நாம் முகம் கொடுத்து வருகிறோம்.

48. தோட்டத் தொழிலாளர்க்கு தீபாவளி முற்பணம் 1000 ரூபாய் வழங்கவேண்டும். ஜனவசம தலைவர்க்குக் கடிதம்.

49. தோட்டங்களை மத்திய மாகாண சபை நிர்வாகத்தின் கீழ் கொண்டு வருக.

50. தோட்டங்களில் வெளியார் வேலை செய்ய அனுமதிக்க முடியாது.

51. தோட்டப் பகுதிகளில் கூட்டுறக் கடைகள் திறக்கப்படல் வேண்டும்.

52. மலையகத்தில் பாடசாலைத் கட்டிடங்கள் உயர்ந்துள்ளன. கல்வி நிலை தாழ்ந்துள்ளது. - ம.மா.ச. உறுப்பினர் - PVK

53. உறுதி மொழிகளை செயல்படுத்துவோம். ஐக்கிய கோஷலிச முன்னணி சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற PVK சத்தியப் பிரமாண நிகழ்வில் உறுதிமொழி.

54. மாகாண சபையில் தோட்டத் தொழிலாளர்களின் பல பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண வழியேற்படும்.

55. செக்கோஸ்லோவாகியாவின் தலைநகரின் ப்ராக்கில் நடைபெறும் சர்வதேச விவசாயக் காடு வளர்ப்பு, தோட்டத் தொழிலாளர் சம்மேளனத்தின் பத்தாவது மாநாட்டில் கலந்து கொள்ள PVK 10.3.88 அன்று செக் புறப்பட்டார்.

56. தோட்டத் தொழிலாளரை நிதியமைச்சர் ஏமாற்றிவிட்டார். - PVK உரை.

57. வாக்குரிமை, குடியுரிமை பெற தொழிலாளர் ஒன்று சேர்ந்து போராட்டம் நடத்த வேண்டும்.

58. PVK பற்றி வீரகேசரி செய்தி சிறந்த பேச்சாளரும், எழுத்தாளருமான தொழிலாளரின் உரிமையை வென்றெடுக்கப் பாடுபடும் தொழிற்சங்கவாதி.

59. கைது செய்யப்பட்ட மலையக இளைஞர் விவகாரம் சம்பந்தமாக இந்திய அமைச்சர்களுடன் ஆராய PVKயும் தலைவரும் 23.01.82 இந்தியா செல்கின்றார்கள்.

60. அரசியல் சார்புடைய தொழிற்சங்கங்கள் தொழிலாளர் பிரச்சினையை விட அரசியல் கோரிக்கைக்கே செவிசாய்க்கும்.

61. தோட்டத் தொழிலாளரின் பிள்ளைகட்கு குடியுரிமையே தேவை.

# 23. PVK சிறந்த மக்கள் பிரதிநிதி

மனித சமுதாயத்தின் உயிர்நாடியினை உசுப்பிவிட்டு அவர்களின் சமூக அரசியல் பிரச்சனைகளில் முண்டியடித்து செயல்பட்ட அரசியல் சமுதாய சேவகர்களில் அமரர். திரு. பி.வி. கந்தையா அவர்கள் மலையக அரசியல், மற்றும் தொழிற்சங்க வரலாற்றில் தீர்க்க தரிசனமாக திகழ்ந்தார் என்பதில் அவரின் வரலாற்று ஏடுகள் சான்று பகர்கின்றன.

சுமார் 50 வருடகாலம் தன் வாழ்நாளை பொதுப்பணிகளில் அர்ப்பணித்து தன் சமுதாய மக்களின் ஆசீர்வாதத்தை வென்றெடுத்த தொழிற்சங்க மேதையென்றால் அது மிகையாகது. தன்னுடைய நிர்வாகத்திறமையால் தொழிலாளர் தேசிய சங்கத்தை ஆலமரமாக வேரூன்ற வைத்து பெருமைக்கு சொந்தக்காரராக தன்னுடைய இறுதி காலம் வரை சுயநலவாழ்வை புறந்தள்ளிவிட்டு இத்தொழிற்சங்கத்தின் புதுமையான கொள்கையினையும், அதன் அருமை பெருமைகளையும் பொக்கிஷமாக வைராக்கியத்துடன் கட்டிக்காத்தார் என அவர் அக்கட்சியின் 40 வருட பிரதிநிதி என்பது புரியவைக்கின்றது.

''இந்திய வம்சாவளி மக்கள் பேரணி'' என்ற அமைப்பை உருவாக்குவதில் காலஞ் சென்ற அமரர் ஸ்ரீமான் சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்களுடன் புரிந்துணர்வுடன் இணைந்து தோளோடு தோளாக செயல்பட்டு தொழிற்சங்க பிரிவினைக்கு சாவமணியடிப்பதில் சிறந்த ஒத்துழைப்பை வழங்கி தூரநோக்கு சிந்தனை கொண்டவராக திகழ்ந்தார்.

இவர் சமுகநலவாதியாக செயல்பட்ட நிமிடங்கள் எண்ணிலடங்காதவை, வியப்புக்குரியவை.

முதலாவது மாகாணசபைத் தேர்தலில் வெற்றியீட்டி தொழிலாளர் தேசிய சங்கத்துக்கும் அதன் மக்களுக்கும் ஓர் உத்வேகத்தையும், உந்துசக்தியையும் கொடுத்து, அதனுடாக பல நிர்மாண, புனர்நிர்மாணப் பணிகளில் ஈடுபட்டு குறுகிய காலத்தில் சிறந்த மக்கள் தொண்டனாக தன்னை இனம் காட்டினார்.

சிறந்தவர்களும், உயர்ந்தவர்களும் எப்போதும் இலங்கை அரசியல் அரங்கில் போற்றப்படுவதில்லை என்பதில் இவர்போன்ற தியாக மனப்பான்மை கொண்ட அர்ப்பணிப்பு வாதிகள் மக்களால் ஊக்குவிக்கப்படாமை நமது சமுதாயத்துக்கு நாம் இழைக்கும் அநீதியும் களங்கமுமாகும்.

''முறை செய்து காப்பாற்றும் மன்னவன் மக்களிடை இறையென்று வைக்கப்படும்'' என்ற வள்ளுவன் வாக்குக்கு ஏற்ப சிறந்த சேவைதனை வழங்கி மனிதபிமானத்துடன் தனக்கென அரசியல் சமூகத் தொண்டுகளை அர்ப்பணிப்புடன் பிரகாசமாக வெளிப்படுத்தினார் என்பது கண்கூடு.

அமரர் திரு. பி.வி.கந்தையா அவர்கள் மக்கள் மன்றங்களில் இடம் பெற குறைவான சந்தர்ப்பங்களைப் பெற்றிருந்தாலும் இவரின் சேவை காலத்தாலும் மானப்பெரிது என்பது மறுக்கமுடியாத உண்மை.

இவரது ஆவேச சேவை மனப்பான்மை தோட்டப்புறங்களுக்கு ஊடுருவி மக்கள் மனதில் உள்ள அரசியல் உரிமைகள் சம்பந்தப்பட்ட காயங்களையும், வடுக்களையும்

இல்லாமல் செய்வதிலும் ஆழ்ந்த அறிவு, நிர்வாகத்திறமை இனிவரும் அரசியல் சமூகத்தால், பின்பற்றவும், நெறிமுறையாக கொள்ளவும் எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

"தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார் தோன்றலின் தோன்றாமை நன்று" என்னும் வள்ளுவன் கூற்றுப்படி தன் வாழ்நாளின் கடைசி நிமிடம் வரை ஒரே தொழிற்சங்கத்தின், ஒரே கொடியினையும், கொள்கையினையும் அரவணைத்தும், தழுவிக்கொண்டும் வையகத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து சிறந்த மக்கள் பிரதிநிதியாக மக்கள் மனதில் இடம் பெற்று மலையக அரசியல் வரலாற்றில் உயரிய அந்தஸ்தினைப் பெற்றுள்ளார்.

மலையக அரசியல் வானில் காலத்தை வென்று காவியம் படைக்கும் மக்கள் பிரதிநிதிகளில் இவருக்கென்று தனி இடம் உண்டு. இது அவரின் கால ஏடுகள் வெளிக்காட்டிய உண்மை.

க. சத்தியேந்திரன்

# 24. PVK குணநலன்கள், பணிகள், தகைமைகள், அர்ப்பணிப்புகள்

★ பேச்சு குறைவு, செயல்பாடு அதிகம், தொழிலில் கூடிய கவனம், அனைவருடனும் அன்பாகப் பழகும் தன்மை.

★ அறிவுக்கு முக்கியத்துவம், அநாவசியமான விடயங்களில் நேரத்தை செலவழித்தல் கிடையாது.

★ கண்டிப்பு அதிகம், விட்டுக் கொடுப்பு முறையாக இருக்கும்.

★ உடல் நலத்தில் அக்கறை. அலட்டிக் கொள்ளாமல் கடமைகளைச் செய்தல்.

★ நேரந் தவறாமை, நேர்வழி செல்லுதல், எளிமையான வாழ்க்கை, மனைவி மக்களுடன் அன்பாகப் பழகி, பாசம் கொண்டு அவர்களை முறையாக வாழ வைக்க எடுத்துக் கொண்ட முயற்சிகள் ஏராளம்.

★ பண்பாட்டு அம்சங்களில் உயர்ந்தே காணப்படுகிறார். எளிமையான வாழ்வு.

★ மக்களுடன் அன்பாகப் பழகுபவர். அவர் பதவி பெற்ற முதலாவது தொழிற்சங்கமாகிய இ.தொ.கா.வில் ஒரு சுறுசுறுப்பான ஊழியராகப் பணியாற்றியுள்ளார். விடயங்களைக் கற்றுக் கொள்வதில் சாமர்த்தியமாகவே இருந்துள்ளார்.

★ உணவு உடைகளில் எளிமை. தோட்டத்தொழிலாளர் பற்றிய, நீண்ட கால சிந்தனை. நிதானமான தீர்வுக்காக போராட்டம்.

★ தன்னையும், தனது அமைப்பையும் ஒரு நடுநிலையான போக்கில் வைத்துக் கொள்ளல்.

★ உணர்ச்சி வசப்பட்டு மற்றவர் மனது புண்படும்படியான வகையில் அறிக்கைகள் விடுவதிலிருந்து தன்னைத் தவிர்த்துக் கொள்ளல்.

★ தன்னைப் போலவேதான் மற்றவர் என்பதில் உறுதியாக இருத்தல், அநாவசிய செயல்பாடுகளில் ஈடுபடாமை, கம்யூனிசம், சோஷலிசம், வலதுசாரி தத்துவம் போன்றவற்றை சமமான முறையில் கையாளுதல்.

★ தனது சங்க உறுப்பினர்களையும் மிதவாதப் போக்கில் இட்டுச் செல்ல உதவுதல். மிதவாதப் போக்கில் சாதிக்க முடியும் என்பதை நிரூபித்துக் காட்டியவர்.

★ தனது தொழிற்சங்கத்தைப் பொறுப்பான வழியில் இட்டுச் செல்ல அனைவரையும் ஈடுபடுத்திக் கொள்ளல்.

★ தரவுகளைச் சேகரித்து வைத்துக் கொள்வதில் ஆர்வம். தனது வாழ்நாள் முழுவதும் இடம் பெற்ற சம்பவங்களை நினைவு கொள்ளும் வகையில் கோவைப்படுத்தி வைத்துக் கொள்வதில் சிரத்தை.

★ எல்லாவற்றுக்கும் மேலாக தன் குடும்ப உறுப்பினர்களை விடவும் சங்க உறுப்பினர் பற்றிய தரவுகளைப் பெரிதாக மதித்தல்.

★ தனி நபர் சிந்தனைக்கு மதிப்பளித்தல் பல விடயங்களை தனது கோவைகளில் குறித்து வைத்துக் கொள்ளல்.

குறிப்பாக மலையக பிரமுகர்கள் தமது வாழ்நாள் ஆவணங்களைச் சேகரித்து வைப்பதில் பல இடர்களை எதிர்நோக்கியுள்ளார்கள்.

மலையகத்தில் தோட்ட லயன் முறை வீடுகளில் பிறந்து மிகத் தாழ்வாரமான கூரையின் கீழ் வளர்ந்து, அலமாரி, பீரோ என்ற (உபகரணங்கள்) வைப்பகங்கள் இன்றி இடம் மாறும் நிலையிலுள்ளோர்க்கு சேகரிப்பு சாத்தியமில்லாத ஒன்று. என்றாலும் அதையும் மீறி தனது அறிவுக்கூர்மையால் குறைந்த அளவிலாவது ஆவணப்படுத்தி வைத்த முறையினால் அவர் அறிவுடன் வாழ்ந்துள்ளார்.

## ஆன்மீகம்

அட்டன் ஸ்ரீ முருகப் பெருமான் ஆலயத்துக்கு தவறாமல் சென்று வழிபாடு செய்தல், ஆலய நிர்வாகத்தோடு பாரிய தொடர்பும் ஆன்மீகப்பணிகளுக்காக தனது நேரத்தை ஒதுக்குதல்.

முருக பக்தராக வாழ்ந்த PVK வழிபாடு, பூஜை, ஆன்மீக அறிவியல் என்ற தத்துவ வாழ்க்கையோடு ஈடுபடுத்திக் கொண்ட தலைவராவார்.

அரசியல் தலைவர்களில் இறைபக்தியுடனும், ஆலய தரிசனத்தில் நிரந்தரமானதொரு இடத்தைப் பிடித்தவர்களில் மிகவும் முக்கியமானவர் என்று PVKயைக் கூறலாம்.

தெய்வச் செயலின்றி எதுவுமே சாத்தியமில்லை என்று பலமுறை எம்மிடம் கூறியுள்ளார்.

சங்கத்தின் முக்கிய நிகழ்வுகளான சங்கதினம், மேதினம், தனது தலைவர்களின் நினைவு தினம், அரசியல் வேலைகளில் ஈடுபடும்போது, தேர்தலில் போட்டியிடும்போது, தேர்தலில்

வெற்றி பெற்றதும், இப்படி பல்வேறு முக்கியதினங்களில் தனது குழுவினடன் அட்டன் ஸ்ரீ சிவசுப்பிரமண்ய ஆலயத்தில் அவரைக் காணலாம். இறைபக்தியில் அவருக்கிருந்த நம்பிக்கையினை அந்த நிகழ்வுகள் அழாகாகப் புலப்படுத்தும்.

## வாசிப்பு

பெரியோர்கள் வாசிப்புத் துறையில் அதிக ஆர்வம் காட்டும்போது சிறியவர்களும் அதனைப் பின்பற்றிச் செல்வார்கள்: வாசிப்பில், தனது வேலைப் பளுவுக்கு மத்தியிலும் மேற்கொண்டு வந்துள்ளார் என்பதற்குப் பல ஆதாரங்கள் உள்ளன.

நாவலப்பிட்டியில் அவர் வாசித்த நூல்கள் ஏராளம், அதற்குப்பிறகு அட்டன், மாத்தளை, டிக்கோயா, மீண்டும் அட்டன்!

இந்த முறைமையில் அவருடைய வாழ்வுப் பாதை இடம் மாறிச் சென்று கொண்டிருந்த கால கட்டங்களில் வாசிப்புத் திறனை மேம்படுத்திக் கொண்டார் என்பது தெளிவு.

சிறு வயதில், சிறுவர் நூல்கள், அப்புறம் பத்திரிகைகள், மர்ம நாவல்கள், சரித்திர, சமூக நாவல்கள்.

காலம் செல்லச் செல்ல பெரிய நூல்கள் பாரதத் தலைவர்கள், புராண, இதிகாச நூல்கள். இவற்றுடன் ஆங்கில நூல்கள். இவற்றில் அநேகமானவை வரலாறு, அரசியல் தலைவர்கள் பற்றிய நூல்கள்.

இலங்கை வாழ் இந்திய வம்சாவழி மக்களின் சரித்திர பூர்வமான நூல்களை வாசிப்பதில் ஆர்வம் காட்டினார்.

பிரஜாவுரிமை சட்டங்கள் தொடர்பாக இலங்கை அரசின் பல காலகட்ட விதிகள், குறிப்பாக தொழிலாளர் மேல் ஏவப்பட்ட சட்ட அம்புகள்!

★ இயற்கையை விரும்பி, அதை நேசித்து வாழ்ந்தவர் P.V.K.

அவரைப் பற்றிய வரலாற்றுத் தேடலில் எமது கைக்குக் கிடைத்த படங்களில் கூடுதலானவை. இயற்கையுடன் அதாவது வெளிப்புறங்களிலே மக்களுடன், காட்சியளிக்கிறார். வெளிப்புற வாழ்வு என்பது வெற்றிகரமானதொரு அரசியல் தலைவர்க்கு மிகவும் அரிதாகவே கிடைக்கக் கூடியதொன்று.

எனினும் மலையகத்து பசுமைச் சூழலில் மிக மகிழ்வுடனும், ஆர்வமுடனும் கலந்து அதனூடே சங்கக் கடமைகளைப் பாரிய அளவில் செய்துள்ளார். அவருடைய இளமைக் காலப் படங்களும் அவ்வாறே காட்சி தருகின்றன. இது மிக ஆரோக்கியமான விடயமாகும்.

மரங்கள், செடி கொடிகள், கட்டிடங்கள், வானம், அருவிகள், நதிக்கரைகள் இப்படிப் பல்வேறு மகிழ்ச்சிகரமான சூழலைப் பார்க்கின்றோம். காரியாலத்துக் காட்சிகள் குறைவாகவே உள்ளன. இது ஒரு நல்ல நடைமுறையாகும். இயற்கைக்கும் ஒரு பொதுவான செயலாளராகவே வாழ்ந்துள்ளார் என்பது தெளிவு.

★ PVKயின் தனித்துவம் என்பது அவரைப் பொறுத்தவரை ஒரு இயல்பான போக்கு. அவருடைய உடலமைப்பும் அதற்கு உதவியுள்ளது.

கூட்டத்திலோ, மக்கள் மத்தியிலோ, தனது சக தலைவர்கள் மத்தியிலோ அவர் தனித்துவமாகக் காட்சியளிக்கின்றார். இது ஒரு தலைவர்க்குப் பொருத்தமான அங்கீகாரம். தன்னை ஓர் ஆளுமையுள்ள அதிகாரியாக அல்லது தலைவராக செயற்கையாகக் காட்டிக் கொள்வில்லை. ஒரு செயற்கைக் கம்பீரம் அவருடையதல்ல.

கம்பீரத் தோற்றம் இயற்கையாகவே அவரிடம் இருந்துள்ளதை ஆவணப் படங்கள் மூலமாகக் காணமுடிகிறது.

சகல அம்சங்களும் பொருந்தியவர் என்பது வெளிச்சமே!

அந்தக் கம்பீரத்தை அவர் அவசியமற்ற வகையில் பயன்படுத்தியதாகத் தெரியவில்லை.

இயற்கையாக வந்த ஆளுமைக்கு சந்தர்ப்பங்களும் இயற்கையாகவே வந்துள்ளதெனத் தெரிகிறது.

தோற்றம் எப்படியிருந்த போதும் ஒரு சாதாரண, எளிமையான மனநிலையிலேயே வாழ்க்கை நடத்தியுள்ளார்.

ஆக, தனித்துவம் என்ற தகைமை அவருக்குரியது.

★ 1975-1976ல் தோட்டப் பாடசாலைகள், அதன் நிர்வாக அலகு, கல்வித்தரம் தொடர்பாக அப்போதைய அமைச்சர் திரு. ரொனி டீ மெல் அவர்களைச் சந்தித்தார்.

தோட்டப் பாடசாலைகள் பொறுப்பேற்ற அம்சமானது ஒரு சிறந்த அம்சமாகும். இச்சட்டத்தை வெகுவாக ஆதரித்துள்ளார்.

தோட்டப்பாடசாலையொன்றில் ஆரம்பக் கல்வியினைப் பெற்று ஒரு தொழிற் சங்கத்தினைப் பொறுப்பாக நடத்தி வந்த P.V.K. அது முன்னேற்றமான அலகுகளுடன் கல்வித் துறைக்குள் சென்று தோட்டமாணவர்க்கு பாரிய கல்விப் பணிகளை ஆற்ற வேண்டும் என்று நினைத்ததில் ஆச்சர்யமில்லைதான். என்றாலும், தன்னால் முடிந்தளவு தோட்டப்பாடசாலைகள் உயர்வின் பால் அக்கறையும், ஆழ்ந்த ஈடுபாடும், ஓர் அனுதாப உணர்வும் கொண்டு சங்கச் செயல்பாடுகளை முன்னெடுத்துச் சென்றது சிறப்பு அம்சமே!

## Table Decision

தலவாக்கலை டெவனில் 1977ம் ஆண்டு இடம் பெற்ற தோட்ட சுவீகரிப்புக்கு எதிரான போராட்டத்தில், NUW சார்பாக மேசைத் தீர்மானம் என்ற தாக்கம் மிகுந்த செயல்பாட்டினை உடனடியாக எடுத்து, குறிப்பிட்ட தளத்துக்கு விரைந்து பங்கேற்ற பெருமை அவருக்கு உரியதாகும்.

குறிப்பாக பெரிய தொழிற் சங்கங்கள் மலையக மக்கள் வாழ்வியல் தொடர்பாக ஏதாவது முடிவெடுக்கும் போது, அந்தத் தீர்மானம் பயனுள்ளதாக இருந்தால் அவற்றை ஆதரிப்பதில் தனது Table Decision என்ற மரபைக் கடைப்பிடித்து அவற்றை, ஏனைய அல்லது சக உப தலைவர்கள், செயலாளர்கள், அமைப்பாளர்கள், உறுப்பினர்கள் ஏற்கக் கூடிய முறையில் விளக்கங்கள் கொடுப்பார். இந்நிலையானது ஒரு தொழிற்சங்க பொதுச் செயலாளரின் ஆரோக்கியமான அம்சமாகும்.

## செயல்பாடு

அவர் ஒரு செயல்பாட்டு வீரர் என்று தெளிவாகக் குறிப்பிடலாம்.

அவருடைய ஆரம்ப காலத் தொழிற்சங்க ஊழியர் செயல்பாடு என்பது ஒரு தீவிரமான ஊழியத்தை அடிப்படையாகக் கொண்டது. ஏதாவது ஒரு வேலையில் சேர்ந்து கொள்ள வேண்டும் என்ற அப்போதைய தாகம். அந்தத் தாகம் தீர உதவிய துடுப்புகளை மிக வலுவாகக் கைப்பற்றிக் கொண்டவர் என்ற ரீதியில் அவர் காலத்தையும் அனுசரித்து செயல்பட்டார் என்பதே உண்மை! அந்தக் காலகட்டத்தில் பாடசாலையை விட்டு வெளியேறிவுடன் யாருடைய சிபாரிசுமின்றி தானே நேரில்

சென்று தொழிற்சங்க தட்டச்சு வேலையைத் தேடிக் கொண்டார். இது அவருடைய மனபலத்தை உறுதிப்படுத்துகிறது. வேலை செய்ய சென்றேன் என்பதை விட கற்றுக் கொள்ளவே இ.தொ.கா. காரியாலயத்தில் நுழைந்தேன் என்று கூறுவார்.

அந்தக் கூற்று அல்லது அந்தக் கால செயல்பாடு - பின்னால் ஒரு நடுத்தரமான பெரிய அமைப்பைக் கட்டிக் காக்க உதவியுள்ளது எனக் கூறலாம்.

ஆகவே செயல்பாட்டின் முக்கியத்துவத்தை உணர்ந்தவர். ஏதாவது ஒன்றைச் செய்து கொண்டேயிருக்க வேண்டும் என்பதில் தன் வாழ்நாளில் பிடிவாதமாகக் கொண்டு வாழ்ந்தவர் PVK எனக் கூற முடியும்!

★ 1990களில் PVKயின் செயற்பாடுகள் மிக உற்சாகமாக இருந்துள்ளன. இந்த கால கட்டத்தில் அவருடைய சுய செல்வாக்கும் உயர்வாக இருந்துள்ளது. என்ன தான் ஒரு மக்கள் சேவகன் சமூகப் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டாலும் ஓரளவு பொருளாதாரம், பதவி அல்லது ஓர் அதிகாரம் இருந்தால் தான் அவர் பூரணத்துவம் அடைய முடிகிறது. ஐம்பதுகளில் இருந்து உழன்று கொண்டிருந்த அவருடைய பொது வாழ்வுக் கனவுகள் தொண்ணூறுகளில் அதன் இலக்கை அடைந்துள்ளன எனக் கூறலாம்.

பொருளாதாரத்தினை எந்த சமூக நோக்கும் இல்லாதவர் கையாள்வதிலும், சமூக நினைப்புடன் கையாள்வதிலும் அநேக வேறுபாடுகள். நீண்ட கால சமூகப் பணிகளுக்குக் கிடைத்த ஓர் அரசியல் அங்கீகாரம். இது அவருடைய உழைப்பை திடப்படுத்தியுள்ளது.

பலர், அரசியல் பதவிக்குப் பிறகே மாற்றத்தைக் கண்டார் எனக் கூறினாலும், அந்த நிலையானது, அவருக்கு ஒரு வாழ்க்கை 'போனஸ்' என்றே கூற வேண்டும் ஏனென்றால் சம்பளமின்றி நீண்ட காலம் உழைத்துள்ளாரே!

★ லெட்சுமி அம்மையாருடனான குடும்ப வாழ்விலும் ஓர் இயல்பான சூழலையே உருாக்கி வாழ்ந்துள்ளார்.

ஒரு நல்ல மனைவியின் மனோதத்துவ ரீதியான பின்னணி, அநேகமான தலைவர்களின், அல்லது சாதனையாளர்களின் வெற்றிகளை நிச்சயப்படுத்தியுள்ளது எனக் கூறலாம்.

PVKயின் மனைவியும் தனது கணவரின் துயர்களிலும், வேதனைகளிலும் பங்கேற்று அவற்றை மாற்றியமைக்கும் பணிகளைச் செய்து நிறைவு பெற்றுள்ளார். வம்பழுகாமம் என்ற ஹேவாஹட்ட Houpe. தோட்டத்தில் நான்கு சகோதரர்களுடன் பிறந்த எளிமையான பெண்மணி. PVKயை வாழவைத்துப் பார்க்க வந்த சக்தி மிக்கவர் என்றே குறிப்பிடத் தோன்றுகிறது.

படத்தைப் பார்த்த போது அவருடைய எளிமையான தன்னடக்கம், உறுதியான மனோநிலை ஆகியவற்றைப் பிரதிபலிக்கும் இயல்பு பக்தி பூர்வமாகப் பார்க்கத் தூண்டுகிறது.

ஆகவே ஐயாவுக்குக் கிடைத்த வாழ்க்கைப் பிடிமானம் மிகவும் ஆதாரபூர்வமானதொரு குடும்பப் பின்னணி என்று நினைக்கத் தோன்றுகிறது. எல்லாவற்றுக்கும் மேலாக கலாச்சாரம் மிகுந்த கணவன் மனைவி என்றே அவர்களை நினைவு கூரலாம்.

★ PVK அவர்களின் சிந்தனை வாழ்வுக்கு நாவலப்பிட்டி இ.தொ.கா. பிரமுகர்களின் வழிகாட்டல் ஒரு சிறப்பான அம்சமாக இருந்துள்ளதெனக் கூற முடியும் அப்போதைய சக்தி மிகுந்த தனி

நபர்களான திரு. சுப்பையா, திரு அருணாசலம், திரு. அழகராஜா, திரு சிவாஜி செபஸ்டியன், திரு சாந்தப்பன் ஆகியோரைக் குறிப்பிடலாம்.

அவர்கள் யாவருமே திடமான, அறிவு பூர்வமான, கல்வித் தகைமைகளைப் பெற்ற இ.தொ.கா பிரமுகர்கள். அவர்களோடு இணைந்து சமத்துவமாகப் பணியாற்றியவர் என்பது ஒரு திடமான இளைஞனை உருவாக்கியுள்ளது எனக் கூற முடியும்.

தனது வாழ்நாட்களில் நாவலப்பிட்டி நகரின் குறுகிய தொழிற்சங்க வாழ்க்கை மிக ஆரோக்கியமானது என அவரே குறிப்பிட்டார்.

ஒரு சாதனையாளர் யாருக்குக் கீழே கடமைகளை ஆற்றியுள்ளார் என்பதும் ஓர் அநுபவ பூர்வமானதொரு நகர்வாகும்.

ஆழமும், சரியான நோக்கும் அவரிடம் இருந்துள்ளமைக்கு அவை அழுத்தமான காரணங்களாகும்.

★ அவரை வாழ வைத்தது அட்டன் மாநகரம்!

தெல்தொட்ட, கலகா, நாவலப்பிட்டி, அட்டன், நூரளை, டிக்கோயா, மஸ்கெலிய, பொகவந்தலாவ என்ற ஊர்களில் படிப்பினைகளை, அநுபவங்களை உள் வாங்கிய பின் அட்டனில் வந்து குடியேறிய பின்னரே அவருடைய இலட்சியங்கள் நிறைவேறியுள்ளன எனக் கூற முடியும்.

ஆகவே அவருக்கு அட்டன் என்பது ஒரு கிரீடப் பிரதேசம். வாழ்க்கை உச்சம். பணிகள் பழரசம் பெற்ற இடம்.

அட்டன் நகரம் பலரை வெற்றி கொள்ள வைத்துள்து. வர்த்தகர், கல்வியாளர்கள், தொழிற்சங்க பிரமுகர்கள், அரச

ஊழியர்கள், ஆசிரியர்கள், பத்திரிகையாளர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள், இவை தவிர்ந்த சிந்தனையாளர், அரசியல்வாதிகள், அரசியல் தலைவர்கள் என்று பலர்.

இதனை நன்கு ஆய்வுக்குட்படுத்தப்பட்டு பார்த்ததில் PVK அவர்கள் அட்டனில் வாழ்ந்து வெற்றி கொண்டது ஆச்சர்யமில்லைதான்.

என்றாலும் இவருடைய வெற்றி சற்று வித்தியாசம் கொண்டது. ஏனெனில் இவர் சங்கம், தனது பிள்ளைகளின் கல்வி என்ற இரண்டு கோட்பாடுகளுக்குள்ளேயே வாழ்ந்துள்ளார். இந்த நிறைவு வித்தியாசமானது, விவேகமானது.

✱ எப்போதும் ரயில்வே சாலையில் நடந்து போய் தன் வீட்டை அடைது வழக்கம். இது அவருக்கு சீரான நடைப் பயிற்சியைக் கொடுத்திருக்கும், அட்டன் மல்லியப்பு கடைவீதி ரயில்வே கடவை வந்ததும், கிழக்கு நோக்கி ஒரு திருப்பம். இந்த நடையினிடையே தான் தனது சங்கம் பற்றிய அநேக விடயங்களை மனதில் போட்டுத் திரும்பப் பார்த்துக் கொள்ளும் ஒரு சந்தர்ப்பம்.

திட்டமிடல், தீர்மானம் எடுத்தல், நிறைவேற்றம், கருத்துக்கள், அடுத்த கட்டம் என்ற திட்டுத் திட்டான கற்பனைகளும், அதனைத் தொடர்ந்து உண்மைகளும் வந்து சேர்ந்து அவரை உயரோட்டமுள்ள, பயனுள்ள சிந்தனையாளராக மாற்றியுள்ளது எனக் கூறலாம். எல்லா வகையிலும் நடை ஓர் ஆரோக்கிய அம்சம். இது PVK அவர்களுக்குக் கிடைத்துள்ளது. கிடைத்தவற்றை நல்லதாக ஆக்கிக் கொள்வது ஒரு சிந்தனையாளரின் கடமை. இத்தகைய வாழ்க்கை வட்டத்தில் வாழும் மனிதர் அட்டனில் அநேகமானோர். அவர்களில் இவரும் ஒருவராகி நிறைவடைந்த நல்ல நண்பர் PVK.

★ கூர்மைப் பார்வை என்பது அவரிடம் சிறப்பாக இருந்ததைக் காண முடிந்தது. observation என்ற ஆழமான பார்வைக் குணம் அவரிடம் இயல்பாக அமைந்ததைப் பலர் கூறுவர்.

ஒரு விடயத்தை மிகக் கூர்மையாக நோக்குவதென்பது எல்லாரிடமும் அமைந்து விடும் படிமம் இல்லை. அது சிறு வயதிலிருந்தே வரவேண்டும்.

அவரிடம் அந்த முறைமை ஒன்று குடிகொண்டதன் காரணமாக பல விடயங்களை இலகுவாகப் புரிந்து கொள்ளும் தன்மை வந்து விடும்.

தொழிற்சங்கவாதி, அரசியல்வாதி, இலக்கியவாதி ஆகியோருக்கு இது பொதுவாக இருக்க வேண்டியதொன்று.

இவருக்கு நன்றாக அமைந்து விட்டதால் இதன் பெறுபேறு ஆரோக்கியமானதாகவே உருவாகியிருந்திருக்கும் எனக் கூறலாம்.

எல்லா வகையிலும் பார்க்கும் விடயங்களைப் பதிவு கொள்ளும் பண்பாடு உயர்ந்தே காணப்பட்டது உண்மையே.

★ துணிவுக்கு மிகப் பெரிய உதாரணமாகத் திகழ்ந்தவர் P.V.K. இக்கட்டான கால கட்டங்களில் துணிவுதானே நம்மை இயக்கும் மகாசக்தி.

பெரும்பதவியில் உள்ளவர்கள், அல்லது பெருந்தலைவர்கள், சர்தேச தலைவர்கள், மொழி வேறுபாடான பிரமுகர்கள் இவர் சந்திக்கும் போது பயமின்றி செய்து கொள்ளும் அணுகுமுறை மிகச்சிறப்பான குண இயல்புகளிலொன்றாகும்.

தொழிற்சங்க வாதிகள் பொதுவாகவே துணிவுள்ளவர்கள் தான். ஏனென்றால் பிரச்சினைகளை சந்தித்து, முகம் கொடுத்துக் கொண்டே நாள்தோறும் வாழ்பவர்கள்.

திரு. P.V.K. அவர்கட்கு சற்று மாறுபாடாகவே இருந்துள்ளது. அது அலட்டிக் கொள்ளாத துணிவு. சகல வழிகளிலும் துணிவு என்ற ஆயுதத்தை முறையாகப் பயன்படுத்தியவர் என்ற ரீதியில் தனித்துவம் பெறுகின்றார்.

ஆகவே இது இயல்பான ஊக்கம். இதற்கு அடிப்படையான காரணங்களாக தன் இளமைக் காலம் இருந்துள்ளதென்பதைக் கூறலாம்.

★ தொழிற்சங்கப் பணிகளில் தான் ஒரு நிறைவேற்று செயலாளராக உருவாகிய பிறகு தன்னையொத்த கல்வித் தகைமை, அனுபவம், ஆற்றல் கொண்டவர்கள் இருந்தார்களா? என்று சங்க பொறுப்பாளர்களைக் கேட்ட போது, இணையாக யாரையும் குறிப்பிட வில்லை.

திரு. த. ஐயாத்துரை தலைவராகப் பணியாற்றி காலத்தில் P.V.K. முழு ஆர்வத்துடன் சங்கத்தின் யாப்பை ஆங்கிலத்தில் தயாரித்து அதனை ஒரு கருப்பொருளாக வைத்துள்ளார்.

அந்த யாப்பின் தலைப்பிலேயே தயாரித்த அவரின் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. அதனைப் பல முறை வாசித்தோம்.

ஒரு தேசிய பெரும் கட்சியின் யாப்பைப் போல அத்தனை அம்சங்களைத் தாங்கி நடைமுறை வாழ்வுக்கு ஏற்றவாறு தயாரிக்கப்பட்டிருந்தது.

தொழிலாளர் தொழிற் சட்ட நுணுக்கங்கள் அந்த வாசகங்கள் முழுவதும் இழையோடியிருந்தன. என்றாலும் அவற்றை நடைமுறைப்படுத்தி வெற்றிகாணும் அளவுக்கு பெரியதொரு மக்கள் மைதானம் மலையகத்தில் எந்த அளவு அதனை உள்வாங்கியுள்ளது என எமக்குத் தெரியவில்லை. அது அவரின் தனிமனித முயற்சியாக இருந்திருக்கக்கூடும்.

P.V.K.யின் தொழிற்குல யாப்பையும் அதனைச் சார்ந்த விடயங்களையும் - செயல்பாடாக மேற்கொள்வதற்குப் பலர் அவரோடு துணையாக சேர்ந்து மக்களுடன் தொடர்பு கொண்டிருந்ததாக அறியப்படுகிறது.

திரு. பெருமாள், திரு. பெரியசாமி, திரு. நல்லையா, திரு. வெள்ளைச்சாமி, திரு. இராமையா, திரு. துரைசாமி, திரு.செபஸ்தியன், திரு. காளிமுத்து என்று இன்னும் பலர். தற்போதைய சங்க பொறுப்பாளர்கள் கூற்றுப்படி சுமார் 30,000 தொழிலாளர்கள் சேர்ந்திருந்தனர் என்பது கணிப்பீடு.

ஒரு மக்கள் கூட்டத்தினிடையே செயல்பாட்டுப் பதவியுடன் அவர்களை வழி நடத்தும் பிரமுகர்க்கு எத்தனை பெரிய சக்தி இருந்திருக்க வேண்டும் என்ற மலைப்பு தெரிகிறது.

குறிப்பாக தோட்டத்துறை வாழ் சமூகத்தின் மையப் பிரச்சினையான சம்பளம், வாழ்க்கை நிலை, உரிமை, தொழிற்சட்டம், நிர்வாகத்துடன் உறவு போன்ற பல்வேறு விடயங்களை முன்னெடுக்க வேண்டிய நிலையில் ஒரு பொதுச் செயலார் பங்கு மிகப் பெரியதாகவும், நல்லவிதமான தாக்கத்தை (Effectively) ஏற்படுத்தக்கூடிய அளவிலும் ஐயா சிந்தித்தார். சங்கம் எந்த அளவுக்கு அவரை வசீகரித்தது என்பதை இது காட்டுகிறது.

சங்கத்தினை இறுக்கமானதொரு அமைப்பாக இயங்க வைக்க அவர் எடுத்துக் கொண்ட முயற்சிகள். 1985ம் ஆண்டு, அவர் NUW அமைப்பின் இருபது வருடகால வரலாற்றை மிகப் பிரமாதமாக ஆய்வு செய்துள்ளார். சங்கத்தின் செயல்பாடுகளும், இலக்கும் என்றதொரு தனது குறிப்பேட்டு இதழில் இவ்வாறு கூறுகிறார்.

தொழிலாளர் தொடர்பாக தமது தொழிற் சூழலில் அவர்களுடைய பாதிப்புகளிலிருந்து நிவாரணம் பெறுவதற்குரிய நிலையை உருவாக்கிக் கொள்ள நாம் உதவியுள்ளோம்.

நிர்வாகத்துடனான நியாயமான குறைந்தளவிலான கோரிக்கைகளைக் கூட நிறைவேற்றிக் கொள்ள முடியாத சமூகத்துக்கு சட்ட ஆலோசனைகளையும் வழங்கியுள்ளதோடு அத்தகைய தகறாறுகளை நாமே முன்னின்று முகம் கொடுத்தது, இது தொடர்பாக இலங்கையின் உச்ச நீதி மன்றம் வரையிலும் கூட சென்று ஆலோசனைகளைப் பெற்றுள்ளோம்.

ஆக, சட்ட நுணுக்கம் என்பது அவருடைய தொழிற்சங்க வாழ்வுப்பின்னணியில் ஒரு பிரதான அம்சமாக இருந்துள்ளது என்பதைக் காண முடிகிறது, ஆவணங்கள் மூலமாக. எல்லா வகையிலும் ஒரு தொழிற் சங்கத்தின் இருப்பு என்பது தொழிலாளர் நலன்களைச் சார்ந்ததொன்றாகவே இருக்க வேண்டும் என்பதை நன்கு புரிந்து கொண்டு வாழ்ந்தவர் நமது PVK அவர்கள்.

✱ ஸ்ரீமாவே, சாஸ்திரி ஒப்பந்த அடிப்படையில் நாடு திரும்பும் தொழிலாளர் நலன்களில் பெரும் அக்கறை காட்டியுள்ளார்.

சங்க நிர்வாகக் குழு, ஊழியர்கள் ஒத்துழைப்புடன் பாரிய பணிகளை இந்தியா திரும்பிய தொழிலாளர்க்காக ஆற்றியுள்ளார் என்பது ஆவணங்கள் மூலம் அறியப்படுகிறது. இப்பணிகள் சங்கத்தைச் சார்ந்ததுதான் என்றாலும், இவருடைய தனிமனித பங்களிப்பு சிறப்பாக இருந்துள்ளது.

1974 முதல் 1985 வரையிலுமான கால கட்டங்களில் பெருமளவிலான தொழிலாளர்கள் நாடு திரும்பியுள்ளனர்.

இந்த நிலையில் நாடு திரும்பும் தொழிலாளர்களில் தோட்ட நிர்வாக வேலைத் திட்டங்களுடன் தொழிற் சங்கக் கடமைகளும், அத்தகையோர் தம் படிவங்களை நிரப்புவதற்கு, சேவைகால கொடுப்பனவுகளைப் பெறுவதற்கு, பயணத்திடையே இலகுவான நிலையேற்படக் கூடிய பொது அம்சங்கள் ஆகியவற்றைக் கவனிக்க மலையகத்தின் எல்லா சிறிய, பெரிய தொழிற் சங்கங்களும் மும்முரமாக இயங்கின. இவற்றில் NUW ம் தனது பாரிய பங்களிப்புக்களைச் செய்து தொழிலாளர் நலம் பெற P.V.K.யின் தீர்க்கமான வழிகாட்டல்கள் ஓர் அடிப்படையாக இருந்தன.

✱ PVK அவர்களுடன் இணைந்து பணியாற்றிய அன்பர்கள், அவரின் கருத்துகளுக்கு என்றுமே மதிப்பளித்து வந்துள்ளனர். குறிப்பாக சங்க வேலைத் திட்டங்களை அமுலாக்கும் விடயங்களில் பாரிய ஒத்துழைப்புக்களை நல்கியுள்ளனர். அவருடைய சிந்தனைகளும், செயல்பாடுகளும் அவர்களுக்குப் பிடித்துள்ளன.

தவிர, சங்க அலுவலர்கள், கிளைக்காரியாலய அலுவலர்கள் ஆகியோரின் சொந்த நலன்களிலும் பாரிய அக்கறை செலுத்தியுள்ளார்.

திரு. நாராயண சாமி என்பவர் கூற்றுப்படி தோட்டத் தொழிலாளளர்களின், அல்லது சங்க அலுவலர்களின் குடும்ப நிகழ்வுகளில் மிக பிரதான ஒருவராகக் கலந்து, பங்கு பற்றி அவர்களுக்கு உற்சாகமூட்டியுள்ளார்.

இது அநேக நிகழ்வுகளில் இடம் பெற்றுள்ளதாகத் தெரிகிறது.

இன்று நவநாகரிகமாக இச் செயல்பாடுகள் இடம் பெறுவது பொதுவான விடயமே. இருப்பினும் தாழ்ந்த நிலையிலுள்ள மக்கள் மத்தியில் சென்று அவர்களுக்கு மனமகிழ்வூட்டி அல்லது ஆறுதல் கூறி வருவது மிகப்பெரிய மனிதத் தன்மையாகும். இவற்றை PVK மிக கரிசனத்துடன் தன் வாழ்நாட்களில் செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.



தொழிலாளர் தேசிய சங்க தாபகர்
அமரர் வி.கே.வெள்ளையன் சமாதிக்கருகில்
நினைவு தினக் கூட்டத்தில் ஐயா உரை நிகழ்த்துகிறார்

# 25. PVK குடும்பச் சோலையும் வாழ்க்கை மலர்களும்

## உயர்ந்த குடும்பத் தலைவர் PVK

நாம் எவ்வாறு வாழ்ந்தோம் என்பதை மிக சரியாகவும், உருக்கமாகவும் அல்லது உண்மையுடனும் பிரதிபலிப்பவர் நம் பிள்ளைகளே. இதனை மிக இயல்பான வாழ்க்கை நடையுடன் மேற்கொண்டிருப்பது அவர் பிள்ளைகளைப் பார்க்கும் போது தெரிகிறது.

நல்ல தந்தையே பிள்ளைகளுக்கு ஞானத்தந்தையாக விளங்கமுடியும். மகன்மார், மகள்மார் ஆகியோரின் அடக்கம் அப்படியே அவரை அடையாளம் காட்டுகிறது.

நவீன வாழ்வில் பல தந்தைமார் சிக்கலாகக் கருதும் விடயம், தான் விரும்பியவாறு அவர்களைப் படிக்கவைத்து உருவாக்கி வாழ வைப்பது.

27.8.1964 PVK அவர்கள் லஷ்மி அவர்களைத் திருமணம் செய்து டிக்கோயா வந்தவுடன், முதல்வேலையாக வாடகைக்கு ஒரு வீட்டைப் பார்த்துக் குடியேறினார். அந்த வீடு டிக்கோயா நகர அம்மன் ஆலயத்துக்கு முன்னால் இருந்த தென்பதை ஏற்கனவே முன் அத்தியாயத்தில் குறிப்பிட்டோம்.

தன் மனைவியை அழைத்து வந்ததும்; கூடவே மனைவியின் சகோதரன் ராமன் என்பவரையும் கூட்டி வந்து கல்வி

கற்க உதவினார். இவரோடு சேர்ந்து அண்ணார் மகன் கார்மேகம் என்ற சிறுவனையும் நாவலப்பிட்டி கதிரேசன் கல்லூரியில் கல்வி கற்க வசதியும், மாணவர் விடுதியிலும் சேர்த்து மிக உன்னதமான காரியத்தை மேற்கொண்டார்.

P.V.K.யின் சுய செல்வாக்கினால் இருவருக்கும் - கல்வியினைப் பூர்த்தி செய்தபின் தோட்ட அலுவலகங்களில் எழுதுவினைஞர் வேலை பெற்றுக் கொடுத்தார் - தோட்ட நிர்வாக தொடர்புகள் மூலமாக. இது அவரின் இளமைக்கால செல்வாக்கினை உறுதிப்படுத்துகிறது.

இவர்களைப் போன்ற பல இளைஞர்கட்கு அவர்கள் கல்வித் தகைமைக்கு ஏற்றவாறு தொழில் பெற்றுக் கொடுத்துப் பணியாற்றியுள்ளார் என்பது ஒரு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

திரு இராமன், கார்மேகம் ஆகிய இருவரையும், வாழ்வுப் பயணத்தில் அவர்கள் திருமணம் செய்து குடும்பமாகும் வரை தன்னுடனே வைத்துக் கொண்டார்.

அண்ணன் மகன் (கார்மேகத்தின் மூத்த சகோதரர்) திரு. நடேசன் P.V.K.யின் குடும்ப விடயங்களில் மிகத் துல்லிதமாகவும், பரந்த அளவிலும் பங்கு கொண்டு செயலாற்றியுள்ளார். மனைவியின் சகோதரர்கள் மீது P.V.K.வைத்துள்ள ஆழமான அன்பு காரணமாக அவரினால் சம்பிரதாய ஒழுங்கு முறை சிறப்பாக கடைப்பிடிக்கப்பட்டுள்ளது என்பது முக்கிய அம்சமாகும். இது எதிர்கால சமூகத்துக்கு ஒரு சிறந்த படிப்பினையும், முன்மாதிரியுமாகும்.

✱ ஸ்ரீமான் க. பாலேந்திரன், P.V.K.அவர்களின் மூத்த மகனாகிய இவர் சிறுவனாக இருக்கும் போதே கல்வியில் மிகத்

தேர்ச்சி பெற்று விளங்கினார். ஆரம்பக்கல்வி புனித ஜோன் பொஸ்கோவில் பயின்றார். பொஸ்கோவில் சாதாரண தரப் பரீட்சையில் மிகச்சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக் கொண்டார். தொடர்ந்து உயர் கல்வியினை அட்டன் ஹைலன்ட்ஸ் மத்திய கல்லூரியில் பெற்றபின், கொழும்பில் தனியார் நிறுவனம் ஒன்றில் கடமையாற்றுகிறார். 1992ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 30ம் திகதி, தனது 26வது வயதில் லஷ்மி என்னும் பெண்ணை மணந்து நல்வாழ்வு வாழத்தொடங்கினார். அந்த கால கட்டத்தில் ஏசியா ஸ்டொக் புரோக்கர்ஸ் என்னும் தனியார் நிறுவனமொன்றில் (கொழும்பு) அதன் பணிப்பாளராகப் பணியாற்றினார் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். அதன் பின்பு J.B.என்ற ஜபர்ஸி பிரதர்ஸ் நிறுவனத்தில் சிரேஷ்ட முதலீட்டு ஆலோசகராகக் (Senior Investment Advisor) கடமையாற்றுவது வரவேற்கத் தக்கதொரு விடயமாகும். பாடசாலை நாட்களில் சிறந்த விளையாட்டு வீரர் (Athlet)அவருக்கு தனுஷன், சிவாந்தி என்ற இரு குழந்தைகள். இருவருமே கொழும்பு மஹாநாம கல்லூரியில் கல்வி கற்று வருகிறார்களள்.

தனது தந்தையைப் போலவே அறிவு பூர்வப் படிப்பினைகளை (Cognitive Studies) காலத்துக்காலம் பெற்று தன் வாழ்க்கை நடையை உன்னதமான நிலைக்கு வளர்த்துக் கொண்டர் என்பது வெளிப்படையான உண்மை.

P.V.K.அவர்களுக்கு எட்டு குழந்தைகள். இவர்களில் ஆறு ஆண்களும், இரண்டு பெண்களும். இரண்டவதாகவும், ஏழாவதாகவும் பெண் குழந்தைகள்.

தனது குழந்தைகளை முறைப்படி வளர்த்து கல்வியளித்து அவர்களனைவரையும் உயர் நிலையில் வாழ வைத்த பெருமை திரு. திருமதி P.V.K. அவர்களையே சேரும்.



P.V.K. குடும்ப நிகழ்வில் - குடும்பத்தாருடன்

ஸ்ரீ க. சரவணன் மூன்றாவதாகப் பிறந்த இவர் தனது ஆரம்பக்கல்வியை புனித ஜோன் பொஸ்கோ கல்லூரியில் பெற்று, சிறந்த பெறுபேறுகளை சாதாரண தரத்தில் பெற்று உயர் கல்வியை ஹைலண்ட்ஸ் மத்திய கல்லூரியில் பெற்று, மொரட்டுவ பல்கலைக் கழகத்தில் பிடவைக் கைத்தொழில் பொறியிலாளர் NDT என்ற பட்டத்தைப் பெற்றார். இவர் கொழும்பு, பிடவைக் கைத்தொழில் தனியார் நிறுவனமொன்றில் உற்பத்திக் கைத்தொழில் பொறியியலாளராக (Industrial Engineer) பணியாற்றி வருகின்றார்.

2001 ஏப்ரல் மாதம் 4ம்திகதி சுமதி என்னும் பெண்ணை திருமணம் செய்து சிறப்புடன் வாழ்ந்து வருகிறார்.

திலுக்ஷன் என்று ஒரு மகன்.

இவர் பாடசாலைக் கல்வி வாழ் நாட்களில் மிகச் சிறந்த விளையாட்டு வீரராகத் திகழ்ந்தார். கள விளையாட்டுக்களுடன், கிரிக்கெட் விளையாட்டிலும் சிறந்து விளங்கியதோடு - அதிகமான கிண்ணங்களையும், சான்றிதழ்களையும் பெற்று குடும்பத்துக்குப் பெருமை சேர்த்துள்ளார்.

✱ ஸ்ரீ க. இராஜேந்திரன் இவர் சிறுவயதில் சென் ஜோன் பொஸ்கோ கல்லூரியில் சாதாரண தரம் வரை மிகச் சிறப்புடன் பயின்று உயர்கல்வியினை ஹைலண்ட்ஸ் மத்திய கல்லூரியில் பெற்றுக் கொண்டார். வர்த்தகத்துறையில் உயர் தரம். ஹைலண்ட்ஸ் கல்லூரியில் கற்கும்போதே ஆன்மீக துறையில் பெரும் உற்சாகமும், ஈடுபாடும் கொண்டு விளங்கினார். ஆன்மீக சிந்தனைகளை அறிவியல் ரீதியாக நோக்கினார்.

இவர் தனது மேற்படிப்பை இந்தியா, பெங்களூர் சென்ட் ஜோசப் பல்கலைக் கழகத்தில், பி.காம். (B.Com.) பட்டத்தைப் பெற்று நிறைவு செய்தார்.

இவருடைய கல்விக் கலைக்கழக தோழராக - தற்போது இந்திய கிரிக்கட் அணியின் தலைவர் திரு. ராகுல் ட்ராவிட் விளங்குகிறார். இருவருக்கும் இடையில் கடிதத் தொடர்புகள் இருந்தன என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

கணனித்துறையில் மிகச்சிறந்த (Software & Hardware) வல்லுனராகவும், நிபுணராகவும் விளங்குகிறார். கணனிப்பட்டப் படிப்பையும் இந்தியாவிலேயே பெற்றுக் கொண்டார்.

கொழும்பு பிரித்தானிய உயர் ஸ்தானிகராலயத்தில் கணனி நிர்வாக இயக்குனரும், பிரதி கணக்காளர், (System Administrator

and Deputy Accountant) என்ற பதவியினைப் பொறுப்பேற்று பணியாற்றி வருகிறார். இவர் 2005ம் ஆண்டு ஜனவரி மாதம் 21ம் திகதி ஜெயலஷ்மி என்னும் பெண்ணைத் திருமணம் செய்து, மிருனாளனி (Mirunalani) என்ற குழந்தைக்குத் தந்தையாக உள்ளார்.

★ ஐந்தாவது மகனாக ஸ்ரீ க. சத்தியேந்திரன் இவர் தனது ஆரம்பக் கல்வியை புனித ஜோன் பொஸ்கோ கல்லூரியிலும் உயர் கல்வியினை ஹைலண்ட்ஸ் கல்லூரியிலும் பெற்று, சந்தைப் பொருளாதாரத் துறையில் (Marketing) தொழில் செய்து வருகிறார்.

இவர் ஒரு சிறந்த கலை இலக்கியவாதி, ஓவியத் துறையிலும், கவிதைத் துறையிலும் முத்திரை பதித்து வருகிறார். இவருடைய ஓவியங்கள் இல்லத்தில் பாதுகாத்து வைக்கப் பட்டுள்ளன. அத்தனையும் உயிரோட்டமான படைப்புகளாகும். கவிதைத்துறையில் சிறந்து விளங்கும் இவரின் கவிதை நூல் ஒன்று மிக விரைவில் வெளிவரும் என எதிர்பார்க்கப்படுகின்றது. கவிதைகள் யாவும் மிக இறுக்கமானவையே!

ஸ்ரீயோகேந்திரன், இவர் ஆரம்பக் கல்வியினை சென் ஜோன் பொஸ்கோ கல்லூரியிலும், உயர்கல்வியினை ஹைலண்ட்ஸ் மத்திய கல்லூரியிலும் கணிதப் பிரிவில் பயின்றார்.

இவர் பத்தனை ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரியில் கணிதப் பிரிவில் டிப்ளமோ பட்டம் பெற்றுள்ளார்.

இவர் நோர்வுட் நியுவெளி தமிழ் வித்தியாலயத்தில் கணித ஆசிரியராகக் கடமையாற்றி வருகின்றார்.

எட்டாவது மகனாக ஸ்ரீ புவனேந்திரன், இவர் புனித ஜோன் பொஸ்கோ கல்லூரியில் ஆரம்பக் கல்வியையும், உயர் கல்வியை

ஹைலண்ட்ஸ் கல்லூரியிலும் பெற்றுக் கொண்டார். தற்போது கணனித் துறையில் (Software) கற்று வருகின்றார்.

இரண்டாவதாகப் பிறந்த மூத்த மகள் மலர்விழி அட்டன் மகளிர் பாடசாலையில் (St. Cabriel Convent) சாதாரண தரம் வரை கல்வி பயின்றார். தனது தாயாரின் சகோதரர் இராமன் என்பவரை மணந்து சிறப்பாக வாழ்ந்து வருகின்றார். அவர் கணவர் அபோட்ஸ்லி தோட்ட காரியாலயத்தில் எழுதுவினைஞராவார்.


இவர் சதீஸ்குமார், தினேஷ்குமார், பிரதீபன் என்ற மூன்று ஆண் குழந்தைகளின் தாயாராவார்.

ஏழாவதாக, இளையமகள் சாந்தி இவரும் க.பொ. சாதாரண தரம் வரை, அட்டன் மகளிர் பாடசாலையில் கல்விபயின்று, திரு. பெ. சண்முகநாதன் என்ற வர்த்தகரை மண முடித்து, கௌசிகன், ஸ்ரீமதுஷன் என்ற இரண்டு ஆண் குழந்தைகளின் தாயாராகி சிறப்பாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

அமைதியாக வாழ்ந்த P.V.K.யின் வாழ்வுக்குப் பின்னால் மிக சாதுர்யமான நல்ல விடயங்களெல்லாம் இருந்துள்ளன என்பதனைப் பிரதிபலிக்கும் மகன்கள். அவர்களின் மிக அடக்கமான உயர் கல்வித்தகைமை. தனது கல்வித் தகைமை எவ்வாறு வெளியே காட்டிக் கொள்ளாமல் இவ்வளவு காலம் வாழ்ந்தாரோ அதே பாணியில் திறமைகளுக்கு விளம்பரம் தராமல் வாழும் அவரது குழந்தைச் செல்வங்கள்.

நாம் எங்கே போகிறோம் என்பதை விட எப்படிப் போகிறோம் என்பதும் ஒரு அழகிய கணிப்பீடு.

இந்தக் கணிப்பீட்டுப் பரீட்சையில் தலைவர் திறமைச் சித்தி பெற்றுள்ளார் என்பதைப் பெருமையுடன் கூறுவது சரியானதே!



தொழிலாளர் தேசிய சங்க பிரமுகர்களுடன் அமரர் PVK

உயர்கல்வி, பட்டப்படிப்பு! அறிவு ஆற்றலுக்கேற்ற விதத்தில் சேவைகள், தொழில்கள், பதவிகள்! எத்தனையோ எண்ணற்ற பெற்றார்க்கு ஒரு மிகச் சிறந்த உதாரணமாக விளங்குகிறார் PVK. கண்டிப்பான முறையில் வளர்ப்பு, அவர்களின் மொழிக் கல்விக்கு தன்னுடைய நேரடித் தொடர்பும், வழிகாட்டலும், ஒத்துழைப்பு, அவதானமான அணுகுமுறை சிறப்பாகவே இருந்துள்ளன. வள்ளுவனாரின் ''தந்தை மகற்கு ஆற்றும் நன்றி, அவையத்து முந்தியிருப்பச் செயல்'' என்றதொரு கட்டளையை மீறாமல் கடைப்பிடித்து அதில் வெற்றி கண்டுள்ளார் என்பதைப் புலப்படுத்துகிறது.

தான் பணிபுரிந்த NUW என்ற தொழிற்சங்கத்தினூடாக சிந்தித்த காலத்திலும், சங்கம் வேறு குடும்பம் வேறு என உணந்திருந்தார் என அறியப்படுகிறது.



NUW பிரமுகர்கள் PVKயுடன்

தான் வாழ்ந்த காலத்தில் தனது ஐம்பது வருட வாழ்க்கைப் பண்புகளை ஆவணப்படுத்தி வைத்திருந்த முறையானதே. இப்போதைய தலைவர்கட்கு ஒரு மிகப் பெரிய எடுத்துக்காட்டு.

தனது பிள்ளைகளின் ஒழுக்க முறையில் பெரிய வழிகாட்டி ஒரு சமுதாயத் தலைவர் என்பவர் தான் வாழ்ந்து வழிகாட்ட வேண்டும். இதனை மிகச் சரியாக பங்காற்றி முழுமை பெற்றுள்ளார்.

# அன்னையே

இந்த தீபத்தின் சுவாசம் நின்று விடவில்லை
தவம் புரிந்து கொண்டிருக்கிறது.
உன்னில் இருந்து விடுபட்டு
போகவில்லை நம் நினைவுகள் நம்மில் இருந்து
ஜனனிக்கிறது உன்
மலர்முகம் உன் தெய்வ வடிகளில்
நாம் அரவணைக்கப்பட்ட நாள் முதல்
எம்மைப் பொழிவுடன்
பிறவியெடுக்க வைத்தது
உன் பாசத்துடன் உன் மூச்சில் வாழ்ந்து
கொண்டிருப்பது தான்
நாம் தேடிக் கொள்ளும் சொர்க்கம்
உறவுகள் இலையாக உதிர்வது
இயற்கையே உன்
உதிர்வுதான் எம் உலகுக்கு
அதிர்வை ஏற்படுத்தியது
எம்மில் நீ இல்லாத நிலையை நாம் ஏற்றும்
எட்டிவிடப் போவதில்லை
அன்னையே இனி அனைத்து ஜென்மத்திலும்
எம்மைப் பிரசவித்துக் கொண்டிரு
உன் மழலைகளாக
நாம் பிறந்து கொண்டிருப்போம்.

- க.சக்தி -

# தந்தையெனும் தளபதிக்கு தனையன் தரும் கவி வரிகள்

இனியும் ஓய்வதில்லை
இந்த மகாநதியின் புரட்சி யாத்திரை
தன் மதி நுட்பத்தால்
பலர் விதிகளை சதியில்
இருந்து மீட்ட தளபதியே!
தேயிலை தேசத்தில் ஊற்றெடுத்து
பல வியூகம் படைக்க பதவியேற்று
பாரினில் பல புகழை
பவித்திரமாக குடிக்கொண்டு
பட்டாபிஷேகம் பெற்று
தொழிலாளியின் இதய
சிம்மாசனத்தில்
வீற்றிருந்த அவதார சிற்பியே
அலையலையாக, அரசியல் கலை பயின்று
நீ தோற்று வித்த நினைவு நீரூற்றுக்கள்
கீதையைப் போல் எவர் உள்ளத்திலும்
திறக்கப்பட்டுள்ளது, மறக்கப்படவில்லை
உத்தமனாக உன்னை
உருவாக்கிய உன் அரசியல் யாகம்
ஒரு புனிதத் தியாகம்
உன் ஆத்மா என்றும்
மலர்மிகு மகாத்மாவுக்குள் சங்கமமாகும்.

- க.சக்தி -

# அமரர் P.V. கந்தையா

## நான் அவரிடம் கண்ட சிறப்பு அம்சங்கள்

மலையகத்தில் பிறந்த வளர்ந்து வாழ்ந்து மறைந்த கல்வியாளர்கள், அரசியல் வாதிகள், தலைவர்கள், தொழிற்சங்க பிரமுகர்கள், ஆசிரியர், வர்த்தகர், தொழிலாளர் இன்றும் பல துறைகளைச் சார்ந்த பிரமுகர்கள் யாவருமே தம் இலக்கை அடைந்தார்களா என்றால், பதில் சற்று விசனமாகத்தானிருக்கும். ஓரிருவரைத் தவிர - வேறு யாருமே இல்லை. அவர்களின் இலட்சியத்தில் ஐம்பது வீதம் வென்றாலே ஒரு பெரும் சாதனைதான்.

நான் பல தொழிற்சங்கப் பிரமுகர்கள் தலைவர்களுடன் பழகியிருக்கின்றேன். அதே போல அரசியல் தலைவர்கள். நான் எல்லாரையுமே ஒரு நம்பிக்கையுடன் பார்ப்பது வழக்கம். அவர்களுக்குள் நாம் தேடவேண்டும். சாதிப்பதற்கான சந்தர்ப்பங்களை இழந்தவர்களே அதிகம். காரணம் உரிமையின்மை, பொருளின்மை. நமக்குத் தடையாக விருப்பது பொருளாதாரம், அதோடு தேச உரிமையின்மை.

இவற்றுக்குள் தேடிய பல பிரமுகர்களுக்குள் அமரர் P.V.கந்தையா எனக்குள் ஒரு நிலையான இடத்தை வகிக்கிறார். தொழிற்சங்க, அரசியல் களத்தில் பெரும் சாதனையை ஏற்படுத்தினார் என்று சொல்ல வரவில்லை. மக்களின் ஏகதலைவன் என்றும் குறிப்பிடவில்லை.

மலையகத்தின் லயன் அறையில் பிறந்து, சாதாரண தொழிலாளர் குடும்பத்திலிருந்து வந்து, மலையக மக்கள் ஒதுக்கப்பட்ட காலத்தில், தொழிற்சங்க காரியாலயத்தில் காலடி

எடுத்து வைத்து, (அதாவது இலங்கை தொழிலாளர் காங்கிரஸில்) பிரிந்து சென்ற குழுவினருடன் சேர்ந்து கீழ்ப்படியிலிருந்து உயர்ந்து பிரதிநிதி, மாநிலப்பிரதிநிதி, மாவட்டப்பிரதிநிதி, பிரதிச் செயலாளர், பொதுச் செயலாளர், இறுதியில் தலைவர் என்ற சகாப்த மனிதராகக் கடும் உழைப்பால் தன் வாழ்வை நிறைவு செய்து கொண்ட மனிதர். அவருடைய வரலாற்றைத் தேடும் போது, அந்தத் தேடல்களிலிருந்தும், அவருடைய நீண்டகால நண்பன் என்ற வகையிலும் ஒன்றைத் தெரிந்து கொண்டேன.

அதாவது ஏதோ ஒன்றைச் செய்து கொண்டே இருந்திருக்கிறார். கீதையிலே கண்ணன் குறிப்பிடுகிறார். ''மனிதா ஏதாவது செய்து கொண்டேயிருப்பாயாக. செய்கைதான் உலக வாழ்வு. செய்கையில் பற்றுவைப்பாயாக.''

செய்கைகளின் மொத்தச் சேர்க்கைதான் நிறைவு! இந்த வரலாற்று ஏடுகளின் பக்கங்களில் பதிவு பெற்றுள்ள அவருடைய படங்களைப் பார்ப்போம். அப்படி அவதானிக்கும்போது நன்கு புரிகிறது. ஏதோ செய்து கொண்டே இருப்பது தெரிகிறது. அறுபது வீதமான படங்களில் அவர் இயங்குவது தெரிகிறது. சிந்தனை, பேச்சு, எழுத்து, அவதானிப்பு என்று இப்படி பல நல்லுணர்வுகள்.

அது தொழிற்சங்கப் பயணம். அவருடைய கருத்துக்கள் பிரம்மாண்டமானதாக இருக்கிறது என்று சொல்லவில்லை. நடைமுறைக்கு ஏற்றதாக, மலையக மக்களைச் சார்ந்ததாகவே உள்ளன.

மலையகத்தின் தாய்ச்சங்கமாகிய இ.தொ.கா.விலிருந்தே வெளி வந்து அநேகர் தனிப்பெரும் தலைவர்களாகி யிருக்கிறார்கள். இது அன்றும் இருந்திருக்கிறது. இன்றும் இருக்கிறது. இது இவரிடமும் இருந்துள்ளது. இது ஒரு இயல்பூக்கம், உளவியல் ரீதியாகப் பார்க்கும் போது.

நடைமுறை என்று சொல்லும்போது, மலையக மக்களின் கல்வி, பொருளாதாரம், கலாச்சாரம், வீட்டுவசதி, மொத்தத்தில் வாழ்க்கை உயர்வு என்று வருகின்றன. எல்லாத் தொழிற் சங்கங்களும், அரசியல் அமைப்புக்களும் வாழ்க்கை உயர்வை நோக்கிப் பயணம் செய்வதாக உணரப்படுகிறது.

PVK ஐயாவிடம் இருந்த மொழி ஆளுமை, கல்வி, சிந்தனை வளம், நிர்வாகத்திறன், பேச்சு வன்மை ஆகியவற்றைப் பார்க்கும்போது நான் பெறும் அனுபவம் சற்று மாறுபாடானது. தொழிற்சங்கக்களம் தவிர வேறு துறையில் சென்றிருந்தால் இவருடைய வாழ்க்கைத்தரம் இன்னும் உயர்ந்திருக்கும். வினைத்திறன் வேறு வழியைக் கண்டு விசாலமான பெறு பேறுகளைத் தந்திருக்கும்.

இவருடைய சொந்த நூலகம் என்பது ஒரு பேருலகம். புத்தகங்களுக்கும், நூலாசிரியர்க்கும் முன்னுரிமை கொடுக்கும் பாங்கு வியப்பானது. நான் எனது நூலாகிய 'தனக்குள் தானே' என்ற நூற் பொதியை அவரிடம் கொடுத்தேன். அவர் அதனைப் பிரித்து இரண்டு பக்கங்கள் வாசித்து விட்டு ''இதன் மூலம் மலையக மக்களுக்கு என்ன சொல்ல நினைக்கிறீககள்'' என்றார். நல்ல கேள்வி புத்தகத்தை வாங்கி ஐந்து நிமிடங்களில் என்னிடம் இப்படி ஒரு கேள்வி! எதிர்பார்க்கவில்லை. என்றாலும், வியந்தேன். பதிலளித்தேன்.

ஒரு தத்துவநூல் மலையக மக்களுக்குப் போய்ச் சேர வேண்டும். அதன் மூலம் அவர்கள் பயன் பெற வேண்டும் என்பதே அவருடைய எதிர்பார்ப்பு. அதிலிருந்து அவருடைய ஆழம் புரிந்தது. ஓர் அழுத்தமான வாசிப்பு, அவருடையது. அவருடைய வாசிப்புத்திறன் குறித்து அவரைச் சார்ந்தோரே அறிந்திருக்கவில்லை. அந்த அளவுக்கு மிக நுணுக்கமாக யாரும்

கண்டு கொள்ளாத வகையிலும் வாசித்தறிந்து கொள்ளும் மாண்பு அவருடையது. இது ஒரு முன்னுதாரணம்.

அடுத்ததாக அவரின் நிர்வாகத் திறன். அவரைப் பற்றி தற்போதைய பிரதிப் பொதுச் செயலாளரிடம் கேட்கும்போது அவருடைய பதில்கள் என்னை உற்சாகப்படுத்தின. அவர் கூறும்போது சங்க அலுவலர் திரு. நாராயணசாமி கூட இருந்தார். நிர்வாக முறைமையை சீராகக் கடைப்பிடித்தவர் அமரர் P.V.K.என்றார்.

ஓர் அலுவலர் சற்று தாமதித்து காரியாலயத்துக்கு வந்தால் அடுத்த நாள் ஒரு கடிதம் வரும், தாமதித்து வந்ததற்கான விளக்கம் கேட்டு. ஒரு தொழிற்சங்கக் காரியாலயம் அலுவல்கள் உள் ஊழியர்களின் பண்பு, வினைத்திறன் ஆகியவற்றுடன் கடுகடுப்பான அதேநேரம் மிக உரிமையுடன், பாசத்தை நெஞ்சில் வைத்து நிர்வகித்த பெருந்தகை என்றார். பத்திரிகைகள், நூல்களைச் சேர்த்து வைத்து ஆவணப்படுத்துவதும் ஒரு காரியாலயத்தினது ஒழுங்கு முறையாகும்.

கட்சித் தலைமை, ஊழியர், தொழிலாளர் பற்றி வரலாறுகளைச் சேகரிக்க இலகுமுறைதான் கோவைப் படுத்துதல். அதோடு முடிந்தரை அனுபவசாலிகளை தன் அலுவல்களில் நிறைவேற்றும் அதிகாரிகளாக நியமித்துள்ளார்.

ஒரு தொழிற்சங்கத் தலைவருக்கு தனது சுயகம்பீரம் என்பது ஒரு கொடைதான். அவருடைய உருவ கம்பீரம் எப்பொழுதுமே ஓர் ஆளுமைக் கவர்ச்சியை ஏற்படுத்தக் கூடியதுதான். அது அவருக்கு அமைந்ததும், அது வாழ்வு முழுவதும் தொடர்ந்ததும் ஒரு வரப்பிரசாதம்தான்.

இன்று எல்லா மட்டங்களிலும் ஆங்கிலம் ஒரு பொது மொழியாக, நிர்வாக மொழியாக உருவாகியுள்ளது. கடந்த சில

நூற்றாண்டுகளாக இது ஒரு பொது அம்சம். ஆங்கிலேயர் இந்த நாட்டை விட்டு வெளியேறிய பின்பும் ஆங்கிலத்தின் விஸ்வரூபம் குறைந்த பாடில்லை. ஏனென்றால் அது நவீன விஞ்ஞான ஊடகம்.

ஓர் அரசியல், தொழிற்சங்கத் தலைவரிடம் இருக்க வேண்டிய மொழி ஆளுமை அவரிடம் இருந்துள்ளது. இது ஒரு சிறப்பான அம்சம்.

ஆங்கிலப் பேச்சு வன்மை, கடிதம் அல்லது குறிப்பு, யாப்பு போன்றவற்றைத் தயாரிக்க அல்லது சர்வதேச தொழிற்சங்க அரசியல் அறிவு, அல்லது தொடர்பு, மேலும் உலகக் கருத்தரங்குகளில் பங்குபற்றி ஆராய்தல் என்பவற்றிற் கெல்லாம் ஆங்கில அறிவு என்பது அவசியமாகிறது. இதனை நன்கு பரிச்சயப்படுத்திக் கொண்ட தலைவராக விளங்கியவர் PVK அவர்கள். இவை எல்லாவற்றுக்கும் மேலாக ஒரு மென்மையான உணர்வுடனே கடுமையான நாட்களைச் சந்தித்த தனிமனிதர். எனக்கு இந்த நிலை மிகவும் பிடித்ததொரு அம்சமாகும்.

நாம் எல்லாரும் மகாத்மா இல்லை. ஞானி இல்லை. அப்படி ஆகவும் முடியாது. ஆனால் இவ்வுலகில் ஒரு சராசரி மனிதனை விட சிறப்பான நிலைகளை தனது இலக்காகக்கொண்டு வாழ்ந்து மறைந்தவர்கள் பட்டியலில் அமரர் திரு. கந்தையா அவர்கள் மிகச் சரியான இடத்தை வகிக்கின்றார்.

இந்த சிறப்பு அம்சமானது அவரது பிள்ளைகளுக்கும், அவர் நிர்வகித்த சங்கம், அதன் வழித்தலைவர்கள் ஆகியோரிடமும் இயல்பாக அமைந்துள்ளது.

# 26. P.V.K. அந்திய காலம்

ஒவ்வொரு தனிமனிதனுக்கும் அந்திய காலம் உண்டு. இது தவிர்க்க முடியாதுதானே!

இந்த நிலையினை தமிழ்க் கவிஞர்களும், ஞானிகளும், மேதைகளும் மிக உணர்வு பூர்வமாக ஏற்று மக்களுக்குத் திருப்தியான, ஆறுதலான விளக்கங்களைக் கொடுத்துள்ளார்கள்.

பெரும் மன்னர்கள், ஆட்சியாளர்கள், மாவீரர்கள் எல்லாருமே தமது அந்திய காலத்தினை மிகவும் உருக்கமாக வரவேற்று அந்தத் துன்பங்களை அனுபவித்தே மறைந்திருக்கிறார்கள். அதுதான் சரியான நிறைவு.

ஓர் அழகிய மலர் எப்படி சருகாகி மறைந்து விடுகிறதோ அப்படித் தான் மனிதர்களும், தனது இலட்சியங்கள், நோக்கங்கள் எல்லாவற்றையும், மற்றவரிடம் கையளித்து வெறும் மனிதராக, எந்தவித சுமையும் இன்றி ஓர் சருகு போல அதாவது காற்றில் பறந்து போகும் வெற்றுக் கடதாசியாய் வந்தது போலப் போக வேண்டும் என்பது தான் நியதி.

தான் செய்தவற்றை இருப்பவர்கள் மேற்கொள்வார்கள் என்ற திருப்தியில் தன் ஆசாபாசங்களையெல்லாம் துறந்தே போகவேண்டிய கட்டாயமும், கடமையும் ஒவ்வொரு உடல் வாழ்வுக்கும் உண்டுதானே! இந்தத் திருப்தி, நிறைவு - திரு. PVK அவர்களுக்குக் கிடைத்ததா? ஆமாம்! அந்த நிறைவு பரிபூரணமாகக் கிடைத்திருக்கும் என்று ஒரே ஒரு விடயத்தை ஆதாரமாக, அல்லது நிரூபணமாக வைத்து நாம் சொல்ல முடியும்.

அதாவது அவர் நோயுற்ற காலத்தில், அவரை அன்புடன் கவனித்து, அவர் விருப்பத்துக் கேற்றவாறு சமைத்து உணவு பரிமாறி வாழ்ந்த அவர் மனைவி லெட்சுமி அவர்கள்.

அவர் கணவனின் அந்திய காலத்தில் அவருக்காக இருந்தவர், திடீரெனக் காலமாகி எல்லாரையும் அதிர்ச்சிக்குள்ளாக வைத்து விட்டதுடன், தான் இறந்து முப்பதாம் நாள் தன் கணவரையும் அழைத்துச் சென்று விட்டார்.

மனைவி மறைவு 5.9.2005

கணவர் மறைவு 5.10.2005

இதனை வைத்து PVKயின் வாழ்க்கை ஒரு நிறைவு எனக் கூறலாம்.

அவர் நோய்வாய்ப்பட்ட முதல் கட்டம், 66வது வயதில் முதலாவது அவருக்கு இரத்த அழுத்தம் ஏற்பட்டது. இருப்பினும் அவர் அதனை லட்சியம் செய்யவில்லை. தொடர்ந்து தொழில் அவரை அழைத்து இயக்கிக் கொண்டே இருந்தது.

தனது தளர்ந்த நிலையிலும், தொழிற்சங்கம், காரியாலயம், மக்கள் என்று நினைக்கத் தவறியதில்லை. என்றாலும் அவருக்கு ஓய்வு வழங்கிய சங்கமும் தோட்டத் தொழிலாளரும், சங்க நிர்வாகிகளும், ஊழியர்களும் அவரைப் பார்க்க வந்து கொண்டேயிருந்தனர் என்றே குறிப்பிட வேண்டும்.

மலையகத்தில் ஒரு தொழிற்சங்கத் தலைவர் நோய் வாய்ப்பட்டு சில காலத்தில் தனிமைப்படுத்தப்பட்டு விடுவார். ஆனால் P.V.K. விடயத்தில் அன்பான மனைவி, ஆதரவான பொறுப்பான பிள்ளைகள் என்ற பராமரிப்பில் திருப்தியாகவே

வாழ்ந்தார். அவ்வப்போது அவரது தொழிற்சங்க, அரசியல் நண்பர்கள் என்று பார்க்க வருவார்கள்.

நல்ல குடும்பம் நலம் கொண்ட மன்றம் எல்லாரும் சேர்ந்து வாழும் சூழல் எங்கெல்லாம் நிலவுகிறதோ, அங்கெல்லாம் பசுமைப் பூக்கள் மலரும்.

அமரர் P.V.K.அவர்கள் விட்டுச் சென்ற நல்ல விடயங்களில் குடும்ப ஒற்றுமையும் ஒரு பிரதான இடம் வகிக்கிறது. பெண் பிள்ளைகளை சொந்த பந்தங்களுடன் வாழ வைத்து பேரப்பிள்ளைகளைப் பார்த்து அனுபவித்து மறைந்தவர். அத்தகைய வாழ்வு புனிதமானது.

# 27. நன்றி

இந்நூல் வெளிவருவதற்குப் பல வழிகளிலும் துணை நின்ற யாவர்க்கும் எங்கள் நன்றிகள். முதலில் P.V.K. அவர்களின் பிள்ளைகள் அவர்கள் கொடுத்த அடிப்படையான ஊக்கம், ஆர்வம், அங்கீகாரம், காலத்துக்குக் காலம் எமக்களித்த ஆதரவு திரு. அ.ஆ. இராஜேந்திரன் அவர்களுடன் தொழிலாளர் தேசிய சங்கத்தின் நிர்வாகப் பிரமுகர்கள், சங்க அலுவலகர்கள், மற்றும் ஊழியர்கள், பொகவந்தலாவ, மஸ்கெலியா, நாவலப்பிட்டி, கலஹா, நுவரெலிய ஆகிய பிரதேசங்களில் இருந்து அவரைப்பற்றிய தகவல்களைக் கொடுத்தவர்கள், ஊடகவியலாளர்கள், வர்த்தக பிரமுகர்கள், இந்நூலுக்கு உதவி ஆசியராகப் பணியேற்று இயங்கிய திரு. P.V.K. சத்தியேந்திரன், கையெழுத்துப் பிரதிகளை சரிபார்த்து நெறியாள்கை செய்து உதவிய, அட்டன் Smynar அமைப்பைச் சேர்ந்த நண்பர் திரு. விக்டர் சோரிஸ் ஆகியோர்க்கு எமது மனமார்ந்த நன்றிகள்.

# 28. நிறைவுப் பாமாலை

அறியாமை ஆழப் புதைந்த கொள்கலனா மலையகம்?
இல்லையில்லை தெரியாத மனங்களின் தெரிவே அதுவாகும்
புரியாத புதிர்களாய் அங்கங்கே புதைந்திருக்கும் அறிவுடைமை
விரிவாக சொல்வதற்கு வளமான வார்த்தையில்லை
P.V.K. யைப் போல தீயினுள் வளர்ந்த சந்தன மரமாக
மாவிலைக்குள் மறைந்திருக்கும் மாபெருங் கனிகளாக
பூவினுள்ளே படர்ந்துள்ள மகரநந்தத்துகளாக
யாருக்கும் தெரியாமல் வாழ்ந்து மறைந்த மனிதர்
விட்டுச் சென்ற விதைப் பொருளாய்
கட்டுக் கோப்பாய் வாழ்ந்து கரை சேர்ந்த இதயமது
இத்தனைக்கும் உதாரணமாய், இயல்பான மென்பொருளாய்
மொத்தமாக வடிவெடுத்துக் குடும்பத்தில் கடைசிப்
புதல்வனாய் பிறப் பெடுத்து, சிறப்பு
முதல்வனாய் வாழ்ந்த அன்பு நண்பரே
இதமான சொல்லெடுத்து போற்றுகிறோம் பாமாலை
பதமான பூக்களினால் சாத்துகிறோம் பூமாலை

- நிறைவு -

# அமரர் பி.வி. கந்தையா வாழ்க்கை நிகழ்வுத் தொகுப்பு



தான் சார்ந்த சமூகமோ தான் வாழ்ந்த குடும்பமோ, தான் நடந்து வந்த தேசமோ. தான் வார்த்ததொரு படைப்போ- இவைகளில் ஏதாவதொன்றையோ அதற்கு மேலாகவோ, மிகச்சரியாகவும் உன்னதமாகவும், சிறப்பாகவும், முத்திரை பதித்து விட்டுச் செல்பவர்க்கு மரணமில்லை. இருப்பவர்கள் - அப்படியாக, பதிவுபெற்றுச் சென்றவர்களின் இலட்சியங்களை வாழவைக்க தங்களின் புதிய நடையில் முன்னெடுத்துச் செல்ல முயற்சிகள் செய்வார்கள். இது நியதி. சில விடயங்களை மறந்துவிடலாம். ஆனால் மறுத்துவிட முடியாது.

இனிவரும் இலகுமிகு கணனியுலகில் ஆவணங்களெல்லாம் அழகிய உடன்பாடுகளாக வாழ்ந்து வரும்! **தி.இரா.கோ.**